

கல்கி
இந்த இதழில்:
ஹர ஹர
சங்கரா
இலங்கையில் 35 சதம்
தபால் செலவு தனி
KALKI
7-8-1966
35 காசு



டினோபால் வெண்மை பளிச்சிடச் செய்வதில் இணையற்றது.

துவைத்த துணிகளைக் கடைசியாக அலசுவதற்கு முன், தண்ணீரில் சிறிதளவு டினோபால் சேர்த்துப் பாருங்கள், உங்கள் வெள்ளைத் துணிகளெல்லாம் எப்படி மேலும் வெண்மை பளிச்சிடுகின்றன! சட்டைகள், புடவைகள், டவல்கள், விரிப்புகள் எல்லாம் எப்படி அதிகரித்த வெண்மை துலங்க விளங்குகின்றன!

இந்த அதிகரித்த வெண்மைக்கு ஆகும் செலவுதான் என்ன? துணி ஒன்றுக்கு ஒரு பைசாவுக்கும் குறைவுதான்! கால் தேக்கரண்டி அளவு டினோபால் ஒரு வாளித் துணிகளை வெண்மை பளிச்சிடச் செய்கிறது.

விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட டினோபாலை எப்பொழுதும் உபயோகியுங்கள். அதனால் துணிகளுக்கு ஒருவிதமான கெடுதலும் ஏற்படுவதில்லை.



டினோபால் இப்பொழுது ஸீல் செய்யப்பட்ட அலுமினிய ரேக்குப் பேக்கெட்டுகளிலும் கிடைக்கிறது. ஒரு பேக்கெட் டினோபால் ஒரு வாளித் துணிகளை வெண்மை பளிச்சிடச் செய்கிறது— சிறிதும் வீணாவதில்லை, உபயோகிக்கச் சுலபமானது, தொந்தரவற்றது.

டினோபால், ஜே.ஆர்.கெய்கி, எஸ் ஏ.பாஸ்., ஸ்விட்ஸர்லாந்து அவர்களின் பதிவுபெற்ற வியாபாரச் சின்னமாகும்.
சுஹ்ரித் கெய்கி லிட், த.பெ. 965, பம்பாய் 1 பிஆர்.

Shilpi SG 223 A Tam

கல்கி

பொருளடக்கம்

வெள்ளி விழா விசேஷ இதழ்

பராபவ, 22 ஆகஸ்ட் 7


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

நினைவுத் திரையில்....


புத்தம் புதுமலர்கள் பூக்குமே
வண்டினங்கள்
சித்தம் மகிழ்ந்துண்ணச்
சேருமே...நித்தமும்
பல்கி வளரும் பசுந்தமிழ்ச்
சோலையாம்
கல்கி படர்ந்து வருங்கால்

-தேசிகவிநாயகம் பிள்ளை

கல்கி, ஆகஸ்டு 1, 1941


ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்
காஞ்சி காமகோடி பீடம்
ஆசியுரை
வெள்ளி முளைத்தது என்று சொல்லு
வார்கள். அதிலிருந்தே மேலும்
மேலும் ஆகாச வீதியில் பிரகாசமும்
பறவைகளின் இன்சொல்லும்
இன்னிசையும் கன்றுகளின் துள்ளலும்
பசுக்களின் பால் சுரத்தலும் பொங்கு
வதேபோல், கல்கியின் நினைவை
அமரத்துவம் பெறச் செய்து
விளங்கும் இப்பத்திரிகை
நிறுவனமும், மக்கள்
கண்களிலும் செவிகளிலும்
உள்ளங்களிலும் உதய
ராகமாம் பூபாளம் போல்
தீந்தமிழைச் சுரந்து
கொண்டிருக்கக்கடவது!

மறைந்த கல்கியும் வளர்ந்த கல்கியும்



இந்தக் காலத்தில் தமிழ் எப்படி எழுத வேண்டும், எப்படி எழுதினால் பயன்பெறும் என்பதை நன்றாக உணர்ந்தவரும் அந்தப்படி எழுதிக் காட்டியவருமான ஒருவர் நம்மிடை இருந்து எதிர்பாராதபடி அகாலத்தில் மறைந்துவிட்டார். அவர்தான் கல்கி என்ற பெயரைப் பூண்ட கிருஷ்ணமூர்த்தி. அவர் தைரியமாக ஆரம்பித்த 'கல்கி' பத்திரிகை 25 ஆண்டுகள் பூர்த்தியாகி 26-ம் ஆண்டு புகும் சுப முகூர்த்தம் இது. அந்த முகூர்த்தத்தில் பத்திரிகைக்கும், பத்திரிகை நடத்துகிறவர்களுக்கும், பத்திரிகைக்கு விஷயதானம் செய்பவர்களுக்கும் சித்திரப் பணியாளர்கள், அச்சிடுபவர்கள், தைத்து முடிக்கிறவர்கள் அனைவருக்கும் என் ஆசீர்வாதம்.


எல்லோரும் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இப்போதும் பத்திரிகை ஆபீசில் இருந்து எல்லாம் மேல் பார்த்து வருவதாகவே எண்ணி ஊக்கத்துடனும், விவேகத்துடனும், தெய்வபக்தியுடனும் வேலை நடத்த வேண்டும் என்று ஆசீர்வதித்துக் கோருகிறேன். நல்ல பத்திரிகைகளுக்கு நாட்டுப் பணி நிறையக் காத்திருக்கிறது. படிப்புக்குப் பள்ளிக்கூடங்கள் எத்தனை இருந்தாலும் போதாது. நல்ல பத்திரிகைகள் மக்களின் அறிவுப் பெருக்கத்துக்கு மிக அவசியம். பத்திரிகைகள் காடு மாதிரி வளரலாம். பல பேர்களுக்கு வேலை தரலாம். ஆனால் மக்களின் சீலத்தைக் காக்கும் பத்திரிகைகள் வேண்டும்.

படிக்கத் தெரிவது மிக உயர்ந்த சாதனம். படிக்கும் விஷயம் நல்ல விஷயமாக இருக்க வேண்டும். இல்லாமற் போனால் அந்தச் சாதனமே விஷம் போலாகிவிடும்.

கல்கி கிருஷ்ணமூர்த்தி சிறுகதைகள் எழுதினார். நெடுங்கதைகள் எழுதினார். நாட்டின் பழைய சரித்திரத்தை நெடுங்கதையில் புகுத்தி நாட்டுப் பக்தியும், கலை பக்தியும், தெய்வ பக்தியும் வளரச் செய்தார். இந்தப் பணிகளையெல்லாம் தெய்வப் பிரசாதத்துடன் எல்லாரும் வியந்து ருசிக்கும்படி ஆற்றினார். சங்கீதத்தின் ரகசியத்தை அறிந்து அனுபவித்து விமரிசனம் செய்து விளக்கியும் வந்தார். அவர் நினைவு என்றென்றைக்கும் தமிழ் நாட்டில் மக்களின் ஊக்கத்தைப் பெருக்கும் வேகமாக விளங்கும். அவருடைய அறிவும், சாமர்த்தியமும், தைரியமும், சுத்தமும் அவருடைய உடலுடன் மறைந்து போகவில்லை. தமிழ் மக்களில் பலர் அவரைப் போல் எல்லா விதத்திலும் சிறந்து விளங்கிப் பணியாற்றுவார்கள், ஆண்டவன் அருளைப் பெற்றால்.

கல்கி கிருஷ்ணமூர்த்தியின் தேகம் மறைந்துவிட்ட போதிலும் ஆன்மா கல்கி பத்திரிகையில் வேலை செய்து வருகிறது. அது இன்று 25 வயது வாலிப எழிலுடன் பிரகாசிக்கிறது.

ராஜாஜி



நகைச்சுவை யின்பமூட்டும் நயமிகும் சொல்லின் செல்வன்
பகைக்குண மில்லாப் பண்பன் பகுத்தறி வுயர்ந்த மேதை
புகைப்படம் எடுத்தாற்போலப் பொருள்களை விளக்க வல்லத்
தகை பெறும் கிருஷ்ணமூர்த்தி தந்தநற் கல்கி வாழ்க.

— நாமக்கல் கவிஞர்

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 ● இதழ் 1



அஞ்சலி!

கல்கியின் சரித்திரத்தில் இன்று ஒரு நன்னாள். 'இருபத்தைந்து வயது வாலிப எழிலுடன் பிரகாசிக்கிறது' என்று தலைவர் ராஜாஜி கூறுவது போல் வெள்ளி விழாக் கொண்டாடிப் பொலிகிறது கல்கி.

இந்தப் பொன்னாளில் இடையூறுகளையெல்லாம் கடந்து சக்தியுடன் இப் பத்திரிகை பணியாற்ற அருள் புரிந்து வரும் விநாயகப் பெருமானை வணங்குகிறேன். இனியும் இதே போல் கல்கி வளர்ச்சி பெற்று நாட்டுக்கு நற்பணி புரிய கணநாதனின் கருணையைப் பிரார்த்திக்கிறேன்.

நடமாடும் தெய்வமாக விளங்கும் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகளுக்கு இன்று என் அஞ்சலிகளை அளிக்கிறேன். மக்களின் நிரந்தரமான ஆன்ம நலன்களுக்குக் கல்கி தன்னாலியன்ற தொண்டுகளைத் தொடர்ந்து செய்வதற்கு ஆசாரிய சுவாமிகளின் ஆசியை அவர்களது திருவடிகளில் விழுந்து வேண்டுகிறேன்.

கடந்த நாற்பதாண்டுகளாக எனக்குத் தாயும் தந்தையும் குருவும் தெய்வமுமாக விளங்கிக் காத்து வருபவரும், கல்கிப் பத்திரிகையைத் தொடங்கிய நாளாக இதற்கு வழிகாட்டியாக இருந்து வாழ்வித்து வருபவருமான ராஜாஜியின் பாதத்தில் என் சிரத்தைச் சாய்த்து நமஸ்கரிக்கின்றேன்.

கல்கியின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணம் வாசகர்களாகிய உங்களது அன்புதான். உங்களுடைய சொந்தப் பத்திரிகையாகவே கல்கியைக் கருதி ஆதரித்து வந்திருக்கிறீர்கள். இந்த அன்புக்கும், ஆதரவுக்கும் நான் எவ்விதத்தில் கைம்மாறு செய்ய முடியும்? உங்கள் கல்கி இன்று அமோகமாக வெள்ளி விழாக் கொண்டாடுவதே நீங்கள் காட்டி வரும் அன்புக்குப் பிரதி எனலாம். இச்சந்தர்ப்பத்தில் என் இதயபூர்வமான நன்றியை உங்கள் அனைவருக்கும் தந்து வணங்குகிறேன்.

கல்கிப் பத்திரிகைக்கு விஷய தானம் செய்து, கௌரவத்துக்கும் கண்ணியத்துக்கும் பெயர் பெற்ற பத்திரிகையாக இதனைச் சிறப்புறச் செய்துள்ள எழுத்தாளர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும் ஓவியக் கலைஞர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றியை அளித்து நமஸ்கரிக்கிறேன். இனியும் இதே போல் இப்பத்திரிகையைப் பேணி உதவ வேண்டும் என்று எழுத்தாளர் உலகையும் ஓவியர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரிகையின் ஜீவநாடிகளில் முக்கியமான ஒன்று விளம்பரம். இந்த ஜீவநாடியில் என்றும் புது ரத்தம் பாய்ந்து கல்கிப் பத்திரிகை ஆரோக்கியத்துடன் வாழ உதவி வரும் தொழில் துறையினருக்கும், மற்ற விளம்பரதாரர்களுக்கும் என் அந்தரங்கமான அன்பையும் நன்றியையும் தெரிவிக்கிறேன். கல்கிப் பத்திரிகையின் வளர்ச்சியில் அக்கறை காட்டிப் பல விதங்களில் உதவி புரிந்து வரும் நண்பர் குழாம் முழுவதற்கும் இன்று என் மனம் கனிந்த அன்பை அளிக்கிறேன்.

கல்கியின் செலாவணியில் பிரத்தியேகமான ஈடுபாடு கொண்டு நற்பணி செய்து வரும் ஏஜெண்ட்கள் அனைவருக்கும் இந்நன்னாளில் நன்றி கூறி வாழ்த்துகிறேன்.

கல்கிப் பத்திரிகை உருவாவதற்குச் சகல விதங்களிலும் உதவி புரிந்து வரும் காரியாலய ஊழியர்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவிக்கவும் வெள்ளி விழாவினை ஒரு வாய்ப்பாகக் கருதுகிறேன். ஆசிரியர் குழு, ஓவியர் குழு, நிர்வாக இலாகா, விளம்பரப் பிரிவு, செலாவணிப் பிரிவு, கணக்கர் இலாகா, ஏஜென்ஸிப் பிரிவு, சந்தாப் பிரிவு, இவற்றைச் சேர்ந்தவர்

களுக்கும், அச்சுக் கோப்பது, 'பிராஸஸ்' செய்வது, 'பிளாக்' செய்வது, இயந்திரத்திலேற்றி அச்சடிப்பது, 'பைண்ட்' செய்வது, பார்சல் செய்வது முதலிய பணிகளைத் திறம்பட ஆற்றி வரும் அன்புக்குரிய தொழிலாளர் அனைவருக்கும், டெலிபோன் ஆப்பரேடர்களுக்கும், நமது விருந்தினருக்கு உபசரணைகள் புரியும் உணவுப் பணியாளர்களுக்கும், கல்கி பூங்காவை அழகுற வளர்த்து வரும் ஊழியர்களுக்கும், கார் டிரைவர்களுக்கும், கூர்க்கா காவலர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

ஃ ஃ ஃ

கண்ணுக்குத் தெரியாவிடினும் கருத்தில் நின்று தோன்றாத் துணையாக வழிகாட்டி வரும் இரு பெரியோர்களை இன்று மனமார நினைந்து அஞ்சலி செய்கிறேன்.

ஒருவர் என் அருமைத் தோழரும், இப் பத்திரிகையின் தாயும், இதற்குப் பெயர் தந்தவருமான பேராசிரியர் கல்கி ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். மற்றவர் தமிழ் முனிவராகிய ரசிகமணி ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்.

'கல்கி' அவர்கள் கல்கிப் பத்திரிகைக்காக ஆற்றிய அரும் பணிகளை யாரே அளவிட்டுச் சொல்ல முடியும்? பத்திரிகை தொடங்கியதிலிருந்து 13 ஆண்டுகள் இதன் மதிப்புக்குரிய ஆசிரியராகத் திகழ்ந்து இலக்கியத்தின் சகல துறைகளிலும் தன்னிகரின்றிப் பணியாற்றிப் பத்திரிகையை மகோன்னதமான நிலைக்குக் கொண்டு வந்த அந்தப் பெருமகனின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துகிறேன். கல்கிப் பத்திரிகை தொடங்குவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே நானும் அவரும் தோளோடு தோள் சேர்ந்து உழைத்திருக்கிறோம். எங்களுடைய இளம் பிராயத்தில் இருவருமாகத் தேச விடுதலைப் பணியில் ஒரு சிறிய பங்கை ஏற்றுப் பிரசாரம் செய்து வந்ததும், பாரதியாரின் தேசபக்திக் கனல் தெறிக்கும் பாடல்களை மாற்றி மாற்றி மேடைகளில் பாடியதும், ஒன்றாகவே பல முறை சிறை புகுந்து சிறையிலும் சிநேகத்தை வளர்த்துக் கொண்டதும், இன்று ஓர் அமுத நினைவாக மனத்தில் தோன்றுகிறது. அதன் பின் இருவருமாக இந்தப் பத்திரிகையைத் தொடங்கினோம். நிர்வாகப் பொறுப்பை நான் ஏற்குமாறு செய்து ஆசிரியர் பதவியை அவர் ஏற்றார். அரசியல், சரித்திர நவீனம், சமூக நவீனம், சிறுகதை, ஹாஸ்ய இலக்கியம், பிரயாணக் கட்டுரை, கலை விமரிசனம் இப்படியாகப் பத்திரிகையின் எல்லா அம்சங்களிலும் தம் இணையற்ற மேதா விலாசத்தைக் காட்டிக் கல்கி ஏட்டுக்கு நாட்டில் பெரு மதிப்பை ஏற்படுத்தித் தந்தார். முப்பதாண்டுகள் என்னுடன் இணைபிரியாதிருந்த நண்பர் 'கல்கி' கடைசியில் எனக்கு மிக மிக முந்திக் கொண்டு இறைவனடி சேர்ந்துவிட்டார். ஆயினும் அவரது ஆன்ம சக்தி இப் பத்திரிகையை விட்டு மறையவில்லை என்பதற்குக் கடந்த பன்னிரண்டாண்டுகளில் கல்கி கண்டுள்ள வளர்ச்சியே சான்று.

வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் கலந்து கொண்டு, தாம் விட்டுச் சென்ற பணி இன்னும் சிறப்பாக நடப்பதில் பூரித்து ஆசி கூறுவதாகவே கருதுகிறேன். அதிலேயே மன நிறைவு பெற முயல்கிறேன்.

கலைகளில் கௌரவம் என்பது இலக்கணம் கூற முடியாத ஓர் அம்சம். பண்பாளரான சான்றோர்களாலேயே பத்திரிகைக்குக் கௌரவம் அளிக்க முடியும். கல்கியின் கௌரவத்துக்கு ஆதார ஊற்று ராஜாஜி அவர்கள் என்று எண்ணும் போதே, அவருடன் கைகோத்துக் கொண்டு ரஸிகமணி டி.கே.சி. அவர்களும் காட்சி தருவார்கள். ஆகா! இந்தப் பத்திரிகையிடம் டி. கே. சி. காட்டிய அன்பை என்ன சொல்லிப் பணிவேன்? இதற்கு அவர் புகட்டிய பண்பை என்ன சொல்லிப் பாராட்டுவேன்? வெள்ளிவிழாவின்போது வானுலகிலிருந்து அவரும் நம்மை நோக்கி மகிழ்வார்; தாம் வளர்த்த செடி பூத்துக் குலுங்குவது கண்டு ஆனந்தப்படுவார். அந்தப் பூக்களையே அவரது பாதத்தில் இட்டு வணக்கம் தெரிவிக்கிறேன்.

'கல்கி' அவர்களும், டி. கே. சி. அவர்களும் மறைந்தாலும் அவர்களது வழி செல்லும் எழுத்துலக மணிகள் இப்பத்திரிகையை உயிரூட்டி வளர்த்து வருகின்றனர். கல்கி மறைந்தபின் சில காலம், இவர்களில் ஒருவரான திரு சோமு அவர்கள் ஆசிரியராக இருந்து நற்பணி புரிந்தார். அவருக்கும் இச்சமயத்தில் என் நன்றியறிதலை அளிக்கிறேன்.

கல்கி அவர்களுடைய அருமைக் குமாரி ஆனந்தியும் தந்தை மறைந்தவுடன் இந்த ஏட்டினை அந்தரங்க பக்தியுடன் கவனித்துக் கொண்டாள். இன்று கல்கியின் குமாரனாகிய செல்வன் கி. ராஜேந்திரன் கல்கியை ஒரு குல தனமாகக் கருதி, பத்திரிகையின் வளர்ச்சியில் ஆத்மார்த்தமான ஈடுபாட்டுடன் எனக்குப் பேருதவி புரிந்து வருவதை நான் பெருமகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன்.

ஃ ஃ ஃ

கல்கிப் பத்திரிகை பிறந்ததிலிருந்து இன்று வரையுள்ள இருபத்தைந்தாண்டுச் சம்பவங்களும் நினைவுத் திரையில் ஓடுகின்றன.

தியாகையரின் அமுத கீதம் பிறந்த திருவையாற்றில்தான் கலைத் தெய்வத்தின் அருமைப் பெண்ணாகிய இக்கல்கிப் பத்திரிகையைத் தொடங்கும் எண்ணம் உருவாகியது. 1941-ம் ஆண்டுத் தொடக்கத்தில் நடைபெற்ற தியாகப் பிரம்ம ஆராதனை விழாவில் நண்பர் கல்கியும் நானும் கலந்து கொண்டோம். அவர் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை புகுவதாகவும், சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் அவரும் நானும் சேர்ந்து சொந்தப் பத்திரிகை தொடங்குவதாகவும் முடிவு செய்து கொண்டோம். நண்பர் சிறை புகுந்தார். நான் கல்கிப் பத்திரிகை தொடங்குவதற்காக முதல் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன்.

நான் ஈடுபட்டேன் என்று சொல்வதை விட என் மனைவி சுப்புலக்ஷ்மி ஈடுபட்டாள் என்று சொல்வதே அதிகப் பொருத்தமாக இருக்கும். ஏனெனில், கல்கிப் பத்திரிகை தொடங்க மூலதனம் வேண்டும் என்பதற்காகவே அவள் 'சாவித்திரி' திரைப்படத்தில் நாரதர் பாகமேற்க முன்வந்தாள். தியாகப் பிரம்மம், நாரதர் ஆகிய நாதயோகிகளின் சம்பந்தத்துடன் இப்பத்திரிகை பிறந்திருப்பது பெருமைக்குரிய விஷயமன்றோ? கல்கத்தாவில் படப் பிடிப்பு நடந்து வந்தது. நண்பர் அவர்களோ திருச்சிச் சிறைச்சாலையில் இருந்து வந்தார். தேசத்தில் சுதந்திரப் போராட்டம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அதோடு உலக மகாயுத்தத்தின் பயங்கரங்களும் நிழலாடின. இந்த இக்கட்டான நிலைமையில் அதிதீவிர தேசிய வாரப் பத்திரிகை தொடங்கும் சாகச முயற்சியில் ஈடுபட்டது சொந்தத் தைரியத்தில் அல்ல என்றும், விநாயகப் பெருமானின் அருளே இதற்குக் காரணம் என்றும் தோன்றுகிறது. தலைவர் ராஜாஜியும்கூடப் பத்திரிகையைத் தொடங்கி நாங்கள் சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ளப் போகிறோமே, என்று விசாரம் கொண்டு, இந்த யோசனையைக் கைவிடச் சொன்னார். ஆயினும் அவரது ஆத்ம பலத்தையே நம்பி நாங்கள் முழுமூச்சுடன் இப்பணியில் ஈடுபட்டோம். பத்திரிகை தொடங்குவது நிச்சயம் என்றாகி, கல்கி அவர்களும் சிறையிலிருந்து வெளிவந்த பின்னர், தலைவர் ராஜாஜி தமது மனமார்ந்த ஆசிகளைத் தந்து இந்த ஏட்டினைத் தரும யுத்தங்களின் குருக்ஷேத்திரமாகக் கொள்ளவும் கருணை கூர்ந்தார்.

பத்திரிகையின் மூலதனம் ராஜாஜியின் ஆசியும், எம். எஸ். சுப்புலக்ஷ்மி கொடுத்த நிதியும் மட்டுமல்ல. பாலிய நாட்களிலிருந்து கல்கி அவர்களுடன் நட்புக் கொண்டிருந்தவரும், எங்கள் இருவரின் அருமை சிநேகிதருமான மாயவரம் திரு ஆர். கே. சுப்பிரமணியப்பிள்ளை அவர்களும் உள்ளமுவந்து எங்களுக்கு உதவி புரிந்தார். இன்றளவும் பத்திரிகையின் பேரபிமானியாக விளங்கி வரும் அவரை வெள்ளி விழாவின் போது மனம் குளிர்ந்து நினைந்து வணங்கி நன்றி செலுத்துகிறேன்.

பத்திரிகை தொடங்கியபின் கல்கி பெற்ற வளர்ச்சியைப் பற்றி நானே சொல்லிக் கொள்வதற்குக் கூச்சமாகக்கூட இருக்கிறது. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்று வள்ளுவர்பெருமான் கூறியது இந்தக் கல்கிக்காகத்தானோ என்று கூறும்படியாக, கருதி சேர்த்துக் கொள்ளும் போதே களை கட்டி விட்டது. அறிவையும், அழகையும் தயங்காமல் ரசித்து மகிழும் தமிழ்கூறும் நல்லுலகம் கல்கியைத் தனது சொத்தாக ஸ்வீகரித்துக் கொண்டு விட்டது.

இதற்குக் காரணம், மக்களின் மாண்பை மதிப்பது கல்கியின் மதம் என்பதேயாகும். 'மக்கள் விரும்பும் விஷயத்தைத் தருவதா? மக்களுக்கு நன்மை பயக்கும் விஷயத்தைத் தருவதா?' என்று சிலர் கேட்கும் கேள்வி கல்கிக்குத் தெரியாது. 'நல்லது வேறு, ரஞ்சகமானது வேறு அல்ல. நல்லதையே தான் மக்கள் விரும்புவார்கள். நல்ல விஷயங்களை மக்கள் விரும்பும் முறையில் சொல்ல முடியும்' என்ற நம்பிக்கையின் மீதே கல்கி நடத்தப்படுகிறது. கல்கி பெறுகிற ஆதரவுக்கு அடிப்படையும் இதுவே.

கல்கியைத் தொடங்கும்போது சில நல்ல விஷயங்களை மக்களுக்குத் தெரிவித்து, அவர்களின் ஈடுபாட்டை அவ்விஷயங்களில் பெறுவது அவசியமாயிருந்தது. இவற்றில் தலையானது தமிழ்ப் பணி. 'தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா' என்ற அமரகவியின் அமுத வாக்கை நாம் லட்சிய வாசகமாகக் கொண்டிருப்பதே இதனை உணர்த்தும். இன்றைய சூழ்நிலையில் நம்முடைய தாய்மொழியாகிய தமிழுக்காகக் கட்சி பேசுவதென்பது விந்தையான விஷயமாக இருக்கும். எனினும், இருபத்தைந்தாண்டுகளுக்கு முந்தைய நிலைமை வேறு. தமிழர்களே தமிழின் பெருமையை உய்த்துணரச் செய்ய வேண்டிய பெரும் பணி அன்றிருந்தது. இதில் கல்கிப் பத்திரிகை ஆற்றிய தொண்டைக் குறித்துப் பெருமிதமடைவது நியாயம். தேச விடுதலைப் போராட்டத்துக்குச் சமமாகத் தமிழ் வளர்ச்சிக்கும் இடம் தந்தது கல்கி. முக்கியமாகத் தமிழிசைக்காக இப்பத்திரிகை புரிந்துள்ள பணி தமிழிசை வரலாற்றிலேயே முக்கியத்துவம் பெற்றதாகும். தமிழிசை இயக்கத்தின் தனிப் பெருந் தலைவராக விளங்கிய காலஞ்சென்ற ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கும் கல்கிக்குமிடையே நிலவிய உள்ளார்ந்த அன்பையும் இன்று நினைவு கொள்கிறேன்.

தமிழ்ப் பெரியார்களைக் கௌரவிப்பதில் கல்கி என்றுமே முன்னணியில் நின்றிருக்கிறது. எட்டயபுரத்தில் மகாகவி பாரதிக்கு நினைவு மண்டபம் எழுப்புவதற்குக் கல்கியே மூல காரணம். திரு வி. க. மணிமண்டபம் எழுப்புவதற்கும், நாமக்கல் கவிஞர், வ. ரா. ஆகிய தமிழறிஞர்களுக்கு நிதியம் சேகரித்துத் தருவதிலும் இப்பத்திரிகை தலையாய தொண்டு புரிந்துள்ளது.

பாரத தேச பிதாவாகிய காந்திமகானுக்குக் கிண்டியில் மண்டபம் எழுப்பும் திருப்பணியிலும் பெரும் பங்கு கொள்ளும் பேறு கல்கிக்குக் கிடைத்ததை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

சர்ச்சைகளைக் கண்டு ஒருபோதும் அஞ்சாமல், 'நாட்டு நலனுக்கு உகந்தது' என்று நாம் கருதுகிற இனங்களில் அயராமல் ஈடுபடுவதே கல்கியின் வாழ்க்கைத் தத்துவம். காற்றுப் போக்குப்படி செல்லும் சந்தர்ப்பவாதங்களை விட்டு, நமக்குச் சத்தியமாகத் தெரிகின்ற கொள்கைகளுக்காகப் பலாபலன்களையும் கருதாமல் போராடும் பான்மையைக் கல்கிக்குக் கலைவாணி அருளியிருக்கிறாள் என்றே கூற வேண்டும்.

கல்கிப் பத்திரிகை தொடங்கிச் சில மாதங்களுக்குப் பின், உலக யுத்தத்தினால் பிரிட்டிஷ் சர்க்கார் பாதிக்கப்பட்டிருக்கும் போது இந்தியர்கள் ஒத்துழையாமை செய்தால் நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுவிடலாம் என்று காங்கிரஸ் மகாசபை கருதியது. இதற்கு எதிராகத் தமது மனச்சாட்சியின் குரலை எழுப்பினார் சத்தியத்தின் மூர்த்தியாகிய ராஜாஜி. காங்கிரஸும் முஸ்லிம் லீகும் சமரஸம் காணாத வரையில் வெள்ளையர்கள் வெளியேறினால் மட்டும் பயனிராது என்றும், அதன்பின் இந்து முஸ்லிம் துவேஷத்தால் இரத்த ஆறு பெருகக் கூடும் என்றும் எச்சரித்தார். எனவே, பாகிஸ்தான் கோரிக்கையில் சமரஸம் காண விழைந்தார். துர்ப்பாக்கியவசமாக அவரது தீர்க்க தரிசன வாக்கு எடுபடவில்லை. எனவே, காங்கிரஸ் ஸ்தாபனத்தை விட்டே அவர் வெளியேற நேர்ந்தது. இதையொட்டி நாட்டில் ஒரு கலக்கம் ஏற்பட்டது. ஆனால் கல்கிப் பத்திரிகை கலங்கவில்லை. ராஜாஜி கூறும் அனைத்தையும் உளமார ஏற்கும் பாக்கியம் நமக்கு இருந்தபடியால் நாம் கலங்கவில்லை. மாறாக முன்னிலும் தெம்பு பெற்றோம். கல்கிக்கு உபாங்கமாக ஒரு 'துணைக் கல்கி'யும் தொடங்கினோம். ராஜாஜியை மீளவும் காங்கிரஸின் தலைமைப் பீடமே வாழ்த்தி வரவேற்கும் சூழ்நிலை தோன்றிய பின் 'துணைக் கல்கி'யும் நின்றது.

* * *

மாதமிருமுறைப் பத்திரிகையாகத் தொடங்கி, மாதம் மும்முறையாகி, வாராந்திரப் பத்திரிகையுமாயிற்று கல்கி. தமிழ் இலக்கியத்திலேயே முதல் சரித்திர நவீனமாகிய கல்கியின் 'பார்த்திபன் கனவு', டி. கே. சி.யின் 'கம்பர் தரும் காட்சி' முதலிய அற்புத சிருஷ்டிகளில் தொடங்கி இன்றளவும் பேரிலக்கியம் படைத்து வருகிறது. முக்கியமாக, ராஜாஜி தமது வாழ்நாளில் செய்துள்ள தொண்டுகளில் தலைசிறந்தனவாகக் கருதும் 'வியாசர் விருந்து', 'சக்கரவர்த்தித் திருமகன்' ஆகிய இரண்டு ஆன்மிகச் செல்வங்களையும் வெளியிடும் பெருமை 'கல்கி'க்கே கிடைத்தது. ராஜாஜியின் 'சக்கரவர்த்தித் திருமகன்', கல்கியின் 'அலை ஓசை', திரு சோமுவின் 'அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்', திரு அகிலனின் 'வேங்கையின் மைந்தன்' ஆகிய கல்கித் தொடர்கள் சாகித்திய அகாதமிப் பரிசையும் பெற்றவை என்பதே, இலக்கிய கௌரவத்தில் கல்கி பெற்றுள்ள விசேஷமான அந்தஸ்துக்குச் சான்றாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 'நியூயார்க் ஹெரால்ட் டிரிப்யூன்' நடத்திய அகில உலகச் சிறுகதைப் போட்டியில் தமிழ்க் கதைகளைத் தேர்வு செய்வதில் கல்கிக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதன்பின் அகில உலகப் பரிசுகள் பெற்ற பல நாட்டுக் கதைகளையும் பிரசுரித்து இலக்கியப் பாலமாகப் பணி புரிந்தோம். ரவீந்திரநாத டாகுர், பிரேம்சந்த், சுதர்சன் முதலிய பெருமக்களின் வடநாட்டு மொழிக் கதைகள் பலவற்றைத் தொடராக வெளியிட்டுக் கலை ஒற்றுமைக்கு வழிகோலிய பெருமையும் 'கல்கி'க்கு உண்டு. ஆன்மிகத் தொடர்களுக்கு இடமளித்து வெற்றி கண்டுள்ள பாக்கியமும் கல்கிக்கு உரியது. ராமாயணம், மகாபாரதம், பாகவதம், கந்த புராணம், சங்கர விஜயம் முதலிய இதிகாச புராணங்களையும் மகாத்மா காந்தி, ராமகிருஷ்ணர், விவேகானந்தர் முதலிய மகான்களின் சரிதங்களையும் தொடர்களாக வழங்கிய கல்கி பெரிய புராணத்தையும் கடந்த சில மாதங்களாக அளித்து வருகிறது. இந்த ஆகஸ்ட் ஏழாம் தேதி இதழிலிருந்து நம்மிடையே வாழும் மகாபுருஷராகிய காமகோடி பீடாதிபதிகளின் புண்ணிய சரித்திரத்தை 'ஹர ஹர சங்கர' என்ற தொடராக வெளியிடுகிறோம்.

கல்கிக்குத் தொடர்ந்து விஷயதானம் செய்துள்ள சான்றோர்களில் தமிழிலக்கியத்தின் மணம் பரப்பிய திரு ரா. பி. சேதுப்பிள்ளையவர்களையும், திருக்கோயில்களை எழுத்தில் வடித்துத் தந்த திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். அமரர்களாகி விட்ட அவர்கள் இருவருக்கும் இன்று எனது அன்பு நிறைந்த நினைவு அஞ்சலிகளை அளிக்கிறேன்.

விஷய ஞானமூட்டுவதில் கல்கி எடுத்துக்கொண்டுள்ள அக்கறையும் குறிப்பிடத்தக்கது. அந்நியக் கடன்கள், நில உச்சவரம்பு, ஆட்சி மொழித் திட்டம் இவற்றில் நாம் நடத்திய கருத்தரங்கில் தேசத்தின் பேரறிஞர்கள் யாவரும் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கிறார்கள்.

கலைக்காக நாம் செய்யப் புகுந்ததைச் சொன்னால் அது ஒரு பாரதமாகவே விரியும். 'கர்நாடகம்' என்ற பெயரில் கல்கி அவர்கள் செய்த அற்புதக் கலை விமரிசனத்தை இன்றும் நாம் தொடர்ந்து செய்கிறோம். அஜந்தாவையும் எல்லோராவையும் மாமல்லபுரத்தையும் தமிழ் பேசும் ஒவ்வொரு வீட்டிலும் எதிரொலிக்குமாறு செய்த பேறு கல்கிப் பத்திரிகைக்கே உரியது. சினிமாப் படங்களுக்கு எத்தனை அடி வேண்டும், சினிமா சங்கீதத்தின் தரத்தை எப்படி உயர்த்துவது என்பது போன்ற பல ருசிகரமான அம்சங்களை விவாதித்து, மக்களின் பொழுதுபோக்கிலும் அடர்ந்த ஈடுபாடு காட்டியிருப்பது கல்கி.

நகைச்சுவை என்ற நளினமான ரசத்தைக் கோமாளித்தனமாக்கி விடாமல், கௌரவமாகக் கையாளுவதில் கல்கிப் பத்திரிகைக்குத் தனி இடமுண்டு.

பல இலக்கியப் போட்டிகள் நடத்தித் தமிழன்னைக்கு அணிகலன்களைப் பூட்டியுள்ளது கல்கி. இவற்றில் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி, மாதச் சிறுகதைப் போட்டி, மாவட்டச் சிறுகதைப் போட்டி ஆகியவற்

றைக் குறிப்பிடவேண்டும். இப்போட்டிகளுக்கெல்லாம் சிகரம் போல் இப்போது வெள்ளி விழாவை யொட்டி நாவல் போட்டியும், சிறு கதைப் போட்டியும் வைத்துத் தமிழன்னைக்குக் கும்பாபிஷேகம் செய்கிறோம். கல்கிக்குப் பெருமை தந்த அற்புத இலக்கியப் படைப்புக்களோடு தற்போது நாவல் போட்டியில் முறையே முதல் மூன்று பரிசுகள் பெற்றுள்ள திரு உமாசந்திரனின் 'முள்ளும் மலரும்', திரு ர. சு. நல்லபெருமாளின் 'கல்லினுள் ஈரம்', திரு பி. வி. ஆரின் 'மணக்கோலம்' ஆகிய புதிய சிருஷ்டிகளும் இடம் பெறப் போகின்றன. கல்கி வாசகர்கள் அதிர்ஷ்டசாலிகள்தாம்!

'கல்கி' அவர்களின் மறைவுக்குப்பின், மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாத ஓர் அம்சத்துக்கு அதிகமாக அழுத்தம் தர அவசியம் ஏற்பட்டதாகக் கருதினேன். அது வரையில் தேச சுதந்திரத்திலும், புதிய சுதந்திர வாழ்விலுமே மக்களின் கவனத்தை ஒருமுகமாகக் குவித்துத் திரட்ட வேண்டிய அவசியம் இருந்தது. அந்நியர்கள் வெளியேறியபின் நமது ஆன்ம வாழ்வும் தானாகவே நிலைப்படும் என நம்பி வந்தோம். ஆனால் நாம் நம்பியது பூரணமாக நிறைவேறவில்லை. எனவே, மக்களை ஆன்மிகத்தில் ஈடுபடுத்தும் பொறுப்பைச் சற்று அதிகமாகவே 'கல்கி' எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. இறைவன் அருளால் இன்றளவும் கல்கி இத்துறையில் தன்னால் இயன்றதைச் செய்து வருகிறது.

ஆஸ்திகப் பணிகளுக்குக் 'கல்கி'யில் இடம் தருவதோடும், ஆன்மிக இலக்கியத்துக்கு ஒரு முக்கியமான ஸ்தானம் தருவதோடும் 1960-ம் ஆண்டில் கல்கிப் பூங்காவில் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீட்சிதரவர்களின் ராமாயண உபந்நியாஸத்தை நாற்பது நாட்கள் கோலாகலமாக நடத்தியதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த சில ஆண்டுகளில், தேசம் பெற்ற சுதந்திரம் மக்கள் பெற்ற சுதந்திரமாகவே மாற வேண்டிய அவசியம் அதிகரித்தது. தேச சுதந்திரம் ஏதோ ஒரு கட்சிக்கோ, குறிப்பிட்ட சில கோஷ்டிகளுக்கோ 'ஏக போக்கியம்' ஆகிவிடக்கூடிய நிலை நாளுக்கு நாள் வலுப்படலாயிற்று. மக்கள் சுதந்திரத்தைக் காக்கவே ராஜாஜி காங்கிரஸுக்கு எதிராகச் சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தார். என்றும் போல் இன்றும் கல்கி அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றியது. இன்று கல்கி தனது தலையாய பணிகளில் ஒன்றாகக் கருதுவது, தனிமனித சுதந்திரத்தைக் காத்து வளர்ப்பதேயாகும். ஆட்சியாளரை எதிர்க்க வேண்டிய இப்பணியிலும் 'கல்கி' தனது கௌரவத்தைக் காத்து வருகிறது. இதனால்தான் நமது பேரன்புக்குரிய ஜவாஹர்லால்ஜி, ''கல்கி, காங்கிரஸ் பத்திரிகை இல்லையானாலும் அதனிடம் எனக்குப் பெருமதிப்பு உண்டு'' என்று கூறினார்.

சுதந்திர இந்தியாவில் நாம் ஆற்ற வேண்டிய பணிகளை இன்னொரு விதத்திலும் விஸ்தரிக்கக் கூடிய பாக்கியம் 1959-ம் ஆண்டில் கிட்டிற்று. ஆங்கிலப் பத்திரிகை உலகின் ஜாம்பவானும், சுதந்திரப்போராட்ட மாவீரருமான காலஞ்சென்ற ஸ்ரீ காஸா சுப்பாராவ் அவர்கள் நடத்தி வந்த 'ஸ்வராஜ்யா' பத்திரிகையை நாமே எடுத்துக் கொண்டு ஸ்ரீ காஸா சுப்பாராவ் அவர்களையே ஆசிரியராகக் கொண்டு நடத்தத் தொடங்கினோம். இன்று 'ஸ்வராஜ்யா' பத்திரிகை, ராஜாஜி எழுப்பும் சத்தியத்தின் சங்கநாதத்தைப் பாரத நாடெங்கும் பரப்பிவருகிறது. அரசியல் அறிவிலும், எழுத்துத் திறனிலும், நட்புப் பான்மையிலும் தலைசிறந்து விளங்கிய காஸா அவர்கள் ஐந்து ஆண்டுகளுக்குமுன் நம்மிடமிருந்து மறைந்து விட்டார். என்றாலும் அவரது ஆன்ம சக்தி இன்றளவும் 'ஸ்வராஜ்யா' பத்திரிகையின் மூலம் பிரகாசித்து வருகிறது. 'கல்கி' வெள்ளிவிழாவின்போது அந்தப் பெருமகனையும் நினைந்து அஞ்சலி செலுத்துகிறேன்.

பழைய சம்பவங்களை எல்லாம் நினைத்துப் பார்த்துவிட்டு இன்றைய நிலையையும் கவனிக்கிறேன். பத்திரிகை உலகின் இன்றைய நிலை என்ன? காகிதத் தட்டுப்பாடு, இயந்திர இறக்குமதிக் கட்டுப்பாடு முதலியன சில வருடங்களாகப் பத்திரிகை உலகைப் பாதித்து வருகின்றன. இவை போதாவென்று தற்போது ரூபாயின் மதிப்புக் குறைப்பும் சேர்ந்திருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து தருவிக்க வேண்டிய பத்திரிகைக் காகிதத்துக்கும் மற்றும் பத்திரிகைக்கு வேண்டிய அந்நிய சாதனங்களுக்கும் புதிய நாணய விகிதத்தில் நாம் ஏற்க வேண்டிய செலவு ஏகத்தாறாகப் பெருகியுள்ளது. இந்தச் செலவைச் சரிக்கட்டும் நடவடிக்கைகளில் பிரபல ஆங்கில தினசரிப் பத்திரிகைகளுக்கு உள்ள அநுகூல நிலை பிரதேச மொழிச் சஞ்சிகைகளுக்குக் கிடையாது. சமாளிப்பதற்குச் சிரமமான ஒரு புதிய பிரச்னையின்முன் 'கல்கி' இன்று நிற்கிறது. விபத்துக் காலங்களிலெல்லாம் கைவிடாது காத்து வந்துள்ள விநாயகப் பெருமானின் அருளிலும் வாசகர்களின் ஆதரவிலும் எனக்குள்ள அசையாத நம்பிக்கையால் கல்கிப் பத்திரிகை இந்தப் புதிய இடுக்கண்களையும் வெற்றிகரமாகச் சமாளித்து நாள்தோறும் வளர்ந்து பொலியும் என்று திண்ணமாகக் கருதுகிறேன்.

இருபத்தைந்தாண்டுகளாக இலக்கியத்துக்கும், ஆன்மிகத்துக்கும், அரசியலுக்கும், சமூக வாழ்வுக்கும் பணியாற்றி வரும் கல்கி என்ற திருவிளக்கு கலைமகளின் சந்நிதானத்தில் அகண்டமாகப் பிரகாசிக்க உங்கள் ஒவ்வொருவரின் அன்பையும் கோருகிறேன்.

மகாகவி பாரதியின் திருவாக்குப்படி:

விளக்கி லேதிரி நன்கு சமைந்தது
மேவு வீர்இங்கு தீக்கொண்டு தோழரே!


சதாசிவம்

ஹர ஹர சங்கர

ரா. கணபதி



பூரண கும்பம்



அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

* * *

உரையுணர்(வு) இறந்துநின்(று)
உணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா(று) உணர்த்தே

- திருவாசகம்

கருணை என்னவெல்லாம் செய்து விடுகிறது? ராமாயணத்துக்கும் பாகவதத்துக்கும் ஒப்பான ஒரு சரிதையை வால்மீகியிடமும் பிரம்ம நிஷ்டரிடமும் ஒப்படைக்காமல் ஒரு சாமானிய வியக்தியின் கையில் கொடுத்திருக்கிறது திரு அருள். குருநாதன் வரலாற்றை ராமாயணம் என்றும் பாகவதம் என்றும் சொன்னால் போதுமா? எதையும் மிகைப்படுத்தாத நமது மரபு குருவே பரம்பொருள் — குரு: ஸாக்ஷாத் பரப்ரம்ம — என்கிறது. அப்படியாயின் குருவைக் குறித்த எழுத்து பரம்பொருளைப் பற்றிய நூல்— அதாவது வேதம் என்றே — கூற வேண்டும். வேத மந்திரங்களைக் கண்ட ஞான மலைகள் எங்கே?......?

ஆயினும் மறை கண்ட முனிவர்கள் தான் இச்சந்தர்ப்பத்தில் தைரியம் அளிக்கிறார்கள். பரம்பொருளை வாக்கினால் பிடிப்பதற்காகவே அவர்கள் வேதத்தைத் தந்தனர். ஆயினும் 'வாக்காலோ மனத்தாலோ அவனைப் பிடிக்க முடியாது-இந்த வேதங்கள் யாவும் அவனைத் தேடியும் காண இயலவில்லை' என்று முடிவில் கூறி விட்டார்கள்.

ஆக, சொல்ல வந்த விஷயத்தைச் சொல்ல மாட்டாமல் தோல்வியை ஒப்புக் கொள்வதற்கு வேத ரிஷிகளே துணிவு தருகிறார்கள். இந்தச் சரிதையைப் படிப்பதால் யாரும் குருநாதனைத் தெரிந்து கொண்டதாக ஆகிவிடாது. ஏதோ ஓரளவுக்குப் புண்ணியமூர்த்தியைக் 'கோடி' காட்டுவதற்கு மேல் எழுத்தில் கட்டிப் பிடித்து நிறுத்த முடியாதவர் இச்சரிதையின் நாயகர்.

'அறிவார் யார்?' என்று அருணாசலக் கவி பாடினாரே, அது போல் அறிய மாட்டாதவராக நிற்கிறார் குருநாதன். இருந்தாலும் அறிந்தது போல் பிரணம

பூஜ்யஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஆசி:

மாதா, பிதா, குரு, தெய்வம் இந் நால்வரும் நம்முடைய வாழ்வுக்கு இன்றியமையாதவர்கள். மாதா, பிதா, குரு இம் மூவரையும் தெய்வமாகவே நினைக்க வேண்டும். தமிழ் மூதாட்டியான ஔவையாரும் இதே கருத்தில்தான் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று கூறுகிறார்.

குருர் பிரம்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மகேச்வர: |
குருஸ் ஸாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீகுருவே நம: ||

என்ற சுலோகம் குருவைத் திரிமூர்த்திகளுக்கும் அதீதமான பிரம்ம ஸ்வரூபமாகவே கூறுகிறது. சரீர சிரமத்தை ஒருவாறு தணிக்கிறார்கள் மாதா பிதாக்கள். அலைந்து திரிந்து அல்லல்படும் நமது மனத்துக்குச் சாந்தி அளிப்பவர் ஸ்ரீ குருவே. ஆனால் நமது குருவான "பெரியவாளை" நினைத்த உடனே, தரிசித்த உடனே உடல் சிரமம், உள்ளத்து சிரமம் இரண்டுமே தணிந்து சாந்தி பெறுகிறோம். மாதாவாகவும், பிதாவாகவும், தெய்வமாகவும் திகழும் நமது குருவான ஸ்ரீ பெரியவாளின் உபதேசப்படி நடப்பதால் மாதா, பிதா, தெய்வம் இம் மூவரின் உபதேசங்களை அனுஷ்டிப்பவர்களாகவும் ஆகிறோம்.


'ஹர ஹர சங்கர' என்ற பெயரே நமது பெரியவாளின் சரித்திரத்தைப் படிப்பதினால் எல்லாவித பாபங்களும் போய்ச் சுகம் கிடைக்கும் என்று தெரிவிக்கின்றது. ஸ்ரீ பெரியவாளின் ஆசி நம் எல்லோருக்கும் கிடைக்கட்டும்.

கொண்டு அவரைப் பற்றிப் பலவிதமாகப் பேசுகிறோம். மகா ஞானி என்கிறோம்; பக்தியின் உருவம் என்கிறோம்; கல்விமான், அறிவாளி, பேச்சாளர் — என்றெல்லாம், அவரை ரசிப்பவர்களும் உண்டு. கலைஞர், ரசிகர் என்று பாராட்டுவோர் எவ்வளவோ பேர். பெரிய 'டிப்ளோமாட்', 'பாலிமதியன்' என்றெல்லாம் கூட அவரை நினைப்பவர்களும் உண்டு. ஏன், மிகவும் கிண்டல்காரர் என்று அவரைக் கருதி அந்தக் கிண்டலை ருசிப்பதற்காகவே அவரிடம் செல்வோரையும் காண்கிறோம். அவர் அப்பட்டமான சனாதனி என்று ஒருவர் சொல்லுவார். இன்னொருவரோ அவரைப்போல் சீர்திருத்தவாதி கிடையாது என்பார். இப்படியெல்லாம் சொல்லித் தங்கள் தோல்வியைத் தெரியாமல்—அவரது அன்பைக் கண்டு 'இதோ தெய்வம்' என்று மனத்துக்குள் பரவசமாகும் பாக்கியசாலிகள் இருக்கிறார்கள்; அவரது பண்பைக் கண்டு, 'இதோ ஒரு மனிதர்' என்று உள்ளுற மகிழும் புண்ணியசாலிகளும் இருக்கிறார்கள்.

நம்மிடையே இவ்வளவு அருகிலிருந்தும் இவரைப் பூரணமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதைப் பார்க்கும்போது 'தத்தூரே தத்வந்திகே' — சமீபத்தில் உள்ள அதுவே தொலை தூரத்தில் இருக்கிறது — என்ற மறைமொழியின் பொருள் புலனாகிறது. இங்கே எழுதியிருப்பதை மிகவும் எட்டத்திலிருந்து பார்த்தால் எதுவும் தெரியாது; கண்ணுக்கு மிக நெருக்கத்தில் வைத்துக் கொண்டாலும் எழுத்துக்கள் தெரியாது. இவரோ எட்டியும் எட்டாது இருக்கிறார். தள்ளி நின்றால் கோபுரம் என்ற ஒரு மொத்த உருவம் தெரியும்; அதில் உள்ள சிற்பங்களின் தனித் தனி அழகுகள் தெரியாது. கோபுரத்தின் அருகிலேயே வந்து விட்டால் அதன் மொத்த உருவமும் தெரியாது; தனித் தனி அம்ச அழகுகளும் தெரியாது. இடையில் ஒரு நிலையில்தான் இரண்டும் தெரியும். அநுபவத்தால் நம்மிடமிருந்து மிகவும் எட்டியும், தோற்றத்தால் நம்மிடம் மிகவும் நெருங்கியும் இருப்பவரை முறையாகக் காண வேண்டிய இடை நிலையை யாரே அறிவர்!

'வேறு வேறுருவும் வேறு வேறியற்கையும் நூறு நூறாயிரம் இயல்பினதாகி' நிற்கும் இவரது ஸ்வரூபம் குழப்பமாக இருக்கிறதா என்று பார்த்தால் அப்படியும் இல்லை. மிக மிகத் தெளிவானது, எளிமையானது அவரது உள்ளுருவம் என்பதை நம் உள்ளுணர்வு காண்கிறது. இந்த விந்தையை நாமே புரிந்து கொள்ள முடியாதபோது பிறருக்கு எப்படி விளக்குவது? 'முடிவுள்ள விஷயத்தை வாசாலகன் பேசலாம். முடிவில்லாதது ஊமைக்கு உரிய விஷயமல்லவா?' என்று வேதம் சொல்லுவதைப் பின்பற்றி மௌனம்தான் பூண வேண்டும்.

அறிவுக்கும் வாக்குக்கும் அகப்படாதவர் அவர். ஆயின், அறிவும் வாக்கும் மட்டுமின்றி,



மானுடனுக்கு இன்னொன்றும் தந்திருக்கிறார் ஆண்டவன். தேங்காயினுள் இளநீர் போல், மலருக்குள் மது போல் கண்ணீர் என்ற அமுதத்தை மனிதனுக்குள் வைத்தனுப்பியிருக்கிறார். அதைப் பயன் செய்து கொண்டால் அறிய முடியாததையெல்லாம் அறியலாம். அநுபவமே அறிவாக ஆகிற நிலை இது. இதனால்தான் மணிவாசகர் 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்றார். பாரதியைத் துதிக்கும் பாரதியும் பாடினார்:

> தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுதர
> மொழிந்திடுதல், சிந்திப்பார்க்கே
> களிவளர உள்ளத்தில் ஆனந்தக் கனவுபல
> காட்டல், கண்ணீர்த்
> துளிவர உள்ளுருக்குதல் இங்கிவையெல்லாம்
> நீ அருளும் தொழில்களன்றோ ?

உள்ளே பெறுகிற உருக்கமே அழுகை, அதுவே கண்ணீர். அந்த உருக்கத்தைத் துயரம் என்றோ மகிழ்ச்சி என்றோ சொல்ல முடியாது. பனிக்கட்டி நீராகக் கரைவது போல நம்மில் நாமே கரைவதுதான் இந்த உருக்கம். இப்படிக் கரைந்தால்...? 'தெள்ளிய நீரில் உருவம் பிரதிபலிப்பது போல் நம் உள்ளத்து நீரில் குருநாதரின் திரு உருவமும் பிரதிபலிக்கும்' என்றுதானே நினைக்கிறீர்கள்?

இங்கும் ஒரு விசித்திரம். எல்லாவற்றையும் தண்ணீர் பிரதிபலிப்பது உண்மைதான். ஆனால் தண்ணீரின் மீது சுத்தமான ஸ்படிகத்தைப் பிடித்துப் பாருங்கள். நீரில் அதன் பிரதிபிம்பம் தெரிகிறதா ? ஒருகாலும் தெரியாது. அப்படியேதான் நாம் உள்ளத்தை நிச்சலமான நீராக வைத்துக் கொண்டாலும் அதில் குருநாதனின் உருவைப் பிடித்து வைத்துக் கொள்ள முடியாது. ஆயினும் அவ்விதம் பிடித்து வைத்துக் கொள்ள முடியாததிலிருந்தே அவரை அறிந்து — அநுபவித்து — விடுவோம். அதாவது அவர் ஸ்படிகம் என்று அறிந்து அநுபவிப்போம். பிரம்மத்தை உபாசித்தவன் பிரம்மமாகவே ஆகி விடுகிறான் என்கிறது வேதம். அம்பிகையை பஜிப்பவன் அம்பிகையே ஆகிவிடுகிறான் என்கிறார் ஆசாரிய சங்கரர். ஸ்படிக லிங்கத்தைப் பூஜிக்கும் நம் குருநாதன் ஸ்படிகமாகவே ஆகிவிட்டார் என்று நாமும் உணர்வோம். அந்த ஸ்படிக சந்திர மௌளீசுவரனைப் பற்றி அவர் சொல்வதெல்லாம் சந்திரசேகரராகிய அவருக்குமே பொருந்தும் என்று காண்போம். "ஸ்படிக லிங்கம் பிரம்மத்துக்கு அடையாளம்...அதற்கு ஓர் அடையாளமும் சொல்ல முடியாது. எந்த ஒரு வஸ்துவை அதில் வைக்கிறோமோ அதனுடைய பரிணாமத்தை அது அடையும். குண-தோஷம் இல்லாதது அது. அதன் பின் பச்சையை வைத்தால் பச்சையாகத் தோன்றும். சிவப்பை வைத்தால் சிவப்பாகத் தோன்றும்... பரப்பிரம்ம ஸ்வரூபம் நிர்

விசாரமாக இருந்தாலும் நம்முடைய மனோ பாவத்தை எப்படி வைக்கிறோமோ அப்படித் தோன்றும் என்பதற்குத் திருஷ்டாந்தமாக இருப்பது ஸ்படிக லிங்கம். நினைக்கிற ரூபமாக ஆகும் அது'' என்பது அவரது அருள் வாக்கு. இப்படியேதான் குருநாதன் ஞானியாகவும், பக்திமானாகவும், கலைஞராகவும், ரசிகராகவும், அறிவாளியாகவும், சநாதனியாகவும், சீர்திருத்தவாதியாகவும், 'டிப்ளோமாட்' ஆகவும், 'பாலிடீஷியன்' ஆகவும், அன்பராகவும், பண்பாளராகவும் பலவிதங்களில், 'அவரவர் தமதம தறிவறி வகை வகை' தோன்றுகிறார். பல்வேறு வியாதிகளுக்குப் பல்வேறு மருந்துகள் தருவதுபோல் பல்வேறு மனோபாவத்தினருக்கு ஏற்பப் பல விதமாகத் தோன்றுகிறார். ஆம், இது அவ்வளவும் தோற்றம்தான்.

'எப்படி இருக்கிறதோ அதை உணரவேண்டும்; எப்படித் தோன்றுகிறதோ, அது மாயை' என்றார் ஆதி சங்கரர். நம்மால் அழிக்கப்பட வேண்டிய மாயையை ஆதி சங்கரர் சொன்னார். குருநாதன் தனது உண்மை உரு புலப்படாதபடி பலப் பலவாறாகத் தோன்றுகிறாரெனில் இத்தோற்றமும் மாயைதான். ஆனால் இந்த மாயையோ அழிக்கப்படுவதற்காக ஏற்பட்டதல்ல; அநுபவித்து ரசிப்பதற்காக ஏற்பட்டது இது. முள்ளை முள்ளால் எடுப்பதுபோல் மாயையைக் களைவதற்காகவே வந்த மாயம் இது

இவர் பலவாகத் தோன்றுகிறார் என்ற மாயத்தைச் சிந்தித்துக் கொண்டிருந்தாலே இவரது உண்மை ஸ்வரூபமும் உள்ளத்தில் புரியும். மாயத்தைச் சிந்திப்பதால் எப்படி சத்தியம் புரியும்? இதற்கும் குருநாதன் கூறியதிலிருந்தே விடை காண்போம்:





ஆதி சங்கரர் நாராயண மூர்த்தியின் மீது இயற்றியுள்ள 'ஷட்பதீ ஸ்தோத்திர'த்துக்கு குருநாதன் விளக்கம் கூறுகிறார். 'அலைகளும் கடலும் போல் ஜீவர்களும் நாராயணனும். உண்மையில் எல்லாம் ஒன்றே. இரண்டற்ற அத்வைதம்தான் சத்திய நிலை. அதுதான் நாரணன்' என்று ஒரு சுலோகத்தை விளக்குகிறார். ஆனால் அடுத்து வரும் சுலோகம் ஒன்றிலோ 'குண மந்திரன்' — சகல குணங்களும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவன் திருமால் என்று வருகிறது. முதலில் குணம் குறியற்று விளங்கும் நிர்குண வஸ்துவாகக்

குறிப்பிடப்பட்டவனையே எல்லாக் குணங்களுக்கும் இருப்பிடமாகச் சொல்வது முரணாகத் தோன்றுகிறதல்லவா? இந்த முரண்பாட்டை வெகு அழகாகத் தீர்த்து வைக்கிறார் குருநாதன். 'எல்லாக் குணங்களும் பொருந்தியிருப்பதாலேயே இறைவன் நிர்குணன்' என்கிறார். 'எல்லா வர்ணங்களும் கலந்தால் என்னவாகிறது? ஒரு வண்ணமும் இல்லாது வெண்மையாகத்தானே ஆகிறது? இதைப் போலத்தான் எல்லாக் குணங்களுக்கும் உறைவிடமான ஆண்டவன் எக்குணமும் அற்ற நிர்குணனாக இருக்கிறான்' என்கிறார். ஒரு குணமும் அற்றவனாக இருப்பதாலேயேதான் அவனால் எந்தக் குணத்தையும் ஒரேபோல் பாவித்து ஏற்க முடிகிறது என்று உணர்த்துகிறார். இதுவரை யாரும் கூறியிராத இந்த எளிய விளக்கத்தாலேயே குருநாதனையும் விளங்கிக் கொள்ளோம். அதாவது இவ்வளவு நல்லுபதேசங்களையும், ஸத்காரியங்களையும் அவர் செய்து வந்தாலும், இவ்வளவு சுற்றுப் பிரயாணங்களைச் செய்து வருகிறபோதிலும் வாஸ்தவத்தில் அவர் பேசவே யில்லை, அவருக்குக் காரியம் கிடையாது, அவர் எங்கிருந்தும் எங்கும் அசைவதுமில்லை என்றெல்லாம் புரிந்து கொள்வோம். இத்தனை அழகான, அன்பான ஓர் உருவத்தைக் கண்ணுக்குத் தெரியும்படியெல்லாம் வண்ணப்படமாக மாட்டி வைத்து வணங்குகிறோமே, இது கூட குருநாதன் அல்ல, அவருக்கு உருவமே யில்லை என்று தெரிந்து கொள்வோம்.



ஆச்சரியம்தான்! இந்த நூலை 'ஜகத் குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகளின் திவ்விய சரிதம்' என்று குறிப்பிட்டோம். ஆனால் கதாநாயகனுக்கோ உருவமில்லை; செய்கை யில்லை என்று தெரிகிறது. அதற்குச் சரிதம் மட்டும் ஏது? சரிதம் இல்லாதது எப்படியோ தோன்றி மயக்குகிறது.

த்வம் ஜீர்ணோ தண்டேன வஞ்சஸி — "தண்டத்தைத் தாங்கும் விருத்தனாக வந்து மயக்குகிறாய்" என்ற வேத மந்திரத்தின் பொருளைப் புரிந்து கொண்டு நெஞ்சம் நெகிழ்கிறது. 'குணமற்ற பொருள் மனிதனாக வந்திருக்கிறது. தேய் மதியைச் சூடிய சந்திரசேகரனாக வந்திருக்கிறது. தொன்றுதொட்ட தருமங்களை யெல்லாம் தரும் பெரிய ஆண்டிப் பரதேசியாக வந்திருக்கிறது' — குணமிலி மானிடன் தேய்மதியன் பழைமை தரு மாபரன் — என்று மணிவாசகர் சொன்னதெல்லாம் ஸ்படிக மணிகள்போல் கண்ணீர்த் துளிகளாகத் திரளுகின்றன. அதிலேயே, 'இவரைப் பற்றி எழுத முடியுமா?' என்ற தயக்கம் கரைகின்றது; கலக்கம் கழுவப்படுகின்றது.

உள்ளம் எய்தக் கூடிய மகோன்னதமான அநுபவம் எதுவோ அதை நிர்குணமாக இருந்து அளிக்கிறார் குருநாதன். இதை எழுத முடியாது. எழுத்தின் எல்லைக்கு உட்படாததை எழுத முடியாததற்கு வருத்தமோ வெட்கமோ பட வேண்டியதில்லை. சங்கீதத்தை எழுத முடியுமா? இனிப்பை எழுத முடியுமா? சரிதையில்லாத ஒன்றின் சரிதையை எழுத முடியாததற்கு நாண வேண்டியதில்லை. ஆனால் அதுவே, மனம், வாக்கு, நோக்கு, செவி முதலியவை அநுபவிக்கக் கூடிய மிக உத்தமமான உணர்வுகளை அளிக்கும் தோற்றமாகவும் தெரிகிறது. அந்தத் தோற்றத்தைப் பற்றி எழுதும் சரிதைதான் இது. சரிதையற்ற பொருளை நினைவில் தந்து கொண்டே சரிதையுள்ள தோற்றத்தைக் குறித்து எழுதுவதே இந்த நூல். இனி வரும் பக்கங்களில் அந்தத் தோற்றத்தை நல்ல முறையில் உலவவிட வேண்டுமென, இங்கு இச் சரிதையின் தலைவாசலில், உள்ளத்தின் தெள்ளிய நீர் நிறைந்த பூரண கும்பத்தை அளித்து குருநாதனைப் பிரார்த்திக்கலாம்.

உள்ளே இருக்கும் வஸ்துவை விட்டு வெளியே தெரியும் தோற்றத்தை மட்டுமே எழுதத் தொடங்கிய பின்னும் பல இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. பலர் அவரைப் பலவிதமாகப் பார்க்கிறார்கள். ஒருவரே கூடப் பல சமயங்களில் பல விதமாக அவரைப் பார்க்கிறார். 'உணவில் ஒவ்வொருவருக்கு ஒரு ருசி. ஏன்? ஒருவருக்கே ஒரே சமயத்தில் பல ருசிகளுள்ள உணவுகள் வேண்டியிருக்கிறது. அப்படியானால் ஆண்டவனும் உள்ளத்தின் பல ருசிகளுக்கு ஏற்றபடி பல தெய்வங்களாக வரத்தானே வேண்டும்? ஒவ்வொருவருடைய மனச் சுவைக்கும் ஏற்றபடி ஒவ்வோர் இஷ்ட தெய்வமாக வருவதுமட்டுமின்றி, ஒருவருக்கே கூட அவரது பல ருசிகளையும் பூர்த்தி செய்வதற்காக அவன் பலவாகத்தானே வர வேண்டும்?' என்று குருநாதன் ஹிந்து மதத்தின் பல தெய்வக் கொள்கையை விளக்கினார். இதைத் தம் வாழ்வின் மூலமும் அவர் நிரூபித்து வருகிறார். அவரவரும் ஒவ்வொரு விதமாக அவரைக் கண்டு இதுவே உண்மை இயல்பு என நினைக்கிறார்கள். இவரது சரிதையில் இவரை முக்கியமாக அத்வைத ஞானியாகவே குறிப்பிட வேண்டும் என்பது சிலர் கருத்து. பெரியவர்களை பக்தியின் உருவமாகக் காட்டுவதே முறை என்பது வேறு சிலர் கருத்து. ஆசார சீலரான ஆசாரியரின் சரிதையில் தர்ம சாஸ்திரக் காவலராகவே அவரை வருணிக்க வேண்டும் என்போர் உண்டு. 'சத்திய உணர்வுக்காக வாடுகிறவர் விஷயத்தில் சம்பிரதாயங்களை யெல்லாம் விட்டு அநுக்கிரகம் செய்யும் சீர்திருத்தவாதியாகவே இவரைத் தீட்ட வேண்டும்' என்று அடித்துச் சொல்வோரும் இருக்கிறார்கள். இயற்கையின் போக்கில் இம்மியும் குறுக்கிடாதவர் குருநாதன் என்று ஒரு சாரார் கருதுகின்றனர். பிறிதொரு சாராரோ அவர் செய்த அற்புதங்களையே முக்கியமாகக் கருதுகிறார்கள். நம்பிக்கையே உருவமானவர் என்று ஒருவர் கருத, மற்றொருவரோ இவரைப்போல் பகுத்தறிவுவாதி கிடையாது என்கிறார். 'மனிதராக இருப்பவரே அவர்;

அவரைக் கடவுளாக்கி விடாதீர்கள்' என்று ஒருவர் சொல்கிறார். 'நடமாடும் தெய்வம் நம் பெரியவர்கள்; அவரை மானுடராக எழுதிவிடாதீர்கள்' என்கிறார் இன்னொருவர்.

இப்படிப் பல கருத்துக்கள் இருக்கும் போது எதைப் பின்பற்றுவது? 'ஸதாம் ஹி சந்தேக பதேஷு வஸ்துஷு பிரமாணம் அந்த:கரண ப்ரவிருத்தய:' என்றான் காளிதாஸன். 'மேன்மக்களுக்கு ஒரு விஷயத்தில் சங்கை ஏற்படும்போது, அவர்களது அந்தராத்மா கூறுவதே பிரமாணம்' என்கிறான். 'மேன்மக்களுக்கு' என்று நிபந்தனையை விதிக்காவிடில் 'மனச்சாட்சிப்படி எழுதினேன். இதற்குக் காளிதாசனின் ஒப்புதல் இருக்கிறது' என்று எளிதில் பலம் தேடிவிடலாம். இப்போது என்ன செய்வது? எப்போதுமே மேலோராக இருப்பது கலபத்தில் சாத்தியமற்ற விஷயம். ஆயினும் 'தாற்காலிக'மாக அப்படியிருப்பது ஓரளவு சாத்தியம். சில கலைஞர்கள் அரங்கத்தில் ஏறினால் சத்தியமயமாகப் பிரகாசிப்பார்கள். ஆனால் மேடையை விட்டு இறங்கியதும் அந்த சத்தியம் அவ்வளவும் மறைந்து போயிருக்கும். 'அவரா இவர்?' என்று ஆச்சரியப்படுவோம். இது அம்பிகையின் அனந்தமான லீலைகளில் ஒன்று. அசத்தியம் நிறைந்த எழுத்தாளரையும் அவரது எழுதுகோல் தாற்காலிகமாக சத்தியத்தில் நிலைநிறுத்தக் கூடும். அச்சமயத்தில் — அச்சமயத்தில் மட்டுமே — எழுதுபவனின் மனச்சாட்சியை சத்தியப் பிரமாணமாக எடுத்துக் கொள்ளலாம்.


இந்நிலையில் எழுத்தாளனுக்கு மனோதர்மம் என்பது பதிவிரதையின் கற்புக்குச் சமமாகி விடுகிறது. தனது மனோதர்மத்திலிருந்து சிறிது பிறழ்ந்தாலும் பதிதையாகிவிட்ட பெண்மணியின் மாபாதக உணர்வு அவனைப் பற்றிக்கொள்ளும். மிகுந்த வணக்கத்துக்குரிய சான்றோர்களின் யோசனைகளுக்குத் தனது மனோதர்மம் முரணாகச் சென்றாலும் கூட, மனோதர்மத்தைத்தான் அவனால் பின்பற்ற முடியும். இதை யாரும் அகம்பாவம் என்று குறை சொல்லிவிடக் கூடாது. இந்த உணர்வை ஒப்புக்கொள்ள முடியாவிட்டாலும் குறைந்தபட்சம் மன்னித்தாவது விட வேண்டும்.

'அற்புதங்களை'ப் பற்றி எழுதலாமா, கூடாதா? இது பற்றிச் சிறிது சொல்ல வேண்டும். இன்று குருநாதனைத் தரிசிக்க வருபவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் அவர் 'அற்புதம்' செய்ய வேண்டுமென்று விரும்பித்தான் பிரார்த்திக்கிறார்கள். தீராத வியாதி தீர வேண்டும், திருமணமாக வேண்டும், பரீட்சை தேற வேண்டும், உத்தியோக உயர்வு கிடைக்க வேண்டும், வீட்டுச் சண்டையோ, நாட்டுச் சண்டையோ தீரவேண்டும் என்றெல்லாம் அவரிடம் பலரும் வேண்டிக் கொள்கிறார்கள். அவர் நினைத்தால் எதுவும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை மக்களிடையேயிருந்து வருகிறது. அவர் ஏதேதோ அற்புதங்கள் செய்ததாக நூற்றுக்கணக்கான விருத்தாந்தங்கள் இன்று பரவியுள்ளன. இவற்றைப்பற்றி குருநாதனிடம் நெருங்கிய பரிசயமுள்ள நம்பகமானவர்களை விசாரித்த போது இவை பெரும்பாலும் கற்பனையே என்றும் தெரிய வருகிறது.

குருநாதனைப் பொறுத்த மட்டில் அவர் அற்புதம் செய்வதைப் பெரிதாகக் கருதவில்லை என்பதை நிதரிசனமாகக் காண்கிறோம். ஆனாலும் அவர் அற்புதமே செய்யவில்லை என்று சொல்லி விடலாமா? அப்படியும் சொல்ல முடியவில்லை. எவ்வளவோ பேருக்கு அமாநுஷியமான அற்புத முறையில் அநுக்கிரகம் செய்துதான் இருக்கிறார். இவற்றைப் பற்றிக் கிடைத்த தகவல்களை எழுதுவதா, விடுவதா?

குருநாதனின் செயல்களில் ஒளிக்க வேண்டியதாக ஏதோ இருப்பதாக எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை. அவர் ஏதேனும் அற்புதங்கள் செய்தார் என்றால் அவற்றில் ஏதோ உள்ளார்ந்த விசேஷம் இருக்கத்தான் வேண்டும். நமக்குப் புரியாவிடினும் என்றோ யாருக்கோ அது புரியலாம். அந்த ஓர் ஆன்மாவுக்காகத்தான் இவ்வளவு எழுதுவதும். இதுவரை நம் நாட்டில் வாழ்ந்த மகான்களின் சரிதைகளைத் தந்தவர்கள் அவர்களது வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்களை மறைக்கவில்லை. எனவே நாமும் அற்புதங்களை ஒளிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் ஒன்று. இந்த அற்புதங்கள்தான் குருநாதனின் பெருமை என்று யாரும் எண்ணிவிடலாகாது. அற்புதங்களை எவ்வளவுக்கெவ்வளவு குறைவாகச் செய்யலாமோ அந்த அளவுக்குத் தமது பேராற்றலைக் கட்டிப் பிடித்து வைத்துக்கொண்டிருக்கும் பெரிய அற்புதமே அவரது பெருமை.

அற்புதங்களை வெளிப்படுத்தினால் குருநாதனே அதை விரும்ப மாட்டார் என்று சிலர் அச்சுறுத்துகிறார்கள். இங்கு ஸ்ரீ ராமன் நினைவுதான் வருகிறது. தன்னை கேவலம் மனிதனாகவே கருத வேண்டும் என்று ராகவன் எண்ணினான். எனினும் அவனும் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. சாம்பிக் கிடந்த அகலிகைக்கு அவனது தரிசனமே திவ்யப் பிரகாசம் தந்தது. சபரியின் பக்தியில் மகிழ்ந்த ராமன் தனது மானிடத் தன்மையையும் க்ஷண காலத்துக்கு விலக்கி, 'உனக்கு விருப்பமான உலகுக்குச் செல்' என்று கூறி அவளை மேலுலகத்துக்கு அனுப்பி வைத்தான். இதையும் வால்மீகி முனிவர் ஒளிக்காமலே பாடினார். அதனினும் குறிப்பிட வேண்டிய விஷயம், லவ குசர் பாடத் தன் சரிதையைக் கேட்ட ஸ்ரீ ராமனும் மெய் மறந்து ரசிக்கத்தான் செய்தான். ராகவன் தனது அமாநுஷியச் செயல்களையும் ராமாயணத்தில் அனுமதித்ததுபோல் குருநாதனும் அங்கீகரிப்பார். இது தவறாகவே இருந்தாலும் கூட க்ஷமிப்பார்.



ஆறுத ஆனந்தத் தடிமார் செந்த
அனுசாரம் பொறுத்தருளி
அவர்மே லென்றும் சிறுத பெருமான்

அல்லவா அவர்.

'உன் காவியத்தில் பொய் ஏதும் வராது' என்று வால்மீகிக்கு பிரம்மா வரம் தந்தார். 'நான் பொய் எதுவும் சொல்லவில்லை' (அனும் பிரவச்மி ந ம்ருஷா) என்றார் சிவானந்த லஹரி செய்த சங்கர பகவத் பாதர். மனத்துக்குத் தெரிந்து பொய் எழுதாமலிருப்பது தான் முக்கியம்.

அவ்வாறெனில் பொய் எது மெய் எது என்பதை முதலில் தெளிவு செய்து கொள்ள வேண்டும். நடந்ததை யெல்லாம் நடந்தபடி சொல்லி விட்டால் மட்டும் மெய்யாகி விடாது. குருநாதனின் வாழ்க்கையில் நடந்ததை யெல்லாம் அறிவதே இயலாத காரியம். அவரது உள்ளத்தின் போக்குகளை அவராகச் சொல்வது கிடையாது. வெளிச் செயல்களிலும் கூட, அறுபதாண்டுகளாக அபரிமிதமான செயல்களைப் புரிந்து வருபவரைப் பற்றிக் கிடைத்த தகவல் மிக மிகக் குறைவானது. இச்சமயத்தில், இந்தச் சரிதை எழுதத் தகவல் தந்த பெரியோரனைவருக்கும் சிரம் தாழ்த்தி வணக்கம் தெரிவிக்க வேண்டும். பல அந்தரங்கமான விஷயங்களைக்கூட அன்புடன் கூறி உதவிய சான்றோர்களுக்குப் பிரதியாகச் செய்யக்கூடியது எதுவுமில்லை. முக்கியமாக, முடிந்தவரையில் ஆசாரியசரிதையைப் பற்றிச் சீராகக் குறிப்புக்கள் எடுத்து, 'ஜகத்குரு திவ்ய சரித்திரம்' தந்துள்ள ஸ்ரீ எஸ். சாம்பமூர்த்தி சாஸ்திரிகளுக்கு நன்றி கூற வேண்டும். ஆனால் தகவல் அளிக்கக் கூடியவர்கள் என்பதாகவே வெளி உலகுக்குத் தெரியாத எத்தனையோ புண்ணிய ஆன்மாக்கள் குருநாதனின் பூரண அநுக்கிரகத்தைப் பெற்றிருக்கக் கூடும். அவர்களின் அநுபவங்கள் எழுத்துக்கு மேம்பட்ட இரகசிய சாம்ராஜ்யத்துடனேயே முடிந்து போனவை.

கிடைத்த தகவலிலும்கூடக் காவிய திருஷ்டி தானாகவே பலவற்றை ஒதுக்கி விடுகிறது. மீதமுள்ளவற்றை நடந்தபடி எழுதி விட்டால் மெய் எழுதியதாக ஆகுமா? ஆகாது. ஏனெனில் மெய் என்பது நடந்ததை நடந்தபடி சொல்வதோடுமட்டுமின்றிப் பிறருக்குத் தீமை பயக்காததாகவும் இருக்க வேண்டும் என வள்ளுவர் பெருமான் விதிக்கிறார். குருநாதனைப் பற்றிய எந்த நடவடிக்கையை எழுதுவதாலும் அவருடைய பெருமைக்கு எள்ளளவும் பங்கமில்லை. ஆயினும் வேறு சிலரைப் பாதிக்கக் கூடிய விஷயங்களைப் பகிரங்கமாக்குவது சரியல்ல. இங்கே இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். பிறரைப் பாதிக்கும் என்பதால் வெளி உலகுக்குத் தெரியக்கூடாத விஷயங்கள் என்று மறைத்து வைக்கப்பட்டும், பல தகவல்கள் இன்று மிகவும் பிரசாரமாகி விருக்கின்றன. மறைத்து வைப்பதாலேயே தப்பான முறையில் பிரபலமாகி யிருக்கின்றன. இந்தத் தவறான கருத்துக்கள் நீங்குவதற்காகவே யாரையும் பாதிக்காத வகையில் சில உண்மைகளைச் சொல்லிவிடுவது சாலச் சிறந்ததல்லவா?

இன்னொரு கேள்வி: குருநாதனைத் தெய்வமாக எழுதலாமா, மனிதராக மட்டுமேதான் எழுத வேண்டுமா?

தெய்வம் என்றால் என்ன?

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்பது பொய்யா மொழி. இவ்வுலகில் எந்த மனிதன் உத்தமமான வாழ்க்கை வாழ்கிறானோ அவனே தெய்வம். அதாவது நிறைந்த மனிதத் தன்மையேதான் தெய்வத் தன்மை. மானுடத் தன்மை இங்கே முடிகிறது, தெய்வத் தன்மை இங்கே தொடங்குகிறது என்று யாராலும் திட்டவட்டமாகப் பிரித்துக் காட்ட இயலாது. 'அவனே தெய்வம், அவனே மனிதனும்' (யோ தேவோ வருணோ யச்ச மாநுஷ:) என்கிறது வேதம். உத்தமமான மனித வாழ்க்கை நடத்துபவரைத் தெய்வமாகச் சொல்வதில் தவறில்லை.

ஆயினும் கண் முன்னே தெரிகிற ஒன்றைக் 'கடவுள்', 'தெய்வம்' என்றெல்லாம் சொன்னால் சிலருக்குத் தூக்கிப் போடுகிறது. ஏன்? தெய்வத் தன்மை என்பதாகச் சிலவற்றைக் கருதுகிறோம். 'பகவான்' என்ற பதம் ஆறு சிறப்புக்களைக் குறிக்கும். பேராற்றல், வைராக்கியம், கீர்த்தி, செல்வம், வீரியம், மோக்ஷ நிலை இந்த ஆறும் 'பக'ங்கள்; இவற்றைக் கொண்டவனே பகவான் என்று விஷ்ணு புராணம் கூறும். இவற்றில் பேராற்றல் என்பது பிரபஞ்ச கோளங்களை எல்லாம் சிருஷ்டித்து உருள விடுவது போன்ற மகா சக்தி; மனிதராகத் தோன்றும் எவரைக் குறித்தும் இத்தன்மையைப் பொருத்த முடியாது என்று சிலர் கருதுகிறார்கள். இவ்வாறே 'எண் குணத்தான்' என்று இறைவனைக் கூறும்போது குறிப்பிடப்படும் முற்றறிவு, முற்றும் உணர்தல், தன்வயமாதல், தூய்மை, பேரருள், பேரின்பம், பாச நீக்கம் முதலியவை மகான்களிடம் காணப்பட்டபோதிலும் 'முடிவிலா ஆற்றல்' என்ற குணம் மானுடராகத் தோன்றும் யாருக்கும் உரியதல்ல என்பது சிலர் கருத்து. ஒரு விஷயத்தை இவர்கள் யோசிக்க வேண்டும். முடிவில்லாத பேராற்றல் ஒருவரிடம் வாய்க்கப்பெற்றிருந்தாலும் அதை அவர் ; எப்போதும் வெளிக் காட்டாதிருக்கலாமல்லவா? ஏன், ஆண்டவனும் கூடத் தினம் தினம் தன் பேராற்றலைக் காட்டும் விதத்தில் அற்புதங்களைச் செய்தபடி இல்லையே! இவ்வாறே முடிவற்ற ஆற்றல் தமக்கு வாய்க்கப் பெற்றும் அவற்றை இயன்ற மட்டும் அடக்கி வைத்துக்கொண்டு மானுடராகவே வாழ விரும்புபவர் இருக்கலாமல்லவா? குருநாதனை இப்படிக் கண்டவர்கள் அவரைத் தெய்வமாகச் சொன்னாலும் தோஷமில்லைதானே?

ஆயினும் எதையுமே உடைத்துச் சொல்லி விடாமல், 'த்வனி' என்ற காவிய லக்ஷணத்தின்படி மறைமுகமாகச் சொல்வதே அழகு என்று கருதும் ரசிக உள்ளத்தினர், குருநாதனைக் கடவுளாக வெளிப்படச் சொல்

வது அவசியமில்லை என்று கருதக் கூடும். இங்கே ஒரு சிக்கல். ஒன்று அப்பட்டமாக இருந்தால் அதை மறைமுகமாகச் சொல்ல முடியும்; ஆனால் குருநாதனே தமது தெய்வத் தன்மையை மறைமுகமாக அல்லவா காத்து வருகிறார்? தேர்ந்த ரஸிகராகிய அவரேயல்லவா இதை 'த்வனி'யாகச் செய்திருக்கிறார்? நுட்பமான அந்த 'த்வனி'யை நாம் தொட்டவுடனேயே அப்பட்டமாக, வெளிச்சமாக ஆகிவிடுகிறதே! சங்கீதத்தை மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் வீணையில் இடறியவுடனேயே அது 'ஜணஜண' என்று ஒலிக்கத் தொடங்குவது போல், குருநாதனின் தெய்வத் தன்மை என்ற நுட்பமான அம்சத்தை ஸ்பரிசத்தவுடனேயே அது பளபளத்துக் கொண்டு வெளியாகி விடுகிறதே!

முன்பே சொன்னதுபோல் ஸ்ரீ ராமனுக்கு ஒப்பாக இருப்பவர் குருநாதன். மானுடராகத் தம்மைக் காட்டிகொண்டு மானுடருக்குரிய தருமங்களையும் கருமங்களையும் பின்பற்றி மற்றோருக்கு வழிகாட்டியாக இருப்பவர் அவர். அவரது வாக்குகளிலிருந்தே இந்தத் தெய்வ – மனிதப் பிரச்னைக்கு விடை காணலாம். ஸ்ரீ ராமன், ஆதி சங்கரர், குமாரில பட்டர் ஆகியோர் பற்றி அவர் கூறியிருப்பதைப் பார்ப்போம்:

''நாடகத்தில் எந்த வேஷத்தை எடுத்துக் கொள்கிறோமோ அதற்குத் தக்கபடி ஆட வேண்டுமே ஒழிய, தங்களுடைய சொந்த ஸ்வரூபத்தை நாடக மேடையில் காட்டக் கூடாது.''

'' எல்லோரிலும் உயர்ந்தவரானாலும், மநுஷ்யாவதாரம் எடுத்தால் மனிதர்கள் இருக்கிறபடி இருக்க வேண்டும். அப்போது தான் அவதாரப் பிரயோசனம் உண்டாகும். அகம்பாவத்தைக் குறைத்துக் கொண்டு, மிகவும் தாழ்மையோடு மனிதனாக இருக்க வேண்டும்.''

''இந்த மநுஷ்ய சக்தியை வைத்துக் கொண்டு இதையே பெரிதாக்க வேண்டும். தெய்வ சக்தியினால் செய்வதானால் ஒன்றுமே வேண்டாம்.''

ஆம், தெய்வ சக்தியினால் எல்லா மக்கள் மனத்தையும் மாற்றிவிடுவதெனில் மக்கள் என்பதாக அவர்கள் எதற்கு இருக்க வேண்டும்? அவர்கள் சுய முயற்சியில் முன்னேறுவதற்கு வழி காட்ட வேண்டியதுதானே மகான்களின் பணி?

ஆனால் இதைச் செய்வதற்குக்கூட அவ்வப்போது தெய்வத் தன்மை என்று நினைக்கப்படும் அற்புத ஆற்றலைக் காட்ட வேண்டி யிருக்கலாம். இப்படி வாழ்பவர் தான் குருநாதன்.


'லீலையிலிருந்து நித்தியானந்தத்துக்கும், நித்தியானந்தத்திலிருந்து லீலைக்குமாக ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறேன்' என்று பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் கூறியபடி தெய்வத்தன்மை–மனிதத் தன்மை இவற்றிடையே விளையாடுபவர் குருநாதன். விளையாட்டு என்று சொன்னாலே அதில் புத்தி பூர்வமாகப் புரிந்து கொள்ள எதுவுமில்லை என்றாகும். இதயம் ரஸிப்பதற்கே விளையாட்டு. அதற்கே இச்சரிதை.

மகா சமுத்திரத்திலிருந்து ஒரு தோண்டி நீரைக் கொண்டு வருகிற விளையாட்டு இது. பெரிய தோண்டியாகவே இருக்கலாம். நம்மால் தூக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் சமுத்திரம் முழுவதையும் தோண்டியில் பிடித்துக் கொண்டு வந்ததாக ஆகுமா? நம்மால் முடிந்த அளவு நீர் கொண்டு வருவோம். ஒரே குடமானாலும் அதைப் பூரண கும்பமாகத் தர முடிந்தால் அதுவே பாக்கியம்தான்.

இச்சரிதையின் நாமகரணம் பற்றிச் சிறிது கூற வேண்டும். ஹரன் என்பது ஆண்டவனின் திருநாமங்களில் மிகவும் அழகியது. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் முதல் திருவந்தாதியிலேயே பகவன் நாமத்தைச் சொல்லப் புகுந்த பொய்கை ஆழ்வார் 'அரன் – நாரணன் நாமம்' என்று ஹர நாமத்துக்கு முதலிடம் தருகிறார். ஹரன் என்றால் கள்வன் என்று பொருள். நாமாகத் திருட்டுக் கொடுப்பது என்று உண்டோ? அவனாகத் திருடினால்தானே உண்டு? நம்மை அறியாமல், அறிந்தால் ஒருகால் நாம் எதிர்க்கவும் கூடிய நிலையில், அவன் உள்ளே புகுந்து நம்மைக் கொள்ளை கொள்ளும் நலத்தைக் குறிப்பிடுவது ஹர நாமம். 'உள்ளம் கவர் கள்வன்' என்று ஞானம்பிகையின் பாலை உண்டு பாலகப் பாடினாரே ஒரு பாலர், அவரும் 'ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க, வையகமும் துயர் தீர்கவே' என்று அருளியிருக்கிறார். இது குருநாதனுக்கு மிக மிகப் பிடித்தமான பாடல். 'அரன் நாமத்தை மட்டும் ஞான சம்பந்தர் கூறவில்லை. அரகர சங்கர என்று கோஷித்தே மதுரையில் நமது தருமத்துக்கு வெற்றி கண்டார்' என்று முக்காலமும் உணர்ந்த அருணகிரி பாடுகிறார்:

> மதுரையில் வெண்பொடியும் பரந்திட
> அரகரசங்கர என்று வென்றருள் புகழ்வேளா!

ஆதி சங்கரரின் சரிதையான 'ஜய ஜய சங்கர'வுக்கு ஆசியுரை அளித்த குருநாதன் 'ஜய ஜய சங்கர என்ற தலைப்புடனும், தீமையை அகற்றிச் சுகத்தைக் கொடுக்கும் ஹர ஹர சங்கர என்ற திருநாமத்துடனும், அந்நூல் விளங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். உண்மையில் அந்த நூலுக்கு 'ஹர ஹர சங்கர' என்ற திருநாமம் இடப் பெறவில்லை. பின் குருநாதன் ஏன் அப்படிக் கூறினார்? விடை இன்று தான் தெரிகிறது.



ஆஹா, கருணை என்னவெல்லாம் செய்து விடுகிறது? (தொடரும்)



முதல் பாடம்!

சென்ற நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஜான் ரஸ்கின் என்ற மிகப் புகழ் பெற்ற பேரறிஞர் இருந்தார். அவரது நூல் ஒன்றைப் படித்த பின், தாம் துறவியானதாகக் காந்தியடிகள் கூறுகின்றார். இத்தகைய பெரியார் கைக் குழந்தையாகத் தமது செவிலியின் இடுப்பில் இருந்தபொழுது ஒரு நாள் அடுப்பின் மீது கொதித்துக் கொண்டிருந்த கெட்டிலைத் தொட விரும்பிக் கையை நீட்டினார். "அப்பா, அது உன்னைச் சுடும். கையை நீட்டாதே!" என்று அன்னையார் கூறினார். ஆனால் குழந்தை நீட்டவே விரும்பியது. அப்போது தாயார் செவிலியிடம், "அவன் தொடட்டும், விட்டு விடு" என்றார். குழந்தை தொட்டது. "அதுவே நான் சுதந்திரம் என்னும் சொல்லின் பொருளை அறிந்துகொண்ட முதல் பாடம்" என்றார் ரஸ்கின்.


தகவல் : — சி. முத்துக்குமரன்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

உத்தமர்கள் நடுவே!

1825ஆம் ஆண்டு. பன்னிரண்டாம் லியோ என்ற போப்பாண்டவர் ஒரு சிறையைப் பார்வையிடச் சென்றார். அங்கிருந்த எல்லாக் கைதிகளையும் "நீ ஏன் சிறைப்பட்டாய்?" என்று கேட்டுக் கொண்டே சென்றார்.

ஒவ்வொருவனும் "நான் நிரபராதி. ஒரு பாபமும் அறியேன்!" என்றுதான் சொல்லிக் கொண்டு வந்தான். கடைசியில் ஒரே ஒருவன் மட்டும் போப்பின் காலில் விழுந்து, "ஆண்டவரே! நான் மகா பாதகம் செய்தேன். கள்ளக் கையெழுத்துப் போட்டேன்; கொலை செய்தேன். அதற்கெல்லாம் பிராயச்சித்தமாக இங்கே அவதிப்படுகிறேன்!" என்றான்.



இதைக் கேட்ட போப்பாண்டவர் புன்சிரிப்புடன், பின்புறம் திரும்பினார். சிறையின் தலைமை அதிகாரியைப் பார்த்து, "இந்த மாபாவியை உடனே வெளியே விரட்டுங்கள். இத்தனை உத்தமர்கள் நடுவே இவன் இருப்பது தகாது!" என்று உத்தரவிட்டார்.

— புவி. வேந்தன்

ஆதாரம்: 'மேதைகள் தமாஷ்'

அந்த நண்பன் யார்?



ஆங்கில இலக்கிய உலகில் நகைச் சுவை மன்னராகத் திகழ்ந்த ஜெரோம் கே. ஜெரோம் அவர்கள் தமது Idle thoughts of an idle fellow என்ற நூலை ஒரு நண்பருக்குச் சமர்ப்பணம் செய்து எழுதியிருப்பதாவது:

"என் அன்புக்குப் பாத்திரமானவனும், என்னால் ஆத்மார்த்தமாக நேசிக்கப்படுபவனுமான அந்த நண்பனுக்கு:

வளமான நாட்களிலும், வறுமை சூழ்ந்த நாட்களிலும் எனக்குத் துணை நின்ற அந்த நண்பனுக்கு,

யாருடன் என் ஆரம்ப காலப் பழக்க நாட்களில் அடிக்கடி ஒத்துப் போவதில் சிரமப்பட வேண்டியதாயிருந்தாலும், பின்பு நாள்பட நாள்பட எனக்கு மிக வேண்டிய தோழனாக ஆகி விட்டானோ அந்த நண்பனுக்கு,

என் வீட்டிலுள்ள மற்றவர்களின் வெறுப்புக்கு ஆளாகியும், என் அருமை நாய்க் குட்டியால் கூடச் சந்தேகக் கண்களால் கண்காணிக்கப் பட்டும், நாளுக்கு நாள் என்னால் மிகவும் நெருக்கமாக நேசிக்கப்படுபவனும், அதற்கும் பிரதிபலனாக, என்னைத் தன் நட்பு என்ற இனிய கரத்தால் மகிழ்விப்பவனுமான, அந்த நண்பனுக்கு,

என் குறைகளை என்னிடமே கூற முற்படாதவனும், என்னிடம் கடன் வாங்க முயலாதவனும், தன்னைப் பற்றித் தானே பீற்றிக் கொள்ளாதவனும், சோம்பல் நேரங்களில் என் உற்ற தோழனும்,

என் துக்கங்களைப் பகிர்ந்து ஆறுதல் கூறுபவனும்,

என் வெற்றிகளையும், என் நம்பிக்கைகளையும் பகிர்ந்து கொள்பவனும், ஆம், என் பழம் பெரும் நெருங்கிய சகாவுமான

அந்த நண்பனுக்கு இந்நூல் நன்றியுடன் அன்புடன் சமர்ப்பணம் செய்யப்படுகிறது."

ஜெரோம் கே. ஜெரோம் இவ்விதம் வாழ்த்துகிற அந்த நண்பன் யார் தெரியுமா? அவர் புகை பிடிக்க உபயோகித்த குழாயை - Pipe - த்தான் அப்படி அருமை நண்பனாக, உருவகப்படுத்தித் தம் நூலை அதற்குச் சமர்ப்பணம் செய்துள்ளார்.

— பி. சின்னசாமி

○ ○ ○ ○ ○ ○ ○ ○ ○

ஒரு நிபந்தனை

பால்டிமோர் என்ற இடத்தில் உள்ள மாதா கோவில் ஒன்றில் தொங்கும் அறிவிப்புப் பலகை: "கோவில் புல் தரையில் உங்கள் காரை நிறுத்துவதற்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் ஒரு நிபந்தனை. உங்கள் வீட்டுப் புல் தரையில் வாரம் ஒரு முறை உங்கள் காரை ஓட்டுவதாக நீங்கள் வாக்குறுதி அளிக்க வேண்டும்....!"



— ரம்யன்

அதிசய சைக்கிள்!



ஒரே சமயத்தில் ஆறுபேர் அமர்ந்து ஓட்டக் கூடிய 'ஐந்து சக்கர' சைக்கிளை மேற்கு ஜெர்மனியில் சில இளைஞர்கள் உருவாக்கி யுள்ளனர். இந்த வண்டியில் ஏழாவது நபரும் அமரலாம். இந்த சைக்கிளைப்போக்கு வரத்துக்குப் பயன் படுத்த போலீஸ் அதிகாரிகள் இன்னும் அனுமதி வழங்கவில்லை. எனினும் ஆறு இருக்கைகளுடன் மேலும் மூன்று இருக்கைகளைச் சேர்க்க இந்த இளைஞர்கள் முடிவு செய்துள்ளனர்.

''ஆசி கிடையாது போ!''

ஒரு முறை காந்திஜி மைசூர் ராஜ்யத்தில் உள்ள நந்திக்கோட்டை மலைக்குச் சென்று தங்கியிருந்தார். ராஜாஜியும் அவரோடு இருந்தார். ஒரு நாள் ஓர் அம்மையார் காந்திஜியைக் காண வந்தார். முதலில் ராஜாஜி அந்த அம்மையாருடன் கன்னடத்தில் பேசினர். பிறகு காந்திஜியைப் பார்த்து ''இந்த அம்மையாருக்கு மகப்பேறு தேவை. தாங்கள் மகாத்மாவாகையால் அதற்குத் தங்கள் ஆசிகளை வேண்டுகிறார்'' என்றார்.

''நான் மகாத்மா இல்லையே'' என்று கூறிய காந்திஜி, அந்த அம்மையாரைப் பார்த்து ''நீங்கள் ஏன் கிராமத்தில் உள்ள குழந்தைகளில் ஒன்றை எடுத்து உங்களுடைய தாக்கி வளர்க்கக்கூடாது?'' என்று கேட்டார்.

''எனக்குக் குழந்தை இல்லாத வேதனையை மறப்பதற்காக, வேறு பல குழந்தைகளுக்கு நான் உதவி செய்து வருகிறேன், மகாத்மாஜி!'' என்றார் அந்த அம்மையார்.



''அப்படியானால் நான் எப்படி ஆசி வழங்குவது? உங்களுக்கு ஒரு குழந்தை பிறந்தால், மற்றக் குழந்தைகளுக்கு உதவி செய்வதை நீங்கள் நிறுத்தி விடுவீர்களே!'' என்றார் காந்திஜி.

ஆதாரம் : காந்திஜியின் நினைவுகள்

தகவல் : கண்ணப்பன்

வெற்றிலையில் இருக்கிறது விஷயம்!

டைரக்டர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் அப்பொழுது கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் கம்பெனியில் இருந்தார். அவர் ஒரு நாள் சகோதரியின் திருமணம் நிச்சயமாகியிருப்பதைச் சொல்லி, கலைவாணரின் உதவியைப் பெற்று வரப் போயிருந்தார்.

கலைவாணரோடு இன்னும் பலர் பேசிக் கொண்டிருந்தனர். ஆகவே தயங்கித் தயங்கித் திருமண விஷயத்தை அவர் ஒரு வழியாக வெளியிட்டார். அதைக் கேட்ட கலைவாணர் உள்ளே போய் ஒரு தட்டில் வெற்றிலையைக் கொண்டுவந்து, ''இதை யெடுத்துக் கொள். கல்யாணம் நல்ல முறையில் நடக்கட்டும்'' என்று வாழ்த்தினர்.

உதவிக்கு வந்த இடத்தில் வெற்றிலை தான் கிடைத்ததை யெண்ணி அவர் வருத்தப்பட்டார். ஆனல் வெளியே வந்து அந்த வெற்றிலையைப் பார்த்த போது வெற்றிலைக்கு இடையில் ரூபாய் நோட்டுகள் - அவர் எதிர்பார்த்து வந்த தொகையைவிட அதிக அளவில் - வைக்கப்பட்டிருந்தன!



—'எம். எம். கே.'


Shilpi-GRA-331ATam
தனிமையிலோ, மற்றவருடனோ,
ஆயுட்கால ஆனந்தத்தை அளிக்கும் உறுதுணை—
பை !
மாடல் 3029: 6 வால்வுகள், 3 பாண்டுகள்,
மாற்றியமைக்கக்கூடிய தொனிக் கட்டுப்பாடு.
லோஸின் மரக் காபினெட். ஏஸி மட்டும்.
விலை ரூ. 405/-*
மாடல் 3031: மாடல் 3029ஐப்போலவே.
ஆனால் ஏஸி/டிஸி. ரூ. 405/-*
மாடல் 3034: 4 வால்வுகள்,
3 பாண்டுகள், சக்தி வாய்ந்த
ஒலிபெருக்கி. கவர்ச்சிகரமான காபினெட்.
ஏஸி/டிஸி. விலை ரூ. 245/-*
மாடல் 3028:
6 வால்வுகள், 5 பாண்டுகள், பியானோ
கீக்கள், சுழலும் ஃபெர்ரைட் ஏரியல்,
லோஸின் மரக் காபினெட்.
ஏஸி மட்டும். ரூ. 668/-*
மாடல் 3027: 5 வால்வுகள்,
3 பாண்டுகள், 2-டோன் வார்ப்படம்
செய்த காபினெட், சக்தி வாய்ந்த
ஒலிபெருக்கி, ஏஸி/டிஸி. விலை ரூ. 303/-*
PYE
*விலைகள் எக்ஸைஸ் வரி மாத்திரம் அடங்கியவை.
விற்பனை வரி மற்றும் உள்ளூர் வரிகள் தனி.
பை லிமிடெட், கேம்ப்ரிட்ஜ், இங்கிலாந்து,
அவர்களின் சார்பில், நேஷனல் ரேடியோ அண்ட்
என்ஜினீயரிங் கோ. லிட்., பம்பாய்-1
அவர்கள் பை ரேடியோக்களைத் தயாரிக்கின்றனர்.
ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸஸ் லிட்.,
பை ரேடியோ டிவிஷன்
பம்பாய், பெங்களூர், கல்கத்தா, டெல்லி,
மதராஸ், பாட்னா, செகந்திராபாத்.


முள்ளும்
மலரும்
* உமாசந்திரன்
வெள்ளி
விழா
பரிசுத்திட்டம்
ரூ.10,000
முதல் பரிசு
நாவல்

அத்தியாயம் 1

வள்ளியின் மனத்தில் மகிழ்ச்சி பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தது. எங்கு திரும்பினாலும் அவளை வரவேற்கக் காத்திருக்கும் வண்ண மலர்கள் காலை இளம் தென்றலில் களிநகை புரிந்து கொண்டிருந்தன. இவ்வளவு மலர்கள் நிறைந்த இடம் இப்படியொன்று இருப்பதை அவள் இத்தனை நாட்களும் கவனிக்காதது ஆச்சரியம்தான்.

அதே வழியாக அவள் எத்தனை தடவை அருவிக் கரைக்குச் சென்றிருக்கிறாள். ஆனால் ஒரு நாளாவது அந்த மலர்கள் அவள் கண்ணில் படவில்லையே. பாதையோரமாயிருந்த பாறைக்குப் பின்னால் அவை மறைந்து போயிருந்ததனாலா? இன்று தான் பாறைக்கு மேலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு மலர்க் கொத்து அவள் கவனத்தைக் கவர்ந்தது. அதை எட்டிப் பறிப்பதற்காகத்தான் அவள் அந்தப் பாறையைச் சுற்றி மறுபக்கம் சென்றாள். என்ன ஆச்சரியம்! தங்கரளியும், பாரிஜாதமும், மந்தாரையும், பாதிரியும் இன்னும் எத்தனையோ வகை வகையான மலர்க் கூட்டங்களும் அந்தப் பள்ளமான பகுதியில் நிறைந்து மணம் பரப்பிக் கொண்டிருந்தன. அப்படி ஒரு கண் கொள்ளாத காட்சி அங்கே அவளுக்காகக் காத்திருக்குமென்று அவள் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

அந்த மலைப் பகுதியில் மலர்ச் செடிகளுக்கும் கொடிகளுக்கும் பஞ்சமில்லைதான். ஆனால் இவ்வளவும் காட்டு மலர்கள். கண்ணைப் பறிக்கும் அந்த மலர்களில் ஒன்று மணமே இருக்காது. அல்லது நாற்றம் மூக்கைத் துளைப்பதாக இருக்கும். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் வள்ளி, கன்னிமலை கௌரியம்மன் கோவிலுக்குப் போகும்போது அம்மனுக்குச் சாத்துவதற்காக மாலை கட்டி எடுத்துப் போவாளே, அதற்கு வேண்டிய அரளி மலர்களையும், கொன்றை மலர்களையும் அந்தக் காட்டுப் பிரதேசத்தில் தேடித் தேடிப் பறித்து வருவதற்குள் போதும் போதுமென்று ஆகி விடாதா? இங்கு சேர்ந்தாற்போல் அம்மனுக்குப் பிடித்தமான இவ்வளவு மலர்கள் நிறைந்திருப்பதைக் கண்டதும் அவள் குதூகலத்துக்கு எல்லையே இல்லை. துள்ளும் உவகையுடன் பாறைகளில் தாவித் தாவிக் கைக்கெட்டிய மலர்களையெல்லாம் பறித்து மடியில் நிரப்பிக் கொண்டிருந்தாள் வள்ளி.

இவ்வளவு மலர்களையும் அவள் என்ன செய்யப் போகிறாள்? அவளுக்கே தெரியாது. மாலையாகக் கட்டினால் கன்னிமலைக் கௌரியம்மனுக்குச் சாத்தலாம். ஆனால் இன்று வெள்ளிக் கிழமைகூட இல்லையே! இல்லாவிட்டால் என்ன? மற்ற நாட்களில் மாலை சாத்தக் கூடாதென்று உண்டா? அதுவும் இவ்வளவு அழகு கொஞ்சும் மலர் கிடைக்கும்போது ஒவ்வொரு நாளும் மாலை கட்டி எடுத்துக் கொண்டு கன்னிமலை கௌரியம்மன் கோயிலுக்குப் போய் வரவேண்டுமென்று தோன்றுகிறதே!

வள்ளிக்குச் சிரிப்பு வந்தது. ஒவ்வொரு நாளும் கன்னிமலைக்குப் போய் வருவதாவது! அவள் அத்தை அதற்குச் சம்மதிக்க வேண்டாமா? வெள்ளிக் கிழமையன்று அங்கு போய் வருவதற்கே அத்தையின் சம்மதத்தைப் பெறுவதற்குப் படாத பாடு படவேண்டியிருந்தது. அதுகூட எப்படி? ஒவ்வொரு வாரமும் அருவிக்கரை மங்காவைத் துணைக்கு அழைத்துப் போக வேண்டும் என்று அத்தை கண்டிப்பாகச் சொல்லிவிட்டாளே! எந்த வெள்ளிக்கிழமையாவது மங்கா வர முடியாதபடி அசௌகரியம் நேர்ந்து விட்டால் அன்று வள்ளி வீட்டில் இருந்தபடியேதான் கௌரியம்மனைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டுமென்று கூறிவிடவில்லையா? ஆனால் அருவிக்கரை மங்காவிடம் வஞ்சனையே கிடையாது. வள்ளி அவளை எப்போது எங்கு கூப்பிட்டாலும் உடனே வந்து விடுவாள். அதுவும் கன்னிமலைக்கு வள்ளியுடன் போவதென்றால் அவளுடைய உற்சாகத்துக்கு அளவே இருக்காது. அதற்குக் காரணம் இருந்தது. கன்னிமலைக்கு வள்ளி மற்றவர்களைப் போலச் சுற்றி வளைத்துக் கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லையல்லவா? செங்குத்தான மலைச் சரிவில் இறங்குவதற்கு உபயோகமாகும் விஞ்ச் ட்ராலியை ஓட்டும் வேலை வள்ளியின் அண்ணனது பொறுப்பில்தானே இருந்தது. கீழே பவர் ஹவுஸுக்குச் செல்லும் அந்தச் சரிவின் நடுவழியில் இறங்கிக் கொண்டால் அங்கிருந்து கன்னிமலை கூப்பிடு தூரத்தில்தான் இருந்தது. ட்ராலியில் அந்த வழியாகச் செல்லும் சலுகையை வள்ளிக்கு அளித்திருந்தான் காளியண்ணன். வள்ளியுடன் அந்த விஞ்ச் ட்ராலியில் அந்தச் செங்குத்தான சரிவில் இறங்கிச் செல்லும்போது மங்கா குழந்தைக் களிப்புடன் கைகளைக் கொட்டி ஆர்ப்பரிப்

பாள். சிலசமயம் தலை சுற்றிக் கீழே விழுவது போன்ற பயம் அவளுக்குத் தோன்றி விடும். அப்போதெல்லாம் வள்ளியை இறுகக் கட்டிக்கொண்டு விடுவாள்.

மங்காவின் அந்தக் குழந்தை சுபாவத்தை நினைத்து மனத்துக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள் வள்ளி. அதே சமயம் மங்காவின் முரட்டுக் குணங்களும் பிடிவாதமும் அவள் நினைவுக்கு வந்தன. அவள் அம்மா அவளை எப்படியெல்லாம் நிர்த்தாட்சணியமாக அடித்து விடுவாள்! ஆனால் மங்காவின் உடம்பில் ஏதாவது உறைத்தால்தானே! இவ்வளவையும் துடைத்துப் போட்டுவிட்டு ஆனந்தமாகச் சுற்றிக் கொண்டிருப்பாள் அவள்.

"சோத்துக்குக் கேடா இப்படி வளர்ந்திருக்கியே. நீயும் என் கூட வந்து வேலை செய்தாக் கூட நாலு காசு கெடைக்குமா இல்லையா? அந்தத் துப்பு உனக்கு ஏன் தோண மாட்டேங்குது?" என்று கரித்துக் கொட்டுவாள் மங்காவின் தாயார்.

"வேலையெல்லாம் செய்ய என் ஒடம்பு வணங்காதம்மா" என்று சிரிப்பாள் மங்கா.

"வேலை தவுருமே சோறு கொட்டிக்கறதுக்கு மட்டும் ஒடம்பு வணங்குதோ?"



ஸ்ரீ உமாசந்திரன்

"எனக்குச் சோறுபோடாமே வேறே யாருக்குப் போடப் போறே?"

"எதுத்தா பேசறே?" என்று பல்லைக் கடித்தவாறு கையிலிருந்த விறகுக் கட்டையை அவள் மேல் வீசி எறிவாள் வெள்ளாத்தாள். அந்தக் கட்டை தன் மேல் படாமல் ஒதுங்கிக் கொண்டு இடி இடியென்று சிரிப்பாள் மங்கா.

ஒரு வருடத்துக்கு முன்னால்தான் மங்காவுடன் அந்த மலைப் பகுதிக்கு வேலை தேடி வந்திருந்தாள் வெள்ளாத்தாள். அந்த நாள் வள்ளிக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. அன்று அஞ்சலையத்தை விறகொடித்து வருவதற்காக வெளியே சென்றிருந்தாள். காளியண்ணனுக்கு அன்று 'டூட்டி' இல்லாததால் மதகுக் கரைக்கு மீன் பிடிக்கச் சென்றிருந்தான். வள்ளி மட்டும் வீட்டில் தனியே இருந்தாள். துணி துவைக்கும் வேலையை அன்று வைத்துக் கொண்டிருந்தாள். வீட்டுக்குப் பின்னாலேயே ஓடிக் கொண்டிருந்த வீரன் வாய்க்காலில் துணி துவைப்பதை ஒரு விளையாட்டாகவே கருதி வந்தாள் வள்ளி. வாய்க்காலில் துணிகளைத் துவைத்து வெய்யிலில் காயப் போட்டு விட்டு வள்ளி வேலிக்கு வெளியே மேய்ந்து கொண்டிருந்த வெள்ளாட்டைப் பின்னங்கால்களைப் பிடித்துக் கரகரவென்று இழுத்து வந்தாள். சற்றுத் தள்ளி ஒன்றுக்கொன்று மண்டையை மோதி விளையாடிக் கொண்டிருந்த குட்டிகள் இரண்டும் தாயை நோக்கித் துள்ளிப் பாய்ந்து வந்தன. தாயின் மடியை அவை முட்டி முட்டிப் பால் சுரக்கச் செய்யும் வரை காத்திருந்த வள்ளி அவற்றைக் காலால் தள்ளிவிட்டுத் தன் கையிலிருந்த செம்பில் விளிம்புவரை பாலைக் கறந்து உள்ளே எடுத்துச் சென்றாள். தன் கடமை தீர்ந்தது என்று நினைத்தது போல் தாய் ஆடு மேயச் சென்றதும் குட்டிகளும் துள்ளிக் குதித்துக் கொண்டு அதன்பின்னே சென்று விட்டன.

பாலை அடுப்பில் வைத்து விட்டு வள்ளி வெளியே வந்தபோதுதான் மங்காவும்அவள் தாயாரும் சோர்ந்த நடையுடன் அந்த வழியே வருவதைப் பார்த்தாள். சோறு கண்டு பல நாட்கள் ஆகியிருக்கும் போலிருந்தது அவர்கள் தோற்றம். மேலெல்லாம் தூசியும் தும்பும் படிந்து பசியால் துவண்டு விழுந்து விடுபவர்களைப் போல் தள்ளாடித் தள்ளாடி வந்து கொண்டிருந்த அவர்களையே பார்த்தவாறு வள்ளி நிலைப்படியருகே நின்றுவிட்டாள். எந்த விதத்தில் அவர்களுக்கு உதவி செய்யலாம் என்று சிந்திக்கத் தொடங்கியது அவள் மனம். அதே சமயம் மங்காவும் அவள் நிற்பதைப் பார்த்து விட்டாள். தாயின் தோளைப் பிடித்து உலுக்கி அவள் ஏதோ கூறியதும் தாயாரும் அவள் பக்கம் திரும்பிப் பார்த்தாள். இருவரும் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து வேலியைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தவாறு நின்றனர்.

மங்கா வள்ளியைப் பார்த்துச் சிரித்தான். அந்தச் சிரிப்பு வள்ளியைக் கவர்ந்து இழுத்தது.

''இந்தப் பக்கத்துக்குப் புதிசா நீங்க?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் சென்றாள்.

''எதுவும் கேட்காதே கண்ணு. இம்மாஞ் சோறு இருந்தாக் குடு. கஞ்சித் தண்ணி இருந்தாக் கூடப் போதும். நிக்கக்கூடத் திராணியில்லே உடம் பிலே'' என்றாள் தாயார்.

''உள்ளே வாங்க'' என்று இருவரையும் உள்ளே அழைத்துச் சென்றாள் வள்ளி.

அன்று காளியண்ணனுக்கு ''டூட்டி'' இல்லா தது நல்லதாய்ப் போயிற்று. இருந்திருந்தால் பானை யில் மிஞ்சியிருந்த பழைய சோற்றை யெல்லாம் அவன் சாப்பிட்டு விட்டுப் போயிருப்பான். மீன் பிடித்து முடிந்ததும் வீட்டுக்கு வரும்போது அசுரப் பசியோடுதான் வருவான் என்று வள்ளிக்குத் தெரி யும். ஆனால் அப்போது ஏதாவது சமாதானம் சொல்லிக் கொள்ளலாம், அல்லது அதற்குள் உலை



யேற்றி ஆறாக்குச் சோறு பொங்கி வைத்து விடலாம் என்ற நம்பிக்கை யுடன் பானைப் பழையதைப் பிழிந்து இரண்டு மண்வட்டில்களில் போட்டாள்.

வெள்ளாத்தாள் தாழ்வாரத்திலேயே துவண்டு படுத்து விட்டாள் ஆனால் மங்கா சற்றும் பேதமில்லாமல் அடுப் பறைக்கு வந்து சுற்று முற்றும் பார்த்தாள். அடுப்படியில் வள்ளி செம்பில் கறந்து வைத் திருந்த பால் அவள் கண்களில் பட்டது.



''அடேடே...பாலா!'' என்று ஆவலுடன் கூறியவள் மறு கணமே செம்புப் பாலை எடுத்து ஒரே மூச்சில் குடித்துவிட்டுக் காலிச் செம்பைக் கீழே உருட்டிவிட்டாள். அந்தச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் வள்ளி. மங்கா பாலின் ருசியை வாயிலிருந்து அகற்றிவிட முயற்சி செய்பவள் போல் வாயைக் கோணி உதட்டையும் நாக்கையும் சேர்த்துக் கூட்டி விழுங்கியவாறு முகத்தை ஆயிரம் கோரணி செய்து கொண்டிருந்தாள்.

''ஆட்டுப் பால் போலேயிருக்கு... தா'' என்றாள் வள்ளியைப் பார்த்து.

வள்ளி சிரித்தாள். ''அத்தைக்காகக் கறந்து வச்சிருந்த பாலாச்சே அது. ஆட்டுப் பால்தான் அத்தை உடம்புக்கு ஒத்துக்கும் '' என்றாள் வள்ளி.

''என் ஒடம்புக்கு எருமைப் பால்தான். போன வருஷம் வரைக்கும் மூணு எருமை இருந்தது எங்க வீட்டிலே. ஒண்ணுக்குப் பின்னாலே ஒண்ணா மூணும் செத்துப் போச்சு. அப்புறம் அங்கே பொழைக்க வழியேது! அதனாலேதான் பொறப்பிட்டு வந்திட்டோம்.''

''ஏ மங்கா! வாயை மூடிக்கிட்டிருக்க மாட்டே?'' என்று கத்தினாள் வெள்ளாத்தாள் தாழ்வாரத்திலிருந்து.

''உள்ளத்தைத்தானே சொல்றேன், ஆத்தா...'மலே மேலே என்னென்னமோ வேலே நடக்குது, அங்கே போயி ஏதாச்சும் வேலே செய்து பொழைச்சுக்கிடலாம்'னு சொல்லிட்டுத்தானே ஊரலேந்து பொறப்பிட்டே நீ.''

''சரி, சரி! வாயை மூடு'' என்றாள் தாயார் மறுபடியும்.

''இந்த ஆத்தா எப்பவும் இப்படித்தான். தனக்குப் பேச வாயில்லாட்டி என் வாயை மூட வந்திடும்'' என்று சிரித்தாள் மங்கா.

''வட்டில்லே சோறு போட்டு வச்சிருக்கேன். அம்மாவையும் கூப்பிடு சாப்பிட'' என்றாள் வள்ளி.

''ஆத்தோவ் சோறு'' என்று கத்தினாள் மங்கா.

''சீ... ஏன் கத்தறே? காணாததைக் கண்ட மாதிரி?'' என்று எரிந்து விழுந்தவாறு உள்ளே நகர்ந்து வந்தாள் வெள்ளாத்தாள். மங்கா கேலியாகச் சிரித்தாள் அவளைப் பார்த்து.

''ஏன் ஆத்தா, நாலு நாளா சோத்தையே கண்ணாலே கண்டிருப்பியா? நீயே சொல்லு'' என்றாள்.

''அதுக்காக... இப்படித்தான் கத்தணுமா?'' என்று முணு முணுத்தாள் தாயார்.

''அக்காவ்... இதென்ன வெறும் சோத்தை வெச்சிருக்கே! கடிச்சிக்கிடறதுக்கு?'' என்றாள் மங்கா.

மங்காவின் மண்டையில் ஓர் இடி இடித்தாள் வெள்ளாத்தாள்.

''கடிச்சிக்கிடறதுக்கு வேறே கேக்குதோ? மூச்சுக் காட்டாமே போட்டதைச் சாப்பிடு'' என்று பல்லைக் கடித்தாள் வெள்ளாத்தாள்.

வள்ளிக்குக் கஷ்டமாக இருந்தது. மரவையிலிருந்து உப்பும் மிளகாயும் எடுத்து வந்து வட்டிலில் போட்டாள். ''கறி, ஊறுகாய், துவையல் எதுவும் கிடையாதா?'' என்று சிணுங்கியவாறே மிளகாயை உப்பில் தோய்த்துக் கடித்த மங்கா ''ஆஷ்ஷ்.. இதுகூட நல்லாத்தான் இருக்கு!'' என்று உறைப்பை ரசித்துக் கொண்டே சோற்றை அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டாள். மறுகணம் ''தண்ணி, தண்ணி'' என்று கத்தியவாறு தவிக்க ஆரம்பித்தாள்.

''பெரிய ரோதனே உன்னாலே''என்று மறுபடியும் அவள் மண்டையில் இடித்தாள் அவள் தாயார்.

ஆனால் மங்கா அதை லட்சியம் செய்தால்தானே? வள்ளி கொண்டு வந்து வைத்த தண்ணீரை ஒரே மூச்சில் குடித்துவிட்டு, பாத்திரத்தை ''ணங்'' என்று கீழே வைத்தாள்.

''ஏன் அப்படி வைக்கிறே....மண் குவளையா யிருந்தால் இந்நேரம் தூள் தூளாயிருக்காதா?'' என்றாள் தாயார்.

''அதுதான் மண் குவளை இல்லேயே, நீ ஏன் கெடந்து அலட்டிக்கறே?'' என்று கூறிய மங்கா வட்டில் சோற்றைக் காலி செய்வதில் முனைந்தாள்.

அப்போது, ''வள்ளி... யாரு வந்திருக்காங்க?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் காளியண்ணன்.

வாயில் சோற்றை அள்ளிப் போட்டுக் கொண்டிருந்த மங்கா அவனை நிமிர்ந்து பார்த்தாள். காளி அவள் பக்கம் திரும்பாமல் மீன்கள் நிறைந்த ஓலைக் கூடையை ஒரு பக்கம் வைத்துவிட்டுத் தூண்டில் குச்சியைச் சுவரில் மாட்டினான்.

''ஆத்தோவ்... மீனு...'' என்று கத்தினாள் மங்கா. அதோடு நிற்கவில்லை அவள். ஓலைக் கூடைக்குள் கையை விட்டு ஒரு கெண்டை மீனை எடுத்து அப்படியே கடித்துச் சுவைக்க ஆரம்பித்துவிட்டாள்.

''ஆ ஹ்ஹ்! ... ரொம்ப ஜோரா யிருக்கு... மொளகா, உப்பு, மீனு

மூணும் சேர்ந்து மீன் கறி மாதிரியே இருக்கு...'' என்று ரசித்தபடியே இன்னும் இரண்டு மூன்று மீன்களைக் கையில் அள்ளி எடுத்தாள்.

சட்டென்று திரும்பி அவளை முறைத்துப் பார்த்தான் காளி.

''இந்தக் காட்டுமிராண்டியை எங்கே புடிச்சே?'' என்றான் எரிச்சலுடன்.

''காட்டுமிராண்டி ஒண்ணுமில்லே. எல்லாம் நாட்டுமிராண்டிதான்'' என்றாள் மங்கா முறைப்புடன்.

''காட்டு மிராண்டிதான் பச்சை மீனைத் தின்னும்.''

''என்னைப் போலப் பசியா யிருந்தா அப்பத் தெரியும்.''

அவள் முதுகில் ஓங்கிக் குத்தினாள் வெள்ளாத்தாள். ''பசின்னு இன்னொரு தரம் சொன்னே, வெட்டிப் புடுவேன், வெட்டி!'' என்று கத்தினாள்.

''ஆமாம் வெட்டுவே... நீ வெட்டற வரைக்கும் சும்மா நிக்க நான் என்ன மரமா?'' என்றாள் மங்கா.

''மரத்துக்காவது கொஞ்சத்துக்குக் கொஞ்சம் அறிவு இருக்கும். முன்னைப் பின்னே பழக்கமில்லாத இடத்திலே எப்படி நடந்துக்கிறதுங்கற துப்புகூட இல்லையே ஒனக்கு'' என்றாள் தாயார்.

''இப்ப நான் நடந்துக்கிட்டதிலே என்ன தப்பு? ஏன் அக்கா, நீயே சொல்லு'' என்று வள்ளியின் கையைப் பிடித்து இழுத்தாள் மங்கா.

காளியண்ணன் வள்ளியைப் பார்த்து முறைத்தான்.

''வள்ளி, கண்டவங்க சகவாசமெல்லாம் நமக்கு வேண்டாம். காலா காலத்திலே சோத்தைத் தின்னுட்டுப் போகச் சொல்லு'' என்று கடுமையான குரலில் கூறிவிட்டு வாய்க்காலில் குளித்து வருவதற்காகச் சென்று விட்டான் காளியண்ணன்.

காளியண்ணனின் அந்தக் கடுமையை நினைத்துச் சிரித்தவாறு வள்ளி மடி கொண்ட மட்டும் மலர் பறித்துக் கொண்ட திருப்தியுடன் ஒரு பாறையில் வந்து உட்கார்ந்து கொண்டாள். **(தொடரும்)**

கல்கி முதல் இதழ் அன்று...



இரண்டாவது உலக யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த சமயம். ஜப்பானியர் படையெடுப்புக்கு அஞ்சிச் சென்னை நகரைக் காலி செய்துகொண்டு மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். எழும்பூர் ரயில் வண்டி நிலையத்திலிருந்து பீதியடைந்த மக்களை வெளியேற்றிச் செல்வதற்காக 'ஸ்பெஷல் வண்டிகள்' வேறே விட்டு வந்தார்கள். அந்தத் தருணத்திலே தான் கல்கியின் முதல் இதழ் வெளியாயிற்று.

முதல் இதழ் வெளியான அன்று, ஆசிரியர் 'கல்கி' அவர்கள் தியாகராய நகரில் நண்பர் ஒருவர் வீட்டிலிருந்து காரியாலயத்திலிருந்த என்னை டெலிபோனில் அழைத்தார். அவர் வெளியே எங்கு சென்றிருந்தாலும், அடிக்கடி டெலிபோனில் அழைத்து என்னையும், ஆசிரியர் குழாத்திலுள்ள மற்றவர்களையும் உற்சாகப்படுத்தி உரையாடுவது வழக்கம். அவ்வாறேதான் முதல் இதழ் வெளியீடு தினத்தன்றும் போனில் அழைத்தார். ''படை யெடுப்புக்குப் பயந்து ரயிலேறும் கூட்டம் இன்று எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார்.

''ரயில்வே ஸ்டேஷனில் படையெடுப்பு பீதியில் மாறுதல் இல்லை. ஆனால் நம் காரியாலயத்திலும் படையெடுத்திருக்கிறார்கள். ஒரே அமர்க்களப் படுகிறது!'' என்று கூறினேன்.

அவர் சிரித்துவிட்டு, ''காரியாலயத்தில் படையெடுப்பா? என்னப்பா சொல்கிறாய்?'' என்று வினவினார்.

''பத்திரிகை விற்கும் ஏஜண்டுகள், வாசகர்கள் இவர்கள்தான் படையெடுத்துத் தங்களுக்குக் கல்கி பிரதி கொடுத்தால்தான் போவோம் என்கிறார்கள்!''

போனின் மறுபக்கம் ஆசிரியரின் உரத்த சிரிப்பொலி முழங்கிற்று. ''இந்தப் படையெடுப்பைப் பற்றியெல்லாம் நீங்கள் பீதியடைய வேண்டாம். சதாசிவம் அவர்கள் சமாளித்துக்கொள்வார். நானும் டி. கே. சி.யும் இன்னும் சற்று நேரத்தில் 'எலக்ட்ரிக் டிரெயி'னில் வருகிறோம்!'' என்றார். —**''கதிர்''**

கல்கி

வெள்ளிவிழா பரிசுத் திட்டம்

ஸவிதா

என். பத்மா

ரூ 1000 முதற் பரிசுச் சிறுகதை

இரண்டு நாட்களாகக் கை, கால் ஓடவில்லை. ''முட்டாள்! மடையன்!'' என்றெல்லாம் வாய் ஓயாமல் திட்டியும் மனத்தின் கொந்தளிப்பு அடங்கவில்லை. எத்தனையோ தற்கொலைகளைப் பற்றிச் செய்தித் தாள்களில் படித்திருக்கிறோம். 'கோழை, வாழத் தெரியாதவன்' என்று சுருக்கமாகத் தீர்ப்பளித்து விட்டு நிம்மதியாக இருந்து விடுகிறோம். ஆனால், நமக்கு வேண்டியவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டு விட்டதாகக் கேள்விப்படும்போது அப்படி இருந்துவிட முடிகிறதா? பட்டாச்சார்யாவின் மன அடித்தளத்தில் எழுந்த அலைகளில் எது விசுவரூபம் எடுத்து, அவரைத் தற்கொலை என்ற கரைக்கு ஒதுக்கித் தள்ளியதோ என்று புரியாமல் நாங்கள் படும் வேதனை.... கோர்ட்டிலிருந்து மயானம் வரை திரிந்து அவருடைய கடைசிக் காரியங்களில் ஈடுபட்டிருந்ததால் என் கணவருக்கு இதைப் பற்றியெல்லாம் என்னுடன் விவாதிக்க நேரமே இல்லை.

''உன் ஸவிதாவால் வந்த வினை இது; அவளைப் பற்றிய அவதூறுகளைக் கேட்டுக் கேட்டு மனம் வெம்பி இறந்திருக்கிறான் கோகுல். எப்போது இவனுடன் வந்து குடித்தனம் செய்ய அவளுக்கு இஷ்டமில்லையோ, அப்பவே தெரியவில்லையா அவள் பவிஷு.'' — வார்த்தைகளைக் கொட்டி விட்டு அடங்கி விட்டார் என் கணவர். 'ஸவிதா குற்றவாளி' என்று 'நாலு பேருடன்' சேர்ந்து இவரும் தீர்ப்பளித்து விட்டார். ஆனால் என் ஸவிதாவைப் பற்றி என் மனம் அப்படி நினைக்க மாட்டேனென்கிறதே! புடம் போட்ட பொன் அவள் மனமென்று இன்னமும் என் உள்ளம் தனிக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறதே!

★



பத்து வருஷங்களாக வங்காளத்தில் இருக்க நேர்ந்தும், வேரூன்ற முடியாமல், ஒட்டியும் ஒட்டாமலுமே இருந்து வந்தோம். தமிழ்ச் சங்கம், தென்னிந்திய சிநேகிதர்கள் என்று குறுகிய சந்துகளிலேயே உழன்று கொண்டிருந்த எங்களுக்கு மற்ற மாகாணத்தவர்களும் நம் மனிதர்கள்தான் என்ற உணர்வை ஏற்படுத்தினவர்கள் ஸவிதாவும் கோகுல் பட்டாச்சார்யாவும் தான். சங்கீத ஆர்வம் எங்களுக்குள் பாலமாக அமைந்தது. தமிழ்ச் சங்க செயலாளரான என் கணவர் ஒரு நாள் அவர்களை எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து, ''மீட் மிஸ்டர் அண்டு மிஸஸ் பட்டாச்சார்யா; இவர்கள் 'ரவீந்திர சங்கீதத்'தில் தேர்ச்சி பெற்றவர்கள். நம் சங்கத்தில் பாடப் போகிறார்கள்'' என்று எனக்கு அறிமுகம் செய்த போது, இவர்களுடன் ஒரு நெருக்கமான, அழகான உறவு எனக்கு ஏற்படுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. வழக்கம்போல் முகத்தின் தசைநார்களை இறுக்கிக் கொண்டு ஒரு 'ரெடிமேடு' புன்னகையுடன் தான் அவர்களை வரவேற்றேன். (சமூகத்தில் பெரும்பான்மையோருடன் பழகும்போது முகத்துக்குத்தானே வேலை—மனம் தூங்கத்தானே செய்கிறது!) ஆனால் வெகு



விரைவிலேயே ஸவிதாவின் கலகலப்பான சுபாவம் என்னை இயற்கையாக இருக்கச் செய்து விட்டது.

''டீ கொடுத்து எங்களை ஏய்த்து விடாதீர்கள்; உங்கள் காப்பிதான் எங்களுக்கு வேண்டும்'' என்ற அவளுடைய விளையாட்டு உத்தரவிலிருந்து, ''இந்தப் புடவை உங்களுக்கு அழகாக இருக்கிறது!'' என்ற செயற்கைக் கலப்பில்லாத அவளுடைய புகழுரைவரை எல்லாமே எனக்குப் பிடித்து விட்டன. அவளுடைய கலகலப்பும், கோகுலின் நேர்மாறான அமைதியான கம்பீரமும் பார்க்க விநோதமாக இருந்தன.

கோகுல் பட்டாச்சார்யாவின் வாய் புன்னகையில்கூட அளவாகத்தான் விரியும். அளந்து நிதானத்துடன் இருக்கும் கோகுலா ஆத்திரக்காரன்போல் இப்போது தற்கொலை செய்து கொண்டிருக்கிறான். இந்தப் புதிருக்கு விடைதான் என்ன?

★

சில நாட்களிலேயே எங்களுடன் பட்டாச்சார்யா தம்பதிகளுக்கு நெருக்கமான பழக்கம் ஏற்பட்டு விட்டது. அவர்களுடன் பழகப் பழக அவர்களிடம் எங்களுக்கு இருந்த அன்பும் மதிப்பும் அதிகரித்தன. அவர்கள் இருவரையும் போன்ற மனமொத்த தம்பதியைப் பார்ப்பதே ஓர் ஆனந்தமென்று எனக்குத் தோன்றும். ஸவிதா கல்கத்தாவில் ஒரு நர்ஸாக இருந்தாள். அவளுக்கு மணத்திலேயே நாட்டம் இருக்கவில்லையாம். குழந்தைப் பருவத்திலிருந்தே நெருங்கிப் பழகிய கோகுல் அவளை மணந்து கொள்ள ஆசைப்படுவதை அறிந்த ஸவிதாவுக்கு அதிர்ச்சியாகத்தான் முதலில் இருந்தது. தனக்கு அதில் விருப்பமில்லாததைக் கூறி மறுத்து விட்டாள். 'தொண்டு தொண்டு' என்று உயிரை விடும் அவள் மனத்தை இல்வாழ்வுக்குத் திருப்ப முடியாதென்று கோகுலுக்குக் கூடிய சீக்கிரமே புரிந்து விட்டது. சில நாட்கள் வறட்டு வேதாந்தங்களைப் பிரசங்கம் செய்து விட்டு, பிறகு நாளாவட்டத்தில் இல்லறச் சேற்றில் முழுமையாக அமிழ்ந்துவிடும் வாய்ச் சொல் வீரர்களைச் சேர்ந்தவள் இல்லை ஸவிதா என்பதும் கோகுலுக்குத் தெரியும். ஒவ்வொரு நூற்றாண்டிலும் தோன்றும் மிகச் சில லட்சியப் பிறவிகளில் தன் மனைவியும் ஒருத்தி என்பது அவனுடைய உறுதியான நம்பிக்கை. இவ்வளவையும் நன்றாக உணர்ந்தும் இந்தக் கல்யாணத்தில் ஒன்றையுமே எதிர்பாராமல், ஸவிதாவின் கணவனாக அவளுக்குப் பாதுகாப்பு அளிக்க மட்டும் அவளை மணந்து கொண்டாரென்றால் கோகுலின் அன்பின் வலிமையை என்னவென்று சொல்வது ! எந்தப் பலவீன விநாடியில் திருமணத்துக்கு ஸவிதா சம்மதித்தாளோ தெரியாது; ஆனால் அவள் தன் வேலையை விட்டு விட்டு இருநூறு மைல்களுக்கப்பால் இருந்த கோகுலுடன் நிரந்தரமாக வந்திருக்க மறுத்து விட்டாள். ஓய்வு நாட்களில் தவறாமல் இங்கு வந்ததால் எனக்கு அவளுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

இந்தத் தம்பதியின் இந்த விசித்திரமான ஏற்பாட்டினால் கோகுலுக்கு எவ்வளவோ துன்பம்தான்.

நானும் அவளை இங்கு வரவழைக்க ஸவிதாவுடன் பலவிதமாகவும் பேசிப் பார்த்தேன். '' 'பட்சார்ஜீ'க்கு (பட்டாச்சார்யாஜீ என்று நாங்கள் நீட்டி முழக்கிச் சொல்வது ஸவிதாவுக்கு வேடிக்கை!) வேறு பெண் பார்க்கட்டுமா?'' என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு மேலே பேச்சை வளராமல் தடுத்து விடுவாள். என் கணவர் எவ்வளவோ சொல்லியும் கோகுல் தன் மனைவியை நிர்ப்பந்தம் செய்ய விரும்பவில்லை. ஒரே ஒரு தடவை ஸவிதா மனம் திறந்து என்னிடம் கூறினாள். ''நீதி, நான் என்ன செய்வேன்? அவர் கஷ்டம் எனக்குப் புரிகிறது. ஆனால் அந்தத் தாபத்தின் எதிரொலி என் மனத்தில் தோன்றவில்லையே! இல்லத்தரசியாக, உங்களையெல்லாம் போல் குழந்தைகளைப் பெறுவதிலும், பேணுவதிலும், கணவனுக்குப் பணிவிடைகள் செய்வதிலும் இவற்றிலேயே நிறைவு காண என்னால் முடியவில்லையே ! என் சுவர்க்கம் என் நோயாளிகளிடையேதானே இருக்கிறது!''

கண்களில் நீர் ததும்ப அவள் தவித்த போது அவள் முதுகை ஆதரவுடன் தடவத்தான் என்னால் முடிந்தது.


★

நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் இது பற்றி விவாதிப்பதே நின்று விட்டது. கோகுலும் முழுமனத்துடன் சங்கீதத்தில் ஈடுபட்டார். மணிக் கணக்கில் எங்கள் வீட்டில் அவருடைய கம்பீரமான குரல் கிடாருடன் இழைந்து ரவீந்திரரின் உணர்ச்சிமயமான கீதங்களைப் பாடிக் கொண்டிருப்பதைக் கேட்கலாம். தம்மை மறந்து பாடும் அந்நிலையில் அவர் குரலில் ஒருவிதமான அடைப்புத் தோன்றும்போதுதான், ''எந்த நினைவுகள் இவருடைய தொண்டையை இப்படி அடைக்கின்றனவோ?'' என்று நினைத்துக் கொண்டு என் கணவரும் நானும் மௌனமாக ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வோம். ஸவிதாவால் தம் வாழ்வில் நேர்ந்த ஏமாற்றத்துக்காகத் தற்கொலை செய்து கொள்பவராக இருந்தால், இவ்வளவு நாட்களாயிற்றா இந்த அவல முடிவுக்கு வரக் கோகுலுக்கு!

★

ஸவிதாவைப் பற்றிப் பலவிதமாக ஊரார் பேச ஆரம்பித்ததில் எனக்கு வியப்பே இல்லை.

''ஸவிதா, காலரா இருக்கும் இடம், மலேரியா இருக்கும் இடம் — என்றெல்லாம் சொல்லிக் கொண்டு ஓர் இளம் டாக்டருடன் கண்டபடி சுற்றுகிறாளாம். கோகுலின் எதிரிலேயே மற்ற வங்காளி நண்பர்கள் இலை மறைவு, காய் மறைவாகப் பேசிக் கொள்கிறார்கள். கோகுலைப் பார்க்கக் கஷ்டமாக இருக்கிறது'' என்றார் என் கணவர் ஒரு நாள். என் கணவருக்கு என்றுமே ஸவிதா





இந்தப் பெட்டியைத் திறவுங்கள்... பவுடர் ஒத்தியை எடுங்கள்...



டில்லியைச் சேர்ந்த யாஸ்மின் தாஜி – மிஸ் இந்தியா 1966 போட்டியில் வெற்றிபெற்ற எழிலரசி.

வசீகரத் தோற்றத்தைப் பெறுங்கள்!

இதோ ஒரு லக்மே மாயா ஜாலம்... மென்மையான லக்மே மேகத்திரள் உங்களைக் கவிந்து கொள்கிறது. உங்கள் சரும நிறத்தோடு இணையும் லக்மே பவுடர் உங்கள் மேனி எழிலுடன் கலந்து குலவுகிறது... குறைகள் நிறைவில் மக்கி மறைகின்றன. சோர்வு நீங்கி விடுகிறது. திடீரென முகத்தில் எழிலொளி பரவுகிறது... ஒரு அதிசயம்! மாயம் விளைவித்த மாறுதல் நிலைத்து நிற்கிறது... நாள் முழுதும் உங்கள் சருமம் மிருதுவாகவும், மழமழப்பாகவும், தெளிவாகவும் மிளிருகிறது. ஒரு நாள் மட்டுமா? ஒவ்வொரு நாளும்தான்... எல்லாம் உங்கள் கையிலிருக்கிறது...

அழகுக் குறிப்பு

உடனடியான எழில் பெற லக்மே காம்பேக்ட்- எழில் மங்கையரின் கைப்பையில் இருக்கும் மிருதுவான பவுடர் திரட்டு.



லக்மே
முகப்பவுடர்



வின் மேல் தாபம்தான். யதார்த்தவாதியான அவரால் ஸவிதாவைப்புரிந்து கொள்ளவேமுடியவில்லை.

"வேண்டுமென்றால் உன் ஸவிதா இங்கு வந்து தன் 'ஸேவை'யைச் செய்யக் கூடாதா? கோகுல் பைத்தியக்காரன்-கையாலாகாதவன்." — சமயம் வரும்போதெல்லாம் ஸவிதாவைத் தாக்குவார் என் கணவர்.

அடுத்த தடவை ஸவிதா வந்தபோது, இது பற்றி அவளிடமே நான் கேட்டுவிட்டேன். வழக்கம் போல் சிரித்துக் கொண்டே அவள், "அவரும் தான் கேள்விப்பட்டதைப் பற்றி என்னிடம் சொன்னார். என்னை அவரைவிட அறிந்தவர் கிடையாது" என்று உறுதியாகக் கூறினாள். "இந்த விஷயங்களில் என் ருசி திரும்பினால், என் கணவரிடமே வந்து விடுகிறேன்; கவலைப்படாதீர்கள், நீநி" என்று எனக்கும் விளையாட்டாகச் சமாதானம் கூறினாள்.

ஸவிதாவைப்பற்றின வதந்திகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தன. கோகுலின் வெளித் தோற்றத்தில் சலனம் எதுவும் தெரியவில்லை. ஆனால் அவருடைய மௌனம் அதிகரித்தது. இப்போதெல்லாம் அதிகமாக எங்கள் வீட்டுக்கு வந்து பாடுவதும் கிடையாது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் திடீரென்று கோகுல் தற்கொலை செய்து கொண்டு விட்டார். எல்லாரும் நிச்சயமாகக் கூறிவிட்டார்கள்: "எந்தத் தன்மானமுள்ள புருஷனும் செய்து கொள்ளக்கூடிய காரியம்தான் இது. ஓடுகாலி மனைவியை அடைந்தவன் முடிவு வேறு எப்படி இருக்க முடியும்?"

ஸவிதா இறந்தவரின் கிரியைகளைக்கூடச் செய்ய வராதது இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியது.

என் கணவருக்கும் வேறு காரணம் ஒன்றும் இருப்பதாகத் தோன்றவில்லை. "வெளியே காண்பித்துக் கொள்ள வில்லையே தவிர, உள்ளூற இந்தச் சோகம் அவனைச் செல்லரித்து விட்டது. அவன் எவ்வளவு இளைத்து விட்டான்! மனம் உளுத்துப் போய்விட்டால் அப்புறம் எவ்வளவு நாட்கள் தாக்குப் பிடிக்க முடியும்?" — ஆனால் இந்தத் தீர்ப்பை என் மனம் ஆமோதிக்க மறுத்தது. என்னாலேயே நம்ப முடியாத வதந்திக்கு மதிப்புக் கொடுத்துக் கோகுல் தம்முடைய உயிரையே தியாகம் செய்திருக்கிறார் என்று நான் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

★

ஸவிதாவின் கடிதம்தான் இந்தப் புதிருக்கு விடை அளிக்கும். ஆனால் நான் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்த அது நான்கு நாட்களுக்குப் பிறகுதான் வந்தது. இதயம் படபடக்க, கைகள் துடிதுடிக்க நான் கவரைப் பிரித்தேன். ஸவிதாவின் குறிப்புடன் வேறு ஒரு கடிதமும் இணைந்திருக்கக் கண்டேன்.

"அன்பார்ந்த நீநி,

கோகுலின் மறைவு எனக்கு எவ்வளவு அதிர்ச்சியைக் கொடுக்கிறதோ, அதற்குக் கொஞ்சமும் குறையாமல் இருக்கும் உங்கள் இருவருடைய துக்கமும் என்று எனக்குத் தெரியும். அவர் முடிவு உங்களுக்கெல்லாம் ஆச்சரியத்தை அளித்திருக்கும். கோகுலின் கடைசிக் கடிதத்தை இத்துடன் அனுப்புகிறேன். அது உங்களுக்குச் சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லும். அவர் செய்தது சரியா தப்பா என்று நாம் தீர்ப்பளிக்கும் வரை அவர் காத்திருக்கவில்லை. அவர் முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் மட்டும்தான் நமக்கு. நான் ஸ்ரீநகருக்கருகில் காயமுற்றுக் கிடக்கும் ஜவான்களுக்குத் தொண்டு செய்யச் செல்லும் குழுவோடு நானே போகிறேன். அந்தத் தொண்டில் நான் முழுமனத்துடன் ஈடுபட்டு மனச்சாந்தி அடைய ஆசீர்வதியுங்கள்.

என்றைக்கும் உங்கள் சகோதரி

ஸவிதா"



பரபரப்புடன் கோகுலின் கடிதத்தில் என் பார்வையை ஓட விட்டேன்.

''பிரிய ஸவிதா,

பாகிஸ்தானுடன் போர் மூண்டு விட்டது. நூற்றுக்கணக்கான நம் வீரர்களைப் பாதுகாக்கும் கடமை உன்னைப்போன்றவர்களுடையது தானே! ஆனால் என்னுடைய போன கடிதம்தான் உன்னை இன்னும் போர் முனைக்கு அனுப்பவில்லை என்று எனக்குப் புரிகிறது. நீ எப்படி உன் தைரியத்தை இழந்து கோழையானாய்? என் தொண்டையில் புற்று நோய் என்று டாக்டர் கண்டுபிடித்ததைப் பற்றி நான் உனக்கு எழுதினேன். அதைப் பார்த்தவுடன் நீ இங்கு, என்னிடம் வர விழைவது பற்றிக் கேட்க என்னுடைய மனத்தின் ஒரு பாகம்தான் பெருமையும், திருப்தியும் அடைகிறது. ஆம்! நீ என் ஏகபோக உரிமையாக இல்லையே என்று நான் ஏங்கின காலம் உண்டு தான்! அந்நாட்களில் என் உணர்ச்சிகளை உன்னிடமிருந்து மறைக்க எவ்வளவு பாடு பட்டிருக்கிறேன்! நீ என்னைப் பற்றித் தாழ்வாக நினைத்துவிடக் கூடாதே என்ற என் பயம்தான் உனக்கு முதலில் நான் கொடுத்த சுதந்திரத்துக்குக் காரணம். ஆனால், கூடிய சீக்கிரமே நீ இலட்சிய வானில் உயரே வட்டமிடும் பருந்தெனக் கண்டு கொண்டு விட்டேன். நானோ ஊர்க் குருவி. உன்னைப் போல் என்னால் பறக்க முடியுமா? உனக்குத் துணையாக மேலே பறக்கா விட்டாலும் உன் சிறகை ஒடிப்பதில்லை என்று நிச்சயித்தேன். சமீபத்தில் டாக்டர்கள் என் நோயைப் பற்றிக் குறிப்பிட்ட போது கூட உனக்கு இனி என்னால் தொல்லைகள் இருக்கக் கூடாதென்றுதான் நான் நினைத்தேன். 'உன் பணிவிடைகளினால் எத்தனை வீரர்கள் முகம் மலரும், உடல் இதம் பெறும்' என்றெல்லாம் எண்ணக் கோட்டைகளிலேயே ஆழ்ந்திருந்தேன். 'உன்னை எதுவுமே பாதிக்காது, உன் பாதையிலிருந்து நீ எப்போதுமே விலக மாட்டாய்' என்று எதிர்பார்த்த எனக்கு இப்போது ஏமாற்றமாக இருக்கிறது. எந்தத் தருணத்தில் தனிப்பட்டவர்களின் சௌகரியங்களை மதிக்காமல், தேச சேவை தான் முக்கியமாகக் கருத வேண்டுமோ, அந்தச் சமயத்தில் நீ இப்படித் தளர்ந்து விட்டாயே!

நான் உனக்கு என்றுமே தடையாகத்தான் இருந்திருக்கிறேன். 'உன்னால் நான் ஒரு சுகமும் அடையவில்லை' என்றும், அதனால் என் வேதனைக் காலத்திலாவது, 'என் அருகில் இருந்து ஆறுதல் அளிக்கப் போவதாகவும், எழுதியிருக்கிறாய். ஒரு பாரதப் பெண் வேறு முடிவுக்கு வர முடியாது தான்! என் வாழ்வில் இனி நோயின் நிழல்தான் அதிகமாக இருக்கும். எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் நோயின் உபாதையை அநுபவிக்க நான் தயார்—உன் இலட்சியத்துக்கு உறுதுணையாக மட்டும் இருக்க முடியுமானால்! உனக்குத் தளைகளாக நான் எப்படி இருப்பேன்! உன் மனமோ இப்போது இரு கூறுகப் பிளந்து தவிக்கிறது. போர்முனைக்குப் போனால் என் நினைவு உன்னை வாட்டும். இங்கு வந்தாலும் உனக்குப் பூரண நிம்மதி இருக்காது. என் மனம் தளர்ந்த காலங்களில் நீ எனக்குத் திடம் தந்து என்னை உயர்த்தினாய்; அதுபோல் நீ தடுமாறும் இந்நிலையில் உன் ஊன்றுகோலாக இருப்பேன். அதுதானே இல்லறம்?

என்னைப் பற்றின எந்தச் செய்தியும் உன்னைப் பாதிக்கக் கூடாது. உன்னை நாட்டுக்கு மீட்பதற்காக என்னை நான் அழித்துக் கொள்ளத்தான் வேண்டும். உன் மென்மையான பணிவிடைகளில், உன் கனிவுப் பார்வையில், எல்லா அகங்களையும் மலர வைக்கும் உன் புன்சிரிப்பில் — நான் சூட்சுமமாக இருந்து உனக்குத் துணை புரிவேன்.

உன்—கோகுல்.

★

தெய்வ சந்நிதானத்தில் இருப்பது போல் ஒரு சிலிர்ப்பு எனக்கு ஏற்பட்டது. சூடான இரு கண்ணீர் முத்துக்கள் என் தலையில் விழுந்த போது தான் நான் என் மோன நிலையிலிருந்து மீண்டேன். என் கணவரின் பனி படர்ந்த கண்கள், ''உன் ஸவிதாவை நான் தவறாக எடை போட்டதற்கு என்னை மன்னித்து விடு'' என்பது போல் என்னை நோக்கித் தாழ்ந்து இறைஞ்சின.



ஸ்ரீமதி என். பத்மா

யாருக்காக அழுதான்?

திரு ஜெயகாந்தனின் இரண்டாவது படைப்பு இது. முதல் படைப்பு "உன்னைப் போல் ஒருவன்". கதைக்குச் சம்பந்தமில்லாத சம்பவங்களையும், தேவையில்லாத காட்சிகளையும், நிஜ வாழ்க்கைக்குப் பொருந்தாத பாடல்களையும் ஒதுக்கிவிட்டு யதார்த்தமான போக்கில், பகட்டும், படாடோபமும் இன்றிப் படம் தயாரிக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்குள்ளவர் திரு ஜெயகாந்தன். அவர் துணிந்து புனைந்த சித்திரம் "யாருக்காக அழுதான்?"


"சர்வர் சுந்தர"மாக வந்து தம்மால் 'ஸீரியஸ் ரோலில்' திறமையாக நடிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய நாகேஷ் கதாநாயகன் ஜோஸப்பாக வருகிறார் - இல்லை, ஜோஸப்பாகவே மாறி விட்டார். அவர் ஒரு காமெடியன் என்பதையே மறக்கும்படிசெய்து விட்டார். அப்பாவித்தனமான மௌனம், அதற்கேற்ற நிதானமான நடை, உடை, பாவனை, திருதிருவென்ற பார்வை எல்லாமே தனி 'பாணி'தான்! 'தட்டுங்கள் திறக்கப் படும்' படத்துக்கு முன்னால் இந்தப் படம் வந்திருந்தால், நாகேஷைப் பார்க்கும்போது சந்திரபாபுவின் நினைவு நமக்கு வந்திராது!

ஹோட்டல் அறையில் தங்க வந்த ஒரு குடிகாரனின் பணத்தை எடுத்து வைத்துக் கொண்டு மனச்சாட்சியோடு போராடித் தவிக்கும் பாலையா கணப் பொழுதில் தாம் ஒரு சிறந்த நடிகர் என்பதை எளிதில் உணர்த்தி விடுகிறாரே!

கே. ஆர். விஜயா காதலித்தவனால் கை விடப்பட்ட பரிதாபத்துக்குரிய பாத்திரம். பெற்றோர்களின் ஏற்பாட்டை மீற முடியாமல் தான் வேறொரு பெண்ணை மணந்து கொண்டு விட்டதாகச் சொல்லி மன்னிப்புக் கோரிய காதலனிடம் பேசிய பேச்சும், நடந்து கொண்ட தோரணையும் கே. ஆர். விஜயாவுக்குத் தனிச் சிறப்பைத் தருகின்றன. ஆனால் ஹோட்டல் முதலாளி பாலையா, வாடகை தராத காரணத்துக்காக விஜயாவை வெளியேறச் சொன்ன பிறகும் அவர் அங்கேயே வளைய வருவானேன்! ஜோஸப்பினிடம் அநுதாபம் காட்டுவதற்காகவா? அதற்குத் தான் எஸ். வி. சஹஸ்ரநாமம் இருக்கிறாரே! அவர் மிகவும் இயல்பாக நடிக்கிறார்.

இந்தப் படத்தில் கட்டித் தழுவும் காதல் காட்சியோ, கண்ணைக் கவரும் கவர்ச்சியோ மருந்துக்குக்கூட இல்லை. பாட்டோ, நடனமோ கிடையாது. படம் ஆரம்பித்ததும் ஒரு பாட்டு வருகிறது. அது நாகேஷ் ஏற்ற பாத்திரத்துக்கு விளக்கம் தருவதற்காகப் புகுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் நமக்குத்தான் பாடல் பொருத்தம் விளங்கவில்லை.

ஆசிய ஜோதி பிலிம்ஸாரின் தயாரிப்பான இப்படம், கதாசிரியரும் டைரக்டருமான திரு ஜெயகாந்தனுக்குப் பண வசூல் விஷயத்தில் வெற்றியோ, இல்லையோ, தரமான ஒரு படத்தை எடுத்த பெருமிதத்துடன் அவர் தலை நிமிர்ந்து நிற்கலாம். இந்தப் பெருமிதத்தில் நாகேஷுக்குப் பெரும் பங்கு உண்டு.




புதுமையின் பொலிவுக்கு ஹமாம்
HAMĀM
the family soap
அதிக காலம்
நீடித்துழைக்கும்
டாய்லெட்
சோப்
நாள்தோறும் ஹமாம் உபயோகியுங்கள். உங்கள் சருமத்தைச் சுத்தம் செய்வதுடன், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. உங்கள் மேனிக்கு கவர்ச்சியான மெருகையும் கொடுக்கிறது. நெடுங்காலம்...நீடித்திருக்கும் ஹமாம் டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.
டாடா தயாரிப்பு



ஒன்று இரண்டு மூன்று!



பார்த்திபன்

ஒரு நாள் உயர்நிலைப் பள்ளிக்கூடம் ஒன்றுக்குக் கல்வி அதிகாரி ஒருவர் வந்தார். அப்போது பள்ளிக்கூட வகுப்பொன்றில் கணக்குப் பாடம் நடந்து கொண்டிருந்தது. அங்கு வந்த கல்வி அதிகாரி அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தரிலிருந்து மூன்று பையன்களின் பெயர்களைப் பொறுக்கி எடுத்தார். ''இந்த மூன்று பையன்களின் அறிவைச் சோதிக்க விரும்புகிறேன். கேள்வியைக் கேளுங்கள்!'' என்று ஆசிரியரைப் பார்த்துச் சொன்னார். ஆசிரியர் மூன்று கணக்குகளைக் கரும் பலகையில் எழுதினார். முதல் பையன் எழுந்து கணக்கைப் போர்டில் சரியாகப் போட்டுவிட்டுத் தன் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டான். இரண்டாமவனும் கணக்கைச் சரியாகப் போட்டுவிட்டுத் தன் இருப்பிடத்துக்குத் திரும்பினான். மூன்றாவது பையன் வரும்போதே திருதிருவென்று விழித்துக் கொண்டு வந்து சேர்ந்தான்.



அவன் கரும்பலகையின் அருகில் செல்லும் சமயத்தில் அந்தக் கல்வி அதிகாரி இவன் முதல் முறை வந்தவன்தான் என்பதைக் கண்டு கொண்டார்.. ''நிறுத்து! நீதான் முதலில் வந்து கணக்கைப் போட்டாயே, மீண்டும் ஏன் வந்தாய்? என்னை ஏமாற்றும் நோக்கமா?'' என்று கத்தினார்.

''இல்லை சார், மூன்றாவது முறையில் வரவேண்டிய பையன் 'மாட்னி ஷோ'வுக்குப் போய் விட்டான். அவனுக்குப் பதிலாகத் தான் நான் வந்தேன்....''

''நன்றாயிருக்கிறது! நீ வருவதை ஏன் உங்கள் ஆசிரியர் கண்டிக்காமல் விட்டார்?'' என்று ஆசிரியரின் பக்கமாகத் திரும்பினார் கல்வி அதிகாரி. ''அந்தப் பையன்தான் முதலில் வந்தவனாயிற்றே, ஏன் அவனைத் தடுத்து நிறுத்தவில்லை?''



''இல்லை, ஐயா, எனக்கு அந்தப் பையனைத் தெரியாது'' என்றார் ஆசிரியர்.

''என்ன? உங்கள் வகுப்புப் பையனை உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டார் கல்வி அதிகாரி.

''தெரியாது. இந்த வகுப்பு ஆசிரியர் 'மாட்னி ஷோ'வுக்குப் போயிருக்கிறார். நான் அவர் ஸ்தானத்தில் இருக்கிறேன்!''

''நன்றாயிருக்கிறது! நானும் உண்மையான கல்வி அதிகாரி இல்லை. அவரும் 'மாட்னி ஷோ'வுக்குப் போயிருக்கிறார். நான் அவருக்குத் தெரிந்தவன். அவ்வளவுதான்!'' என்று சொல்லிக் கொண்டே வெளியேறினார் வந்தவர்.

(ஜப்பானிய நண்பர் ஒருவர் சொன்ன கதை)

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



[illegible] ஒரே தேய்ப்பில் கால்கேட் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை அழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல் துலக்க விரும்புகிருர்கள்!

சுகந்தத்திற்கும், வாயில் நறுமணம்கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினுல் பல்துலக்குங்கள்

சிலர் பற்பொடியை விரும்பினுல் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம்.
ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் கிரீமையே வாங்குகிருர்கள்.

நினைவுத் திரையில்
தீர்க்க தரிசனம்

''நினைவுத் திரையில்...'' என்ற பகுதி என் சிந்தனையைக் கிளறியது. அமரர் கல்கியின் ஒவ்வோர் எழுத்தும், எவ்வளவு தீர்க்க தரிசனம் வாய்ந்தது!

நமது நாட்டுக்கு சுயராஜ்யம் வருவதற்குச் சில மாதங்களுக்கு முன் அமரர் கல்கி எழுதிய ''அபலையின் கண்ணீர்'' என்ற கதையின் சில பகுதிகளை எழுதி அனுப்பியுள்ளேன். அதைப் படிக்கும்போது, இப்பொழுதுள்ள சூழ்நிலைக் கேற்ப 'கல்கி' அவர்கள், இப்பொழுதுதான் எழுதினாரோ என்று ஐயுறும்படி இருக்கிறது.

— நாகேச்வரன்

சட்டசபைத் தேர்தலுக்கு ஆட்கள் நிறுத்தப்பட்டபோது, ஸ்ரீ துரைராஜா எப்பேர்ப்பட்ட முன்யோசனைக்காரர் என்பது வெளியாயிற்று. சட்டசபையில் தமக்கு வேண்டியவர்கள் இருப்பது எத்தனையோ விதத்தில் உபயோகமாயிருக்கும் என்று தெரிந்து அதற்குரிய முயற்சிகளைச் செய்ய வேண்டிய விதத்தில் செய்தார். கடைசியாக, அவர் சிபாரிசு செய்த அபேட்சகர்கள்தான் காங்கிரஸினால் ஒப்புக்கொள்ளப்பட்டார்கள் என்றால் ஸ்ரீ துரைராஜாவின் செல்வாக்கைப் பற்றி வேறு என்ன சொல்ல வேண்டும்?

அப்பேர்ப்பட்ட அபார சக்தி வாய்ந்த மகா திறமைசாலியை பிளாக் மார்க்கெட்டில் பிடித்து மடக்கி விடுவதென்று தேசத் தொண்டனான சிவராஜனும், போலீஸ் அதிகாரி தனராஜனுமாகச் சேர்ந்து சதியாலோசனை செய்தார்கள்...... கறுப்பு மார்க்கெட்டின் எவரெஸ்ட் சிகரமான கண்டிராக்டர் துரைராஜை வழக்கில் மாட்டி விடுவது என்று தீர்மானித்தார்கள்..... அந்தக் காரியத்தில் இறங்கினபோது தங்களுக்கு முன்னால் எப்பேர்ப்பட்ட இடையூறுகள், தடங்கல்கள் எல்லாம் காத்திருக்கின்றன என்பதை அவர்கள் கொஞ்சம் கூடத் தெரிந்துகொள்ளவில்லை..... அப்பப்பா! அவர்கள் உள்ளான நிர்ப்பந்தத்துக்கு அளவேயில்லை.

ஜில்லா மாஜிஸ்டிரேட்டும், ஜில்லா போலீஸ் சூபரின்டெண்டும் ஒரு நாள் இதைப் பற்றி விவாதித்த பிறகு அவர்கள் இருவருடைய முன்னிலையிலும் போலீஸ் இன்ஸ்பெக்டர் தனராஜ் அழைக்கப்பட்டார். கண்டிராக்டர் துரைராஜ், மேலே மந்திரி சபை வரையில் செல்வாக்குள்ளவரென்றும், அவர் விஷயத்தில் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றும், போதுமான சாட்சியம் இல்லாமல் கேஸ் கீஸ் என்று கண்டுபிடித்தால் ஜில்லா அதிகாரிகள் எல்லாருக்குமே கெட்ட பெயர் வரும் என்றும், அவருடைய உத்தியோகத்துக்கும் ஆபத்து வரலாமென்றும் இரண்டு பெரிய உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து எச்சரிக்கை செய்தார்கள்...........

தேசத் தொண்டன் சிவராஜனோ மேற்சொன்னதைக் காட்டிலும் அதிகக் கடுமையான தீவிரமான செல்வாக்குப் பிரயோகத்துக்கு உள்ளாகி வந்தான்.

அந்த ஜில்லாவின் பெரிய பெரிய காங்கிரஸ் பிரமுகர்கள் நாலாபுறமும் வளைத்துக் கொண்டு அவனைத் தாக்கினார்கள்..... பிறகு, காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் வந்து தாக்கினார்கள். அதற்குப் பிறகு இன்னும் பெரிய இடத்துத் தாக்குதல் ஏற்பட்டது. காங்கிரஸ் மந்திரி ஒருவர் சுற்றுப் பிரயாணத்தின்போது அந்த ஊருக்கு வந்து சேர்ந்தார்........சிவராஜனுக்குத் தம்முடைய பேட்டியை அளித்தே தீரவேண்டும் என்றார்.......சுற்றி வளைத்துக் கடைசியில் விஷயத்துக்கு வந்தார். ''சிவராஜன்! அனுபவஸ்தனுடைய என்னுடைய வார்த்தையைக் கேளுங்கள். மனிதர்கள் என்று இருந்தால் குறைகள் இருக்கத்தான் இருக்கும். எல்லாருமே மகாத்மா காந்தியாக இருந்துவிட முடியுமா?...... கறுப்பு மார்க்கெட்டைக் கண்டு பிடிப்பதில் தங்களுடைய ஆர்வத்தை ரொம்பவும் பாராட்டுகிறேன். ஆனால் கொஞ்ச நாளைக்கு அதை நிறுத்தி வையுங்கள். நிறுத்தி வைத்தால் காங்கிரஸின் கௌரவத்தை நிலைநாட்டப் பெரிதும் உதவி செய்ததாகும்!'' என்று பிரசங்கத்தை முடித்தார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சிவராஜன், ''தயவு செய்து மன்னிக்கவேண்டும். காங்கிரஸை விடப் பெரிய ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது...... மனச்சாட்சிதான். மனச்சாட்சிக்கு விரோதமாக என்னால் ஒன்றும் செய்ய முடியாது!'' என்று சொல்லிப் பேட்டியைச் சட்டென்று முடித்துக் கொண்டு வெளிக் கிளம்பினான்.

— கல்கி, ஏப்ரல் 20, 1947



13. அன்னம் பாலித்த அன்பர்

அள்ளி அள்ளிக் கொடுப்போர் வள்ளல் எனப்படுவர். ஒரு கோடி ரூபாய் வைத்திருப்பவர் நூறு பேருக்கு உணவளிப்பது பாராட்டத் தக்க செயலன்று. பெரும் தனவந்தர்கள் தானம் செய்வது வியப்புக்குரியதாகாது. செல்வம் மலிந்துள்ள போது தானதருமம் செய்வது இயல்பேயாகும். வறுமை வந்த போது தானம் செய்வது அருமையிலும் அருமை. வறுமையிலும் சிறுமையின்றி அடியார்கட்கு அன்னம் அளித்தவர் இளையான்குடி மாறநாயனார். அதனாலேயே சிவலோகம் எய்தியவர் அவர்.

பாண்டி நாட்டிலே பரமக்குடிக்கு ஏழு மைல் தொலைவில் உள்ளது இளையான் குடி. அத்திருப்பதியில் அவதாரம் செய்தவர் மாறனார். இளையான்குடியில் பிறந்ததால் இளையான்குடி மாறனார் எனப் பெயர் பெற்றார். அவர் தில்லை நடராசரைத் தியானித்து வந்தார்.



அம்பொன் நீடிய அம்ப லத்தினில்
ஆடு வார்அடி சூடுவார்
தம்பி ரான்அடி மைத்தி றத்துயர்
சால்பின் மேன்மை தரித்துளார்
நம்பு வாய்மையில் நீடு சூத்திர
நற்கு லஞ்செய் தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கி னார்இளை
யான்கு டிப்பதி மாறனார்

நாம் எல்லோரும் அறையில் ஆடுகின்றோம். அவன் அம்பலத்தில் ஆடுகின்றான். அம்பலம் என்றால் பொது. நாம் எல்லோரும் தனிஉடைமையாக இருக்கின்றோம். அவன் பொது உடைமையாக இருக்கின்றான். அவன் எப்பொழுது ஆடத் தொடங்கினான்? எப்பொழுது அந்த ஆட்டம் நிற்கும் என்பது யாருக்கும் தெரியாது. அவன் ஆட்டம் எப்பொழுது நிற்கின்றதோ, அப்போது இந்த உலகம் முடிந்துவிடும். நமது உடலின் மார்பில் ஓர் அசைவு இருக்கின்றது. அந்த அசைவு—ஆட்டம் முடிந்தால் நாம் ஆடமாட்டோம். பிரபஞ்சம் என்ற உடம்பில் மார்புப் பகுதிதான் சிதம்பரம். அங்கே உள்ள ஞானவெளியில் எம்பெருமான் ஆனந்தத் தாண்டவம் புரிகின்றான்.

அம்பொன் நீடிய அம்பலத்தினில் ஆடுகின்றவரின் அடிமலரைத் தன் முடி மீது சூடிய இளையான்குடி மாற நாயனார் எப்போதும் எம்பிரானுடைய அடிமைத் திறம் பூண்ட சால்பு மிக்கவர். அவர் மீது அளவுகடந்த காதல் கொண்டவர்.

வேளாளர் குலம் செய்த மாதவத்தால் அவதரித்த இளையான்குடிமாற நாயனார், உழவுத் தொழிலால் மிகுந்த செல்வமும், நிலபுலமும் உடையவராயிருந்தார்.

''பச்'' என்பதற்குக் கட்டு என்று பொருள். கட்டுப்பட்டதனால் பசுவுக்கு அந்தப் பெயர் வந்தது. நாம் இரண்டு கால் பசு. பசுக்களாகிய நமக்குப் பதி பசுபதீசுவரர். பசு மிகவும் சாதுவான பிராணி. ஆதலால் அதனை ஒரு கயிற்றால் கட்டுவார்கள். யானை வலிமையானது. ஆதலால் அதனை இரு சங்கிலிகளால் கட்டுவார்கள். குதிரையை மூன்று கயிறுகளால் கட்டுவார்கள். ஊஞ்சலை நான்கு சங்கிலிகளால் கட்டுவார்கள். ஆன்மாக்களாகிய நாம் புலன்களாகிய ஐந்து கயிறுகளால் கட்டப்பட்டிருக்கின்றோம். இதிலிருந்தே நமது யோக்கியதை தெரிகிறதல்லவா? நாம் எவ்வளவு சாதுக்கள்? எப்பொழுதும் நமக்கு நேர் தம்பியிடம் தான் பிரியம் அதிகம். நமக்கு நேர் தம்பி நான்கு சங்கிலிகளால் கட்டப்பட்ட ஊஞ்சல். ஊஞ்சல் இப்படியும் அப்படியும் ஆடிக் கொண்டே சென்று சென்று வரும். ஊஞ்சலைப் போன்றே உயிர்களாகிய நாமும் சுவர்க்கம், பூதலம், நரகம் என்ற மூன்று இடங்கட்கும் மாறி மாறிச் செல்வதும் வருவதுமாகவே பல்லூழிக் காலமாக ஆடிக் கொண்டிருக்கிறோம். இப்படி நாம் ஆடிக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்த்துவதற்காகத்தான் கல்யாணம் ஆனவுடனே ஊஞ்சலில் அமர்த்துகிறார்கள். இதனை அருணகிரிநாதர்,

'' மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டூசல் படும் பரிசு என்றுஒழிவேன்?''

என்று கந்தரநுபூதியில் கூறி இறைவனிடம் முறையிடுகின்றார்.

ஊஞ்சல் ஆடிக் கொண்டேயிருக்கிறது. அப்போது அங்கே ஓர் அருளாளர் வந்தார். ஆடிக் கொண்டேயிருக்கும் ஊஞ்சலுக்கு ஓய்வு தரவேண்டுமே என்று ஒரு ஞானவாளால் ஊஞ்சலின் நான்கு சங்கிலிகளையும் துண்டித்தார். உடனே ஊஞ்சல்



தரத் தேயிலைத்தூள்களிலே தனிப்பெருமை வாய்ந்தது

லிப்டன்ஸ்
ஹிமாலயன் கோல்டன்
டஸ்ட் டீ



குணமும், சுவையும் நிறைந்த பொன்னிறமுள்ள டீ யை வெகு சீக்கிரத்தில் இந்தத் தேயிலையைக் கொண்டு அதிகமான கபபுகளைப் பெறுங்கள். இந்த ஒப்புயர்வற்ற டீ யை நீங்களே பருகிப் பாருங்கள் — உங்கள் விருந்தினர்களுக்கும் கொடுங்கள். நிச்சயமாக இதை ருசித்து நீங்கள் மகிழ்வீர்கள் — ஆம்! — அப்படியே உங்கள் விருந்தினர்களும்கூட! தரத் தேயிலைத் தூள்களிலே லிப்டன்ஸ் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் தனிப்பெருமை வாய்ந்தது. தன்னிகரற்றது என்பது உண்மை.

LIPTON

லிப்டன்
என்றாலே
நல்ல டீ

LHGC-3 T/



Zam-Buk
ஜாம்-பக் சிறந்த மூலிகைக் களிம்பு
Zam-Buk
HERBAL BALM
WONDERFULLY SOOTHING AND HEALING FOR
SORE ACHING FEET
ஜாம்-பக், பாரதத்தின் உன்னதமான
மூலிகைக் களிம்பு. விரைவாகவும்,
பத்திரமாயும் குணப்படுத்த உதவுகிறது.
காயங்களுக்கு
தீப்புண்களுக்கு
முகப் பருக்களுக்கு



தனது ஆட்டத்தை நிறுத்தி நேரே நிலத்தில் வீழ்ந்து அமைதி பெறுகின்றது. அதுபோல், 'பல்லூழிக் காலமாக எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்துத் தவிக்கின்ற அடியேனுக்குத் திருவதிகையில் சிவபெருமான் வந்து, தமக்கையார் மூலம் ஐந்தெழுத்து உபதேசம் செய்வித்தவுடன் ஞானமெல்லாம் சித்தித்து, கயிறு அறுபட்ட ஊஞ்சல் நிலத்தில் வீழ்ந்ததுபோல், பஞ்ச மலங்கள் அறுபட்டு உன் திருவடிக்கு வந்து விட்டேன்' என்று கதறுகிறார் அப்பர். "அறுகயிறு ஊசலானேன் அதிகை வீரட்டனாரே" என்கிறார்.

பசுபதியின் வழிபாட்டைப் புரிந்து வந்தவர் மாறனார்.

இறைவன் வழிபாட்டினுஞ் சிறந்தது அடியார் வழிபாடு. இறை வழிபாட்டை "ஆராதனை" என்பர். அடியார்க்கு அன்னம் தந்து வழிபடுவதை 'சமாராதனை' என்பர். 'சம்' என்றால் 'நன்றாக' என்பது பொருள்.

தொண்டர் உள்ளத்தில் எப்போதும் உறைகின்றவர் இறைவர். ஆதலால், தொண்டர் வழிபாட்டில் அண்டர் நாதன் மிக மிக மகிழ்கின்றார். பசுவிடம் பால் கறக்க வேண்டுமானால், கன்றின் துணை பற்ற வேண்டும். அதுபோல், இறைவரது திருவருள் பெற வேண்டுமானால் அடியவர் துணை கொள்ள வேண்டும்.

"மண்ணிற் பிறந்தார் பெறும்பயன்
மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது
செய்வித்தல்"

என்பார் ஞானசம்பந்தர்.

மிக்க செல்வம் பெற்றிருந்த இளையான்குடி மாறநாயனார், செல்வத்தின் பயன் அடியவர்க்கு அமுதளித்தலே எனத் தெளிந்தவர். பரமனடியார்கள் யாவராயினும் அழைத்து வந்து சிறந்த இருக்கை மீது எழுந்தருளச் செய்து திருவடிகளைப் பூசித்து அன்புடன் நறுமலர்களினால் அருச்சனை புரிந்து வழிபடுவார். பின்னர் அறுசுவைகளாலாய நான்கு வகை உணவுகளையும் அவர்கள் விரும்பியவாறு அமுது செய்விப்பார்.

கொண்டு வந்து மனைப்பு குந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை
வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு
சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில்
அமுது செய்ய அளித்துளார்

"வறுமையினால் துன்புறும்போதும் இப்பெரியார் அடியார்க்கு அன்னமளித்தலில் சலியாதவர் என்பதனை உலகுக்கு அறிவுறுத்த வேண்டும்" என்று கருதினார் கண்ணுதற் கடவுள். அதிலிருந்து இளையான்குடி மாற நாயனாரிடமிருந்து செல்வம் சிறிது சிறிதாகக் கரையத் தொடங்கியது; வறுமை வந்துற்றது. நாயனார் வறுமையில் வாடினார். அதற்குக் காரணம் நடராஜப் பெருமானே. "ஒல்லையில் வறுமைப் பதம் புக, உன்னினார் தில்லைமன்னினார்" என்ற சொல்லைக் கவனிக்க வேண்டும்.

வறுமை என்பது விஷ்ணு பதமா? சிவபதமா? நாயனார் பெற்ற வறுமையை 'வறுமைப்பதம்' என்று சொல்கிறார் சேக்கிழார் பெருமான். கண்ணுதற் கடவுளே வறுமையை வழங்கியதால் 'வறுமைப் பதம்' என்று உயர்த்திக் கூறுகிறார்.

இளையான்குடி மாறனார்க்குச் செல்வம் சுருங்கியும் மனம் சுருங்கவில்லை. நிலங்களை ஒற்றி வைத்தும், விற்பனை செய்தும் ஆபரணம், பாத்திரம் முதலியவைகளை விற்றும் அடியவர்க்கு அன்னமளித்து அறம் புரிந்து வந்தார். நாயனாரது அறத் தொண்டுக்கு அனுசரணையும் மாறுபாடின்றி அவரது மனைவியார் உதவிபுரிந்தார்.

சிவபெருமான் நல்ல தவ வேடம் பூண்டு, நீறும் கண்டிகையும் புனைந்தார். தருமமே விடையாதலின் தரும விடையும், தரும சக்கரவர்த்தினியாகிய அம்பிகையும் இன்றிப் புறப்பட்டு வந்தார்.

நல்ல மாரிக் காலம்; பெரு மழை பெய்து எங்கும் நீர் ஓடிக் கொண்டிருந்தது; பள்ளங்கள்தோறும் வெள்ளம் நிறைந்திருந்தது; நடு நிசி. நாயனாரும் அவர் மனைவியாரும் உணவின்றிப்

பட்டினியால் வருந்திக் கொண்டிருந்தனர். பசியால் வாடிய அவர்கள் தண்ணீர் பருகி, இறைவனது அஞ்செழுத்தை நெஞ்சழுத்தி உரைத்தவண்ணம் உறக்கமின்றி இருந்தனர். பேய்களும் நடமாடாத அந்த நள்ளிரவில் பேய்களுடன் நடமாடும் பித்தப்பெருமான் ஈரத்தில் நனைந்து, குளிரால் நடுங்கியவண்ணம் வந்து நாயனாரின் வீட்டுக் கதவை மெல்லத் தட்டினார்; ''சிவாய நம'' என்று கத்தினார்.

நாயனார், 'சிவாயநம' என்ற நாமத்தைக் கேட்டதும், வந்துள்ள அடியவருக்கு அமுது படைக்க வேண்டுமே என்று ஓடி வந்து கதவைத் திறந்தார்.

வந்த அடியவரோ, ''அன்பனே பசித்து வந்தோம்'' என்றார்.

நாயனார் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. ஈரத்தில் நனைந்து வந்திருந்த அடியவரின் திருமேனியைத் துண்டினால் துடைத்தார்.

ஈர மேனியை நீக்கி இடங்கொடுந்
தார இன்னமு தூட்டுதற் காசையால்
தார மாதரை நோக்கித் 'தபோதனர்
தீர வேபசித் தார்செய்வ தென்'என்று

''பெருமானே! தேவரீர் இங்கு எழுந்தருள அடியேன் என்ன மாதவம் செய்தேனோ?'' என்று துதி செய்தார்.

வந்துள்ள அடியவர்க்கு அமுது செய்வித்துப் பசியைப் போக்க வேண்டும் என்று எண்ணினார்.

அடுப்பிலோ பூச்சி கூடு கட்டியிருக்கிறது. வீட்டிலே உணவுக்குரிய சாதனங்கள் யாதொன்றும் இல்லை. இந்நிலையில் என்ன செய்வார் நாயனார்? வழியேதும் புரியாமல் திகைத்து நின்ற அவர் மனைவியாரைநோக்கி, ''மாதரசே! அரனுருடைய அடியார் மிகவும் பசித்து வந்திருக்கிறார். நம் மனைக்கு வந்துள்ள அவர் பட்டினியாக இருக்கக் கூடாதே? இத்தவசிலருக்கு உணவு தரும் வகை யாது?'' என்று கேட்டார்.

''பெருமானே! இதற்கு வேறு வழி ஒன்றுமில்லை. கடன் கொடுப்பார் யாருமில்லை. காலமோ அகாலம்; நடு நிசி; முயற்சி செய்து பார்க்கக் கூடிய இடங்களும் இல்லை. ஈதல் இசையாதபோது சாதலே சாலச் சிறந்தது. ஆனால் எனக்கொரு வழி தோன்றுகிறது. இன்று பகலில் வயலில் விதைத்து வந்த முளை நெல்லை வாரிக் கொண்டு வந்தால் முயற்சிசெய்து அமுதாக்கிப் படைக்கலாம். இதனைத் தவிர வேறு செய்வதற்கு உபாயம் ஒன்றுமில்லை'' என்று கூறினார் அந்த அம்மையார்.

செல்லல் நீங்கப் பகல்வித்
தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக்
கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலும்
ஆகும்; மற்(று)
அல்ல தொன்றறி யேன்''என்
றயர்வுற.

துணைவியார் கூறிய சொற்கள் நாயனாருக்கு அமுதம் போலிருந்தது. ''நீ சொன்னபடியே சென்று நெல் முளையை வாரிக் கொண்டு வருகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டார். அப்போது மழை கொட்டிக் கொண்டே யிருந்தது. இருளின் கூட்டம் கட்டு விட்டு உருகி வழிவது போல் உலகம் காரிருளால் சூழப்பட்டிருந்தது. நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனாரின் அடியாராகிய இளையான்குடி மாற நாயனார் அடியார்க்கு அமுது செய்விக்க வேண்டுமென்ற ஒரே எண்ணத்துடன் கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு மெல்ல மெல்லக் காலினால் தடவிக் கொண்டு சிவநாமத்தையே துணையாகக் கொண்டு நடந்தார். போட்ட விதை முளைத்தும் மழைத் தண்ணீரில் ஒருபுறம் ஒதுங்கியும் இருந்தன. அம்மழைநீரில் ஒதுங்கியிருந்த வெண்மையான நெல் முளைகளை வாரிக் கூடையில் நிறைத்துக் கொண்டு தலைமீது சுமந்து கொண்டு வீடு வந்தார். வாசலிலேயே நின்று கொண் டிருந்த அவரது மனைவி கூடையை வாங்கிக் கொண்டார்.

கூடையிலிருந்த நெல் முளையைத் தண்ணீரில் கழுவினார் அந்த அம்மையார். கணவரைப் பார்த்து, ''சுவாமி! இந்த நெல்லைப் பக்குவப்படுத்தி அமுதாக்குவதற்கு அடுப்பெரிக்க விறகு இல்லை'' என்றார். விறகில்லை என்பதை ஏன் முதலிலேயே சொல்லவில்லை என்று எண்ணலாம். முதலில் நெல் வர வேண்டுமே? நெல் வந்த பின்தானே அடுப்பெரிக்க வேண்டும்?

நாயனார் கோடரி எடுத்துத் தமது வீட்டுக் கூரையின் ஒரு புறத்தை இடித்துத் தள்ளினார். அதனால் கிடைத்த கட்டைகளைக் கொண்டு அடுப்பெரித்த அம்மையார், நாயனார் கொண்டு வந்திருந்த நெல் முளையைப் பக்குவமாக வறுத்தார். வறுத்த நெல்லைக் குத்தி அரிசியாக்கினார். பின்னர் உலையிலிட்டு அற்புதமாக அன்னம் ஆக்கினார். அன்னம் ஆக்கியவுடன் மெல்லக் கணவனாரிடம், ''இனி, கறிக்கு என்ன செய்வோம்?'' என்று இறைஞ்சினார். (தொடரும்)



சிங்கபுரம் - இலச்சினை

மலேசியா மாநாடு

சா. கணேசன் எம்.எல்.ஏ.,



ஏப்ரல் 25ந்தேதி திங்கட்கிழமை எல்லாரும் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு கோலாலம்பூரை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள். வடக்கு, கிழக்கு, தெற்கு, மலாயாப் பகுதிகட்கு எனப் பிரிக்கப்பட்ட சொற்பொழிவுச் சுற்றுலாக் குழுக்கள் மூன்றும் தனித்தனியே அவ்வப்பகுதிகளை நோக்கிப் புறப்பட்டன. நாங்கள் கோலாலம்பூரை விட்டுப் புறப்படுமுன் எங்கட்கு உதவிய நண்பர்கள் இல்லங்கட்குச் சென்று விடைபெற்றுக் கொண்டோம். நண்பர்களான சங்கீதபூஷணம் எஸ். இராமநாதன் செயாம் தேசத்துப் பாவைத் திருநாள் பாடல்களைப் பதிவு செய்து கொள்ளும் வேலையிலும், ஆர். நாகசாமி படங்களையெல்லாம் எடுத்துக் கட்டும் வேலையிலும் ஈடுபட்டிருந்ததால் அவர்கள் இருவரையும் கே. எல்.லிலேயே விட்டு விட்டு நாங்கள் புறப்பட்டோம். அதென்ன கே. எல். என்று தானே கேட்கிறீர்கள்! கே. எல். என்றால் கோலாலம்பூர் (Kuala lumpur) என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படியே, எஸ். பி. என்றால் சிங்கப்பூர் என்றும் கே. கே. என்றால் கோலக்கஞ்சார் என்றும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்படிச் சொல்வது அங்கே இயல்பாகி விட்டது.

திருவாளர்களான அ. ச. ஞானசம்பந்தன், மொ. அ. துரையரங்கசாமி இருவருடனும் நானும் ஒரு காரில் தெற்குப் பகுதிச் சொற்பொழிவுக்காகப் புறப்பட்டேன். இந்தக் குழுவில் எங்களையன்றி மேலும் ஏழெட்டுப் பேர் இருந்தனர். திருவாளர்களான தெ. பொ. மீ., வ. சுப. மாணிக்கம், தென் கொரியாவைச் சேர்ந்த பேராசிரியர் கிம்யோங் ஹீ (Prof Kim young hee) தில்லி கே. ஆறுமுகம், இலங்கையைச் சேர்ந்த கந்தையா, கா. பொ. இரத்தினம், திருமதி பிரேமா நந்தகுமார், சிவத்தம்பி முதலியோர்தாம் அவர்கள். எல்லோரும் குறிப்பிட்டபடி நகரி செம்பிலான் (ஒன்பது நாடு) என்னும் மாநிலத் தலைநகரான சிரம்பானுக்கு வந்து சேர்ந்தோம்.

சிரம்பானில் எங்களை வரவேற்று உபசரிக்கும் பொறுப்பைத் திருவாளர் நட்சத்திரம் ஏற்றுக் கொண்டிருந்தார். நேரே நாங்கள் யாவரும் அவருடைய தோட்ட மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அவரும் அவர் குடும்பத்தினரும் புன்முறுவல் பூத்த முகத்தினராய் இன்மொழி கூறி வரவேற்றனர். சிறிது நேரத்தில் மாநாட்டின் அமைப்புக் குழு உறுப்பினரான திரு வி. லட்சுமணன் ஜே. பி. தம் மகன் மருமகளுடன் வந்து அகமலர்ச்சி தோன்றும் முகமலர்ச்சியுடன் வரவேற்றார். இவற்றை எல்லாம் கண்டபோது,

''விருந்து கண்டு
உள்ளம் களிக்கும்
மங்கையர் முகமெனப்
பொலிந்தன கமலம்
எல்லாம்''

என்ற கம்பன் வாக்கே என்கருத்துள் மணத்தது.

தபால் முத்திரைகள்



அன்று அந் நகருக்குத் தென் மேற்கில் உள்ள போர்ட் டிக்ஸன் (Port Dickson) என்னும் கடற்கரைப் பட்டினத்துக்குச் சென்று ஆனந்தமாகக் கடலாடினோம். சுமார் மூன்று மைல் நீளக் கரை வளைந்து வளைந்து அமைந்திருக்கிறது. அலைகளின் மென்மை குளிப்பதற்கமைந்த குளத்தையே உணர்த்துகின்றது. கரையை ஒட்டினாற்போல் கடலுள் சிறிது தூரத்தே காணப்படும் சிறு தீவுகள் மரகதச் சோலையாய்க் கண் வழி கருத்தை மகிழ்விக்கின்றன. பகல் விருந்துக்குப் போய் ஆக வேண்டுமே என்ற உணர்வே நீண்ட நேரம் தங்காமல் போர்ட் டிக்ஸனிலிருந்து திரும்பச் செய்தது. அன்று சிரம்பான் நண்பர்கள்


போட்டி போட்டுக்கொண்டு விருந்தும் பானங்களும் அளித்து எங்களைத் திணறடித்து விட்டனர். கடலில் முழுகியதைவிட அவர்களின் அன்பிலேதான் முழுகிக் கிடந்தோம் என்றால் அது இச்சகமல்ல.

மாலையில் நகர மண்டபத்தில் சொற்பொழிவு. ஏராளமானவர்கள் ஆண்களும், பெண்களுமாய் மண்டபத்தில் நிறைந்து விட்டனர். இடமின்றித் தாழ்வாரத்தில் நின்றவர்கள் மேலும் பலர். சொற்பொழிவாற்றியவர்கள் பலரும் பல கோணங்களில் நின்று தமிழ், இலக்கிய, இலக்கண, நயங்களையும் பிற வேறு மேன்மைகளையும் பற்றிப் பேசினார்கள்.



சிங்கப்பூர் ஜனாதிபதி
இன்சே யூசோப் பின் இஷாக்


அத்துடன் மலாயா நாட்டின் செழிப்பையும், மலேசியா அரசாங்கத்தின் சிறப்பையும் பற்றிப் பலவாறு புகழவும் செய்தனர். மேலும், தமிழின்பால் காட்டும் தமிழரின் பக்தியை வாழ்த்தி, தமிழறிந்தார்க்கு அவர்கள் செய்யும் சிறப்பினைக் கருதி நன்றியும் கூறினர். நானும் இவற்றையே செய்தேன்.



சிங்கப்பூரத் துறைமுகம்

தென் கொரியாவிலிருந்து வந்துள்ள ஒரே மாநாட்டுப் பெருமகனை திரு கிம் யோங் ஹீ ஒரு விநோதமான மனிதர். சிறிதும் படாடோபம் இல்லாதவர். வெள்ளை மனத்தினர். சியங் பூக் தேசியப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். தமிழ் உள்ளிட்ட பல மொழிப் பாடங்களையும் அவர் கற்றுத் தருகிறாராம். தமிழில் பேசவும் எழுதவும் மிகவும் விரும்புகிறார். தமிழ் எழுத்துக்களை ஓரளவு புரிந்து கொண்டு படிக்கிறார். தமிழை ஆங்கிலத்தின் வழியேதான் கற்றுத் தருகிறாராம். அவர் பேச்சு கேட்போருக்கு மகிழ்ச்சியூட்டுவதுடன் கொரிய மக்கள்பால் பேரிரக்கம் கொள்ளவும் செய்தது. ''இந்த நாடு எவ்வளவு வளமாயிருக்கிறது; மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் நிம்மதியாய் இருக்கிறார்கள்; அடடா! கார்கள்தான் எவ்வளவு அழகாய் இருக்கின்றன! எத்தனை வகைகள், எத்தனை எண்ணிக்கை! பள்ளி ஆசிரியர்கள்கூட வன்றோ சொந்தக் கார் வைத்திருக்கிறார்கள்! எங்கள் நாடு இம்மாதிரி முன்னேற இன்னும் எவ்வளவு காலம் பிடிக்குமோ?'' என்றெல்லாம் பேசியதுடன் அமையாது, தமிழ் மொழியின் தொன்மையையும், இதிலுள்ள இலக்கியச் செல்வங்களின் வளத்தையும் புகழ்ந்துரைத்து, இனி தாம் அதிக மாணக்கர்களைத் தமிழ் பயிலச் செய்யப் போவதாகவும் கூறினர். இதை மாநாட்டின் பின் ஏற்பட்ட நல் விளைவுகளுக்கு ஒரு சான்றாகக் கொள்ளலாம் தானே?

சிங்கப்பூர் பிரதமர் லீ-குவான்-யீ




அன்றிரவு சிரம்பானில் தங்கியிருந்து, மறுநாள் காலை எழுந்து குளித்து முழுகிச் சிற்றுண்டி அருந்தியபின் மலாக்கா போய்ச் சேர்ந்தோம். அன்று அதாவது 26–4–66 செவ்வாய்க்கிழமை மலாக்காவில் திரு மணியம் அவர்கள் வீட்டில் பகலுணவு கொண்டோம். மலாக்காவில் பார்க்க வேண்டிய இடங்கட்கெல்லாம் சென்று வந்தோம். நண்பர்கள் வெங்கா அவர்களும் முத்தையா பிள்ளை

அவர்களும் பிறரும் எங்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து தந்தனர்.

மலாக்காவில் மாலை ஆறு மணிக்கு ஒரு தியேட்டரில் (பெயர் மறந்து விட்டது) பொதுக்கூட்டம் நடைபெற்றது. நாங்கள் யாவரும் சொற்பொழிவாற்றினோம். இரவு ஓர் அருமையான விருந்தளித்தனர் மலைக்கா அன்பர்கள். மலாயாவுக்கே பழைமையான, காலத்தால் முன்னதான, நகரம் மலைக்கா நகரம். இந்த உண்மையை இன்று அங்கு எஞ்சி நிற்கும் கோட்டை வாயில், கோயில், மாதா கோயில்கள் மட்டுந்தானா புலப்படுத்திக் கொண்டிருக்கின்றன? இல்லை. ஊரின் அமைப்பு, வீடுகளின் நிர்மாணம், குறுகலும், வளைவும் கொண்ட தெருக்கள், நகரினுள்ளே படரும் போக்குவரத்து நடைபெறும் கால்வாய் ஆகிய இவை எல்லாம் நகரின் பழைமையைப் பறைசாற்றிக் கொண்டேயிருக்கின்றன.

மலாக்கா ஓர் அழகிய நகரம். இங்கிருந்து கடலை நோக்கிக் கண்ணைச் செலுத்தினால் பசு மரங்களால் போர்த்தபட்ட மலைகள் நிமிர்ந்து நிற்கும் நேர்த்தியைக் கண்டு கண் குளிரும்; மனமும் மகிழும். வெறும் மலையாக இன்றிக் கா சூழ்ந்த மலைகளன்றோ அவை? இவற்றை யெல்லாம் மனத்துட் கொண்டுதானே இவ்வூருக்கு ''மலைக்கா'' என்று பெயரிட்டனர் நம் முன்னோர் என்று சிந்திக்கும் போது நம்மையறியாமலே பெருமையடைகிறோம். இத்தகைய மகிழ்ச்சிப் பெருக்குடன் அன்றிரவைக் கடலை நோக்கிய ஒரு கட்டடத்தில் தங்கியிருந்து கழித்தோம்.

மறுநாட் காலையில் அதாவது 27-4-66 புதன் கிழமை, காலைப் பணிகளை யெல்லாம் முடித்துக் கொண்டு சன்ஞசி மலைக்குச் சென்றோம். மலாக்கா நகரத்தார்கள் ஆலய வழிபாட்டுக்கும் எங்கள் வயிற்றுப்பாட்டுக்கும் ஏற்பாடு செய்திருந்தனர். முற்காலத்தில் யாரோ ஒரு துறவி அந்த இடத்தில் வேலாயுதம் ஒன்றைக் கடவுண்மங்கலம் (பிரதிஷ்டை) செய்து வழிபாட்டுக் கொண்டிருந்தாராம். அவருடன் ஒரு பசுவும் இருந்து வந்ததாம். அவர் முற்றத் துறந்த முனிவர் ஆதலால் ஊர் பேர் எதுவும் எவருக்கும் தெரியாதாம். எல்லாரும் 'சன்னுசி' என்றுதான் அவரைக் குறிப்பிடுவார்களாம். இன்று அங்கே அவர் சமாதியும் அப்பசுவின் சமாதியும் இருந்து வருகின்றன. நகரத்தார்கள் அருமையாக அக்கோயிலைக் கட்டி வழிபாடுகள் யாவும் நெறிப்படி நடைபெறச் செய்திருக்கிறார்கள்.




சிங்கபுரக் கடல் முகம்

மிக்க அமைதியும், உளம் கவர் அழகும் கொண்டு பவித்திரமான ஆலயமாக அது மிளிர்கிறது. உருத்திராக்க மரம் ஒன்றும் 'சன்னுசி' சமாதிக்கு அருகில் நின்று நிழலும் மணியும் தருகிறது. அங்கு சென்று வணங்கி அவனருள் பெற்றோம். அருமையாகத் தயாரித்திருந்த செட்டிநாட்டுப் பலகார வகைகளையும் உண்டு மகிழ்வுற்றோம் என்பதைச் சொல்லவா வேண்டும்? அங்கிருந்து புறப்பட்டு நேரே மூவார் சென்றோம். அங்கே பகல் உணவை முடித்துக் கொண்டு நாங்கள் உடனேயே சிங்கப்பூர் புறப்பட்டோம். எங்கள் குழுவில் உள்ள பலர் அன்று மூவாரில் தங்கிச் சொற்பொழிவாற்றி விட்டு மறுதினம் சிங்கப்பூர் வந்து சேர்ந்தார்கள்.

சிங்கப்பூர் என்பது ஒரு சிறு தீவு. தென்கிழக்கு ஆசியாவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது இது. ராணுவ ரீதியில் ஆசிய கண்டத்திலேயே ஒரு கேந்திரமாக விளங்கி வருகிறது. அதனாலேதான் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இங்கு ஒரு ராணுவக் கப்பல் தளம் சிறந்த முறையில் கட்டப்பட்டிருக்கிறது. இரண்டாவது உலகப் பெரும் போரில் இத்தளத்தின் பணி எத்துணையளவு மதிக்கப்பட்டது என்பதும், 1942ல் சிங்கப்பூர் ஜப்பானியர் வசமானதன் பின்னரே நேசநாடுகள் பல தோல்விகளைக் கண்டன என்பதும் உலகறிந்தவை.

1819ல் சர் ஸ்டாம்லீபோர்டு ராஃபிள்ஸ் (Sir Stamford Raffles) என்னும் பிரித்தானியரால் ஜோஹூர் சுல்தானிடம் ஈஸ்ட் இந்தியா கம்பெனி செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் சிங்கப்பூர் ஒரு வாணிக நிலையமாக அமைக்கப்பட்டது. 1824ல் ஈஸ்ட் இந்தியாக் கம்பெனிக்கே முழுத் தன்னாட்சியுடன் கூடிய தனி நாடாகச் சுல்தான் கொடுத்து விட்டார். 1826ல் பினாங்கு மலாக்காவுடன் சிங்கப்பூரையும் சேர்த்துக் குடியேற்ற நாடாகப் பிரிட்டிஷார் ஆக்கினார்கள். 1851ல் இந்திய ராஜப் பிரதிநிதியின் நேரடி நிர்வாகத்தில் வந்தது. 1867ல் ஐக்கிய அரசாங்கத்தின் குடியேற்ற நாட்டு அலுவலகத்துக்கு நிர்வாகப் பொறுப்பு மாற்றப்பட்டது. அன்று முதல் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் என்ற பகுதியில் ஒன்றாக இருந்து வந்த சிங்கப்பூர் 1958ல் தன்னாட்சியுள்ள தனி நாடாக ஆயிற்று. 1961ல் மலேயா, சரவாக் வட போர்னியோ ஆகிய பகுதிகளுடன் சிங்கப்பூரும் சேர்ந்து — 'மலேசியா' அமைக்கச் சம்மதித்தது.

(தொடரும்)


ARYAN
ஆரியன்
டி-லக்ஸ் மற்றும்
ஸ்டாண்டார்ட்
இவையிரண்டும்
தம்ப் க்ரிப்புடன்
கிடைக்கின்றன.
இந்தியாவின்
தலைசிறந்த
பிரஷ்கள்

போட்டிக்கு வந்த கதைகள்

பி.எஸ்.ராமையா


இன்று தமிழில் கதை எழுதுகிறவர்களை யெல்லாம் ஆளுக்கு ஒரு கதை எழுதி எனக்கே நேரில் அனுப்பி வைக்கச் சொல்லி, அவற்றைப் படித்து எடை போட்டுத் தரம் அறிவது போன்ற ஒரு வாய்ப்பு அண்மையில் எனக்குக் கிட்டியது. கல்கி வெள்ளி விழாச் சிறுகதைப் போட்டியில் கதைகளை எடை போட்டுத் தீர்ப்புச் சொல்லும் பஞ்சாயத்தாரில் ஒருவராக இருக்க வேண்டுமென்று என்னை அவர்கள் கேட்ட போது அது எத்தகைய அரிய வாய்ப்பு என்பதை நான் முழுதும் உணர்ந்திருக்க வில்லை.

ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு பெரிய சமூகத்தின் எண்ண ஓட்டம், மன நிலை, அந்த மனத்தின் அடித்தளத்திலே எழுந்து கொண்டிருக்கும் சலனங்கள், அடிப்படை உணர்ச்சிகளையெல்லாம் உட்புகுந்து பார்ப்பது போன்ற ஓர் அதிசய அநுபவமாக அமைந்தது அந்த வாய்ப்பு.

ஓர் ஆயிரத்துக்கும் அதிகமான கதைகள் போட்டியிட வந்திருந்தன. இந்த மாதிரிப் போட்டிகளில் முதலிடம் பெறும் கதைகளின் தரம் எப்படி இருக்கும், இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டவர்களும்கூட, ''அதிர்ஷ்டம் இருந்து இந்தக் கதைக்குப் பரிசு கிடைத்தால் கிடைக்கட்டுமே'' என்ற மனப்போக்கில் கதை எழுதி அனுப்பிவிடுகிறார்கள் என்று தோன்றுகிறது. பஞ்சாயத்துக்கும் அதிருஷ்டத்துக்கும் எத்தனைக்கு எத்தனை தூரம் !

பஞ்சாயத்தார் ஐவரும் வந்த கதைகள் அத்தனையையும் படித்துத் தீர்ப்புக் கூறுவது என்றிருந்தால் முடிவை அறிவதற்கு, கதைகளை எழுதியவர்களும், வாசகர்களும் ஓராண்டுக் காலமாவது காத்திருக்க நேர்ந்திருக்கும். ''கல்கி'' ஆசிரியக் குழுவினர் அதிர்ஷ்ட நம்பிக்கைக் கதைகளிலிருந்து தரம் உயர்ந்த கதைகளைப் பிரித்தெடுக்கும் பொறுப்பை ஏற்று, பஞ்சாயத்தார் வேலையை எளிதாக்கிக் கொடுத்தார்கள். ஒரு கதையில் உருவம், அமைப்பு, உள்ளடக்கம், நடை, உத்தி, பாத்திரச் சித்திரம் ஆகிய ஏதாவது ஒரு வகையில் சிறு சிறப்பு இருந்தாலும் மற்றக் குறைகளுக்காக அந்தக் கதையை ஒதுக்கி விடாமல் அதைப் பஞ்சாயத்தார் எல்லாரும் படிப்பதற்காக எடுத்து வைத்திருந்தார்கள். எந்தக் கதையும் அதில் கண்ட என்ன சிறப்புக்காக எடுத்து வைக்கப்பட்டது என்பதை அவர்கள் சொல்லாவிட்டாலும் என்னிடம் வந்த கதைகளைப் படித்த போது ஆசிரியக் குழுவினர் அந்தப் பணியில் எவ்வளவு கவனம் செலுத்தியிருந்தார்கள், எவ்வளவு நேர்மையுடனும், பொறுப்பு உணர்ச்சியுடனும் பொறுக்கி எடுத்திருந்தார்கள் என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

சிறு கதைக்கு ஒரு தனி இலக்கிய வடிவம். அதற்குப் பொதுவான சில இலக்கணங்கள் உண்டு என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அந்த இலக்கணங்களில் ஒன்றிரண்டு சொல்லால் சுட்டிக் காட்ட இயலாத மனத்து அளவுகள்தாம் என்பதை வற்புறுத்துகிறவன் நான். சிறுகதை இலக்கிய வடிவம் மேல்நாடுகளில்தான் முதன் முதலாகப் பிறந்து பரவியது. ஆனாலும் அந்தப் பிறநாட்டார் வகுத்துக் கொண்டுள்ள சிறுகதை இலக்கணங்களில் சில நம் நாட்டு இலக்கியக் கொள்கைகள், வளர்ச்சிக்குப் போதா, பொருந்தா என்பது என்னுடைய திடமான கருத்து. மற்றப் பஞ்சாயத்து உறுப்பினர்களுடன் அமர்ந்து தீர்ப்புச் சொல்லிய நேரத்தில் மற்றவர்களும் என்னைப் போலவே அந்தப் பொது இலக்கணங்களையும், மனத்தளவு எடைகளையும் வைத்துத்தான்



சிறுகதைப் பஞ்சாயத்தார்கள் கூடிப் பரிசீலனை செய்கிறார்கள்.

தரம் போட்டிருக்கிறார்கள் என்று அறிய எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

சிறுகதையின் இலக்கணங்களைப் பற்றியோ அல்லது போட்டியில் பரிசு பெற்ற கதைகளின் சிறப்புக்களைப் பற்றியோ விளக்குவதற்கு அன்று இந்தக் கட்டுரை. போட்டிக்கு வந்த கதைகளில் மேலோங்கி நின்ற ஒரு சிந்தனை, மன நிலை அல்லது மனப்போக்கு என் மனத்தில் தூண்டிவிட்ட எண்ணங்களை, ''கல்கி'' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவ்வளவுதான்.

ஏறக்குறைய முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குமுன் நான் எழுதிய ஒரு கதையை, கதைத் தலைவி, ''நான் ஒரு ஹிந்துப் பெண்'' என்று சொல்லுவதுடன் முடித்திருந்தேன். அந்தக் கதையைப் படித்து என்னைப் பாராட்டியவர்களில் சிலர் குறிப்பாக நம் நாட்டுப் 'பெண் உள்ளத்தை' நான் அவ்வளவு பனிச்சென்று சித்திரித்திருந்ததைச் சுட்டிக் காட்டினார்கள்.


கணவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும், அவன் திருடன், கொலைகாரன், குடிகாரன், வேறு வகையில் வெறியன், அற்பன், கஞ்சன், நெறி கெட்டவன், நோயாளியாக இருந்தாலும் அவன் கையால் தாலி கட்டிக் கொண்டவளுக்கு இந்தப் பிறவியில் அவன் ஒருவன்தான் ஆண் பிள்ளை, அவனுக்காக எந்தத் தியாகத்தையும் செய்வதுதான் அவள் எடுத்த பெண் பிறவியின் லட்சியம் என்ற கருத்துக்கள் அன்று என் மனத்தில் மேலோங்கியிருந்தன. என்னைப் பாராட்டியவர்களும் அந்தக் கருத்துக்களை ஆதரித்தார்கள்.

நோயாளிக் கணவனை ஒரு கூடையில் வைத்துத் தலை மேல் சுமந்து தாசிவீட்டுக்கு அழைத்துச் சென்ற நளாயினியின் படைப்பு அன்று தலைதூக்கி நின்றது. கணவனைப் பீடித்துள்ள நோய் எவ்வளவு பயங்கரமானது ஆனாலும் அவன் வேட்கும் கணவனுக்குக்கூட இணையவுள்ளவள்தான் ஹிந்து மனைவி என்ற அளவில் இருந்தது அன்றைய மன நிலை.

முப்பது ஆண்டுக் காலத்தில் எவ்வளவு பெரிய மன மாறுதல்! எங்களிடம் வந்தவற்றில் மூன்றில் ஒரு பங்குக் கதைகளில் நம்முடைய சமூகத்தில் இன்றைய கணவன் மனைவி உறவு பற்றிய கருத்துக்கள்தான் அடிப்படைத் தத்துவம் அல்லது மையப் புள்ளியாக இடம் பெற்றிருந்தது. அவர்கள் இருவருக்கும் இடையில் இருக்கும், இருக்க வேண்டிய மன, உள்ளத்து உறவு மட்டுமன்றி உடல் உறவும் மையப்புள்ளி அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருந்தது சில கதைகளில்.

பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்வரைகூடத் தமிழில் சிந்திக்கும் மக்களின் மதிப்பைப் பெற்ற பத்திரிகைகளில் ஆண் பெண் உடல் உறவுபற்றி இலை மறைவு காய் மறைவாகக்கூட எழுத ஒரு தயக்கம் இருந்தது. இன்று நிலைமை மாறி விட்டது. மேல்நாடுகளில் உள்ளது போல அதைப்பற்றிப் பச்சையாக எழுதி அதை ''இலக்கியம்'' என்று கட்சி யாடும் நிலைமை வராவிட்டாலும், தொடப்பட்டுள்ள விஷயம் அதுதான் என்று தெளிவாகக் காட்டும் அளவில் எழுதி வெளியிடும் எல்லையை இப்போது நாமும் அடைந்திருக்கிறோம்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே புதுமைப்பித்தன், கு. ப. ரா. இருவரும் உடல் உறவு பற்றிய கருத்தை வைத்துக் கதைகள் எழுதியிருக்கிறார்கள். பிச்சமூர்த்தி கூட அந்த மாதிரி ஒரு கதை எழுதியிருப்பதாக ஞாபகம். அவர்களைப் போன்ற கைவந்த இலக்கிய ஆயான்களைத் தவிர மற்றவர்கள் அந்தக் கருத்தைக் கையாளத் துணிந்ததில்லை.



நாவல் பஞ்சாயத்தினர் போட்டிக்கு வந்த நாவல்களைப்பற்றி விவாதிக்கிறார்கள்

போட்டிக்கு வந்த கதைகள் சிலவற்றில் கணவன் மனைவி உடல் உறவு மிக மிகப் பக்குவமாகக் கையாளப்பட்டிருந்தது. மன உறவு, உள்ளத்து உறவு மிகமிகத் தெளிவாக வேகத்துடனும், ஆழம் கனத்துடனும் எடுத்தாளப் பட்டிருந்தது; ஆனால் மேலே குறிப்பிட்டேனே, ''ஹிந்துப் பெண்''— அந்த மன நிலை சரிதானா, அவசியம்தானா நிலைக்குமா என்று சிந்திக்கத் தூண்டும் வகையில்.

தமிழில் சிறுகதை வளர்ச்சிக்குக் காதல் என்ற கருத்தின் பலம் மிகுதி என்று கருதும்



இலேசான மற்றும் சிரமமின்றி உபயோகிக்கத்தக்க பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள்

பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள் நேர்த்தியான மற்றும் நவநாகரீக முறையில் வாழ்க்கையை அனுபவிப்பதற்கு என்றே உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவை எவ்வளவு பயனுடையவையோ அவ்வளவு பிரகாசமானவை...எவ்வளவு உபயோகமானவையோ அவ்வளவு கவர்ச்சிகரமானவை. உங்களுடைய [illegible] உல்லாசமான மற்றும் வண்ணச் சூழ்நிலையில் [illegible] அவை மிகவும் சாத்தியமாக்குகின்றன...இது மட்டுமல்ல, உங்கள் வீட்டிற்குத் தேவையான உபகரணங்களைத் தேர்ந்தெடுப்பதில் உங்களுக்குள்ள ருசிக்காக மிக்க பாராட்டுதலையும் பெறுவீர்கள். நாள் முழுவதும் மற்றும் பிரதினமும் உங்களுடைய வாழ்க்கையை சிரமமின்றி [illegible], மகிழ்ச்சிகரமாக்கவும் பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாகின்றன. பல நிறங்களில் உங்களுக்கென தேர்ந்தெடுத்த விருப்பமான நிறங்களைச் சேர்க்கும் தயாரிப்புகள் கிடைக்கின்றன! எல்லா முதல் தரமான ஸ்டோர்களிலும் கிடைக்கின்றன!

பிரைட் பிரதர்ஸ் பிரைவேட் லிட்., [illegible], பம்பாய்.

பிரைட்டான [illegible]

மலிவுப் பதிப்பு நூல்கள்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு அவர்களின் ஆசியும் ஸ்ரீ முகமும் பெற்றவை.

வால்மீகி இராமாயணம்

இனிய எளிய தமிழில் கதை முழுவதும் இரண்டு பாகங்களாக எழுதப் பெற்றுள்ளது.

எழுதியவர்: அ.லெ.நடராஜன்

இரண்டு பாகங்களும் விலை ரூ. **5·50**

வியாசர் அருளிய மகாபாரதம்

(நான்கு பாகங்கள்)

மொத்தம் சுமார் 1400 பக்கங்கள், எளிய தமிழ் நடையில் கதைத் தொடர்பு விட்டுப் போகாமல் எழுதப் பெற்று இருக்கிறது.

எழுதியவர்: அ.லெ.நடராஜன்

நான்கு பாகங்களும் விலை ரூ. **10/-**

இதர மலிவு நூல்கள்

அநுபவ சமையற் கலை..... ரூ. 1-50
(ஸ்ரீமதி சரோஜினி சங்கர்)

அநுபவ வைத்தியம்......... ரூ. 1-00
(டாக்டர் சீனிவாசன்)

பதிற்றுப் பத்து............ ரூ. 2-75

பரிபாடல்................ ரூ. 2-00
(பண்டித, வித்துவான் மி.பொன். இராமநாதஞ் செட்டியார்)

அகநானூறு:

களிற்றியானை நிரை........ ரூ. 2-50

நித்திலக் கோவை......... ரூ. 2-00
(புலியூர்க் கேசிகன்)

அருணா பப்ளிகேஷன்ஸ்
13/1, உஸ்மான் ரோடு,
தியாகராய நகர்-சென்னை-17.

விக்கோ
உருவாக்கிய
மற்றொரு பிரபல
அழகு சாதனம்

......ஒப்பற்ற அழகு வாய்ந்த விக்கோ டர்மெரிக் வானிஷிங் க்ரீம் ஈடு இணை இல்லாதது. வசீகரத் தோற்றத்திற்கு மிகவும் உதவியாக இருப்பதினால், அது உண்மை மதிப்புக்களைப் பெரிதும் பெற்றிருக்கிறது. மேலும் விக்கோ டர்மெரிக் வானிஷிங் க்ரீமை யாவரும் பயன்படுத்திப் பயன் அடையலாம்.

ஆண்களும், க்ஷவரத்திற்குப் பின் உபயோகப் படுத்தலாம். அதில் சிறப்பு வாய்ந்த கிருமிநாசினி மருந்துகளின் குணங்கள் அடங்கியுள்ளதுடன் சருமத்தைப் போஷித்துப் பாதுகாக்கவல்லது. இது ஒரு அழகு சாதனம் மட்டுமல்ல ரோமம் வளர்வதைத் தடுக்கிறது. இது பண்டைக் கால முதற்கொண்டே அனுபவப்பட்ட விஷயம்.

விக்கோ டர்மெரிக் வானிஷிங் க்ரீம்

என்றால் மஞ்சள் ஸ்ப்ரே
சந்தன நறுமணம்
கொண்டது



விக்கோ லாபரட்டரீஸ்
பம்பாய் -14

STOCKISTS: MADRAS : R. L. GOWDER & Co., 59, Bunder Street
COIMBATORE : N. DESAI GOWNDER & Co., Avanashi Road
BANGALORE : K. S. GOWDER & Co., Subbedar Chatram Street

அளவுக்கு இங்கே காதல் கதைகள் எழுதப் பட்டுள்ளன. அந்தக் கதைகளைப் படித்த போது ஓர் இளைஞன் அல்லது இளம் பெண் ணுக்குத் தன் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்து கொள்வதில் சுதந்திரம் இருக்க வேண்டும், அதற்கு உரிமை உண்டு என்ற அளவில்தான் காதல் கருத்து கையாளப் படுகிறது என்று எனக்குப் பட்டதுண்டு. காதல் என்ற தத்துவத்தைத் தன்னை மறந்து, தன்னை அவன் அல்லது அவளாகவே ஆக்கிக் கொண்டு அதில் கரைந்துவிடும் அந்த அதிசய எல்லையில் ஏற்றி எழுதப் பட்ட கதைகள் மிக மிகக் குறைவுதான்.

இன்று அந்தச் சுதந்திரம் அல்லது உரிமை ஒப்புக் கொள்ளப்பட்டு அதற்கு அடுத்த படி சுதந்திரத்தைப் பற்றி மக்கள் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்ற எண்ணத்தை எழுப்பின போட்டிக்கு வந்த சில கதைகள் என் மனத்தில். சிந்திக்கும் எல்லையை எட்டாவிட்டாலும் நம் சமூகத்தின் உள்ளத் திலே அந்தச் சலனம் நிகழ்ந்து விட்டது வேகம் அடைந்து வருகிறது என்ற கருத்து எழுந்தது.

முந்திய காதல் கதைகளில் ஜாதி வேற் றுமை, சமூக நிலையில் ஏற்றத்தாழ்வுகள், செல்வ நிலை, ஏழைமை, காதலர்களின் பெற்றோர்களுடைய சொந்த விரோதங்கள் குரோதங்கள் போன்றவைதாம் பின்தள மாக அமைந்திருந்தன. இப்போது வந்த கதைகளில் ஒன்று அல்லது இரண்டில்தான் இந்த ஏற்றத்தாழ்வுத் தடுக்குகள் இடம் பெற்றிருந்தன. நம் சமூக வாழ்வில் அம் மாதிரி ஏற்றத்தாழ்வுகள் சுடர் மங்கிப் போய் விட்டன என்பதும் தெளிவாகத் தெரிந்தது.

நம் நாட்டில் கணவன் மனைவி உறவில் நேரும் சிக்கல்கள் நெருக்கடிகளுக்கு மருத்துவ மாகச் சமுதாய எல்லையில் நாம் விவாகரத்துச் சட்டம் செய்து வைத்திருக்கிறோமே, அந்த மனப் பக்குவம் மெள்ள மெள்ளப் பரவி வலுப்பெற்று வருகிறது. அதுதான் சில கதை களுக்குத் தலையூற்றாக இருந்திருக்கிறது என் பதையும் இந்தக் கதைகளில் காண முடிந்தது.

நம்முடைய சமூக வாழ்வு மனப்போக்கில் நேர்ந்துள்ள இந்த மாறுதல் அல்லது வளர்ச்சி பெற்ற அளவு, அரசியல், பொருளா தார வாழ்வில் நேர்ந்துள்ள மாறுதல் அல்லது வளர்ச்சி கதைகளில் இடம் பெறவில்லை என் பதையும் இங்கு சுட்டிக்காட்டியாக வேண் டும். அந்தத் துறைகளில் நிகழும் மனச் சலனங்களை நான் இரண்டொரு கதைகளில் கூடக் காணவில்லை.

''ஹிந்துப் பெண்'' இன்று புரட்சி செய்து கட்டுக்களை உடைத்தெறிய முண்டிக் கொண் டிருக்கிறாள் என்ற கருத்து சரியா தப்பா என்பதைப் பற்றி நான் கவலைப்படவுமில்லை, இங்கே அதைப் பற்றி ஆராயப் போவது மில்லை. இன்று தமிழ் எழுத்தில் இந்த மன நிலை தூக்கலாகத் தெரிகிறது என்பதை எடுத்துக் காட்டுவதுதான் என் நோக்கம்.

சரியாக நாற்பது ஆண்டுகளுக்குமுன் சென்னையில் ஒரு பெண் தன் மேல் மண் ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு தீ வைத் துக் கொண்டு விட்ட செய்தி நகரத்தில் பெரிய பரபரப்பை விளைவித்தது. அவளுடைய கணவனே அப்படி அட்டூழியம் செய்து விட்டதாக ஒரு வதந்திகூடப் பரவியது.

அந்தச் செய்தி வந்து இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு நகரில் பவளக்கொடி நாடகம் ஒன்று நடந்தது. நடிக மேதை கே. எஸ். அனந்தநாராயணன் அதில் அல்லி யாக நடித்தார். மகன் புலந்திரனின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகச் செய்தி கிடைத்து அர்ஜுனன் மதுரைக்கு விரைந்து வந்தான். கிருஷ்ணனும் அவனுடன் வந்தார். மகனைப் பற்றிய செய்தியை அனுப்பிய அல்லியின் இயல்பு அர்ஜுனனைக் கண்ட வுடன் சீறி எழுந்தது. அவனை நேரில் காண வும் மறுத்து அரண்மனைக்கு வெளியிலேயே நிறுத்தி வைக்க உத்தரவிட்டாள். கண்ணன் அல்லியிடம் போய் அர்ஜுனனுக்காக வாதாடினார். கணவன் எவ்வளவு பெரிய தவறு செய்திருந்தாலும் மனைவி அதைப் பொறுத்து மறந்து அவன் மகிழ்ச்சிக்குரியன வற்றைச் செய்வதுதான் பாரத நாட்டு ஸ்திரீ தர்மம் என்று உபதேசித்தார்.

அல்லியாக நடித்த அனந்தநாராயணன் கண்ணனிடம், ''அண்ணா! நீங்கதானே இந்த அருமை மைத்துனருக்குக் கீதையை உபதேசித்தது?'' என்று கேட்டு, அவர் ஆமென்றவுடன், ''கணவன் மனைவியின் மேல் எண்ணெயை ஊற்றித் தீ வைத்தாலும் மனைவி அதைப் பொறுத்து மறந்து அவனை மகிழ்விக்கத்தான் வேண்டுமா?'' என்றார்.

மக்களின் கைதட்டல் ஆரவாரம் கொட்டகையை அதிர வைத்தது. நாற்பது ஆண்டுகளுக்குமுன் மக்கள் கூட்டத்தின் கைதட்டலுக்காக வீசப்பட்ட சமத்காரப் பேச்சு என்று கருதப்பட்ட அந்தக் கேள்வி இன்று நம் இலக்கியத்தில் மையப்புள்ளியாகி முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருக்கிறது.



நல்ல யோசனை !

'லண்டன் எகானமிஸ்ட்' என்ற பத்திரி கையில் ஈரான் தேச மன்னர் புதிதாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடு களுக்குப் பொருளாதார ரீதியில் ஒரு யோசனை சொல்கிறார்: ''பொருளாதார நிபுணர் கூறுவதை நன்கு கேட்டுக் கொள்ளுங்கள் ; பிறகு அதற்கு நேர் மாறான நடவடிக்கை எடுங்கள்!'' நானும் அதையே நம் பிரதமர் இந்திரா காந்திக் குக் கூற விரும்புகிறேன். ''திட்டக் கமிஷன் கூறுவதைக் கேளுங்கள்; அதற்கு நேர் எதிரிடையான காரியங்களைச் செய்யுங்கள். நாடு நலம் பெறும்!''

எம். ஆர். மஸானி

முன்கதைச் சுருக்கம்

துலிங்கம் முதல் குமரிவரை ஒரு குடைக் கீழ் கிருஷ்ணதேவராயர் விஜய நகரத்திலிருந்து ஆட்சி செய்து வந்த காலம்.

வடக்கிலிருந்து வந்த பகைவர்களின் படையெடுப்புக்கு விஜயநகரம் ஒரு பேரரணாக விளங்கியதால், தெற்கில் உறையூரில் ஆட்சி செலுத்தி வந்த வீர சோழன், வரலாற்றின் பயங்கரமான படிப்பினையை மறந்துவிட்டுப் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றுகிறான். சந்திரசேகர பாண்டியரை நாட்டை விட்டுத் துரத்துகிறான்.

சந்திரசேகர பாண்டியர் விஜயநகரத்துக்குச் சென்று சக்கரவர்த்தி கிருஷ்ண தேவராயரிடம் முறையிடுகிறார். வடக்கே பாபரின் வெளிப் பகை அச்சுறுத்திய சமயத்தில், தெற்கே தமிழ் நாட்டில் ஒற்றுமை குலைந்து உட்பகை வளர்வதைக் கண்டு சிந்தெழுகிறார் கிருஷ்ண தேவராயர்.

சக்கரவர்த்தி தமது தளநிகாரியான நாகம நாயக்கரைப் படைகளோடு பாண்டிய நாட்டுக்குப் புறப்படும்படி கட்டளையிடுகிறார். வீர சோழனை முறியடித்துப் பாண்டிய நாட்டைப் பாண்டியருக்கே மீட்டுத் தருமாறு பணிக்கிறார்.

நாகமநாயக்கரின் குமாரன் விசுவநாதன் சக்கரவர்த்தியின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான இளைஞன். அவன் மீது அவன் தந்தையைப் போலவே, தந்தையின் நண்பரான அமைச்சர் சாளுவ நரசிம்மரும் அன்பு கொண்டிருக்கிறார். அவன் எதிர்காலத்தில் ஒரு தனியான சாம்ராஜ்யத்தையே உருவாக்கும் ஆற்றல் பெற்றவன் என்பதை அவர் கண்டுகொள்ளுகிறார். அவனுக்குத் தமது குமாரத்தி லட்சுமியைத் திருமணம் செய்து கொடுக்க விரும்புகிறார். லட்சுமியும் விசுவநாதனும் திருமணக் கனவுகளை வளர்த்துக்கொண்டு ஒன்றிப் பழகுகிறார்கள்.

பாண்டிய நாட்டுக்குப் படையெடுத்துச் செல்லும் நாகம நாயக்கரிடம், பாண்டிய நாட்டைக் கைப்பற்றி அவரையே ஆட்சி செய்யும்படி தூண்டிவிடுகிறார் அமைச்சர் சாளுவர். பாண்டிய நாடு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதுமே தம் எதிர்கால மருமகனான விசுவநாதனின் தனி ஆட்சிக்கு வர வேண்டுமென்பது சாளுவரின் ஆசை.

சாளுவரின் தூண்டுதலின்படியே, வீர சோழனை முறியடித்துப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய நாகமர், அதைப் பாண்டியரிடம் கொடுக்காமல் தாமே ஆட்சி செய்கிறார். சக்கரவர்த்தி கிருஷ்ண தேவராயருக்கு நாகமரின் துரோகம் ஆத்திரமூட்டுகிறது. அவர் மீது படையெடுத்து நாட்டை மீட்டுச் சந்திரசேகர பாண்டியரிடம் கொடுத்து வர, அவருடைய குமாரன் விசுவநாதனே முன் வருகிறான்.

மகனும் தந்தையோடு சேர்ந்து கொண்டு துரோகம் செய்யக் கூடும் என்று சிலர் தடுத்தும், கிருஷ்ண தேவராயர் அவனையே, அவன் தந்தைக்கு எதிராக அனுப்புகிறார். விசுவநாதனை அமைச்சர் சாளுவரும் அவன் உயிருக்குயிரான லட்சுமியும் தடுத்துப் பார்க்கிறார்கள். நேர்மையும் லட்சியமுமே உயர்ந்ததென்று போற்றும் விசுவநாதன், சக்கரவர்த்தியின் ஆணைப்படி அவன் தந்தையை வென்று அவரைச் சிறைப்படுத்திக் கொண்டு மீளுகிறான்.

விசுவநாதனின் நேர்மைக்குப் பரிசாக அவன் தந்தைக்கு விடுதலை மட்டுமல்ல, அவர் முன்பு பார்த்து வந்த தளநிகாரி பதவியும் அளிக்கிறார் சக்கரவர்த்தி. அமைச்சர் சாளுவ நரசிம்மருக்கு விசுவநாதன் மீது கடும் கோபம் வருகிறது. அவனுடைய வாய்ப்பை அவனே கெடுத்துக் கொண்டதாக நினைத்து, அவனுக்கு எதிராகச் சேரநாட்டு உதயமார்த்தாண்டன் என்ற சிற்றரசனைக் கொண்டு வர முயல்கிறார். அவனுக்கு லட்சுமியின் பேரழகு மயக்கம் தருகிறது. உதயமார்த்தாண்டன் சாளுவரின் யோசனைப்படி பாண்டி நாட்டில் கலவரங்களைத் தூண்டி விடுகிறான்.

கிருஷ்ணதேவராயர் உடல் மெலிந்த நிலையில் இந்தக் கலவரச் செய்தி அவருக்கு எட்டுகிறது. விசுவநாதனை மீண்டும் அங்கு படைகளோடு போகும்படி கட்டளையிட்டுவிட்டு, மன அதிர்ச்சியால் சிம்மாசனத்திலிருந்தவாறே உயிர் துறக்கிறார்.

கிருஷ்ணதேவராயரின் மறைவால் அமைச்சர் சாளுவ நரசிம்மருக்கு மீண்டும் தமது திட்டத்தில் நம்பிக்கை ஏற்படுகிறது. அதற்குத் துணையாக அடுத்துச் சக்கரவர்த்தியாக வந்த அச்சுத ராயருக்கும் கிருஷ்ணதேவராயரின் மருமகனான ராமராஜருக்



கும் அதிகாரப் போட்டியைத் தூண்டி விடுகிறார் சாளுவர். தமது குமாரத்தி லட்சுமியின் வாயிலாகத் தெற்கே செல்லும் விசுவநாதனுக்குப் பிரிவினையில் ஆசை ஏற்படுத்த முயல்கிறார். தாமும் சோழ நாட்டுக்குச் சென்று தனி சாம்ராஜ்யம் ஏற்படுத்தத் திட்டமிடுகிறார்.

விஜயநகர சாம்ராஜ்யத்தைச் சிதைக்க விசுவநாதன் முன்வந்தால், அவனுக்கே லட்சுமியை மணம் செய்து கொடுப்ப

தென்ற எண்ணமும் அவருக்கு இல்லாமல் இல்லை. விசுவநாதன் தெற்கே கிளம்பி விட்டான் படைகளோடு. அதைத் தொடர்ந்து சாளுவரின் அரசியல் சூழ்ச்சிகளும் தொடங்கி விட்டன.

விசுவநாதன் லட்சியத்தில் வெற்றி பெறுவானா? வாழ்க்கையில் வெற்றி பெறுவானா? லட்சுமியின் ஆசைக் கனவுகள் என்ன ஆகின்றன?

மேலே படியுங்கள்:

அத்தியாயம் பன்னிரண்டு

அதிகாரப் போட்டிகள்

விஜயநகரத்து அரசியலில் ராமராயரின் செல்வாக்கு திடீரென்று மிகுந்து வருவதைக் கண்டு முதலில் பதுங்கத் தொடங்கிய சாளுவ நரசிம்மர் சமயம் பார்த்துப் பாயத் துணிந்து விட்டார். பெரும் படைகளோடும் செல்வத்தோடும் விசுவநாதன் விஜயநகரத்தை விட்டுக் கிளம்பிச் செல்லும் வரையிலும் அவருக்கு ராமராயரிடம் பணிந்து கொடுக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருந்தது; அது தீர்ந்து விட்டது.

பாய்வதற்கு முன்னே புதருக்குப் பின்னால் பதுங்கியிருக்கும் புலி போல் காத்திருந்தவர்,



திடீரென்று மீண்டும் தமது சுய உருவத்தைக் காட்ட முனைந்து விட்டார்.

புதிய சக்கரவர்த்தி அச்சுதராயரிடம் சென்று அவரைத் தனிமையில் சந்தித்து அவரிடம் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். ''சக்கரவர்த்திகளே! தாங்கள் இந்தச் சிம்மாசனத்துக்கு வர வேண்டுமென்பதற்காக அரும் பாடுபட்டவன் நான். என்னுடைய எண்ணம் நிறைவேறி விட்டது என்று நான் இப்போது மகிழ்ச்சியடையும் நிலையில் இல்லை. இதே போக்கில் தாங்கள் ராமராயரை விட்டுக் கொண்டு போனால் விரைவில் ராமராயர் இந்தச் சிம்மாசனத்திலும் தாங்கள் சிறைக்குள்ளேயும் இருக்க நேரிடும்!'' என்று அவருக்கு அச்சமூட்டி விட்டார்.

அச்சுதராயருக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவரால் சாளுவ நரசிம்மரின் பேச்சுக்களை அப்படியே முழுமையாக நம்பவும் முடியவில்லை; அவற்றை நம்பாமலும் இருக்க முடியவில்லை.

என்றாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாதவர் போல், ''அந்த அளவுக்கு அவர் போகக் கூடியவரல்லர்!'' என்றார்.

''என்னுடைய அதிகாரத்தில் அவர் குறுக்கிடுவதால் அவர் மீது பொறாமை கொண்டு நான் கூறுவதாக நீங்கள் நினைக்க வேண்டாம். எனக்கு இந்தப் பதவியும் அதிகாரமும் துரும்புக்குச் சமம். நான் இதைத் துறந்து செல்வதென்ற முடிவுக்கு முன்பே வந்து விட்டேன்!''

அச்சுதராயர் அதிர்ச்சியுற்றார். அவர் சாளுவ நரசிம்மரின் உதவிகளைப் பல முறை நாடியிருந்தாரென்றாலும், எப்போதுமே அவருக்குச் சாளுவரிடம் ஆழ்ந்த நம்பிக்கை ஏற்பட்டதில்லை. ராமராயர் குறுக்கிட்டுச் சாளுவரின் அதிகாரங்களைக் குறைத்து வந்தது ஒரு வகையில் அவருக்கு ஆறுதலையே தந்தது. ஆனாலும் அவர் சாளுவரை விஜய நகரத்திலிருந்து அனுப்பி விடவும் துணியவில்லை. அமர நாயக்கர்கள் பலரது ரகசியமான ஆதரவைப் பெற்றவர் சாளுவர். எதிர் காலத்தில் எப்போதாவது ராமராயரின் கை அளவுக்கு மீறி வலுப் பெற்றுத் தமக்கெதிராகவே திரும்புமானால், அப்போது ராமராயருக்கு எதிராகச் சாளுவ நரசிம்மரைப் பயன்படுத்த நினைத்திருந்தார் அச்சுதராயர்.

ஆகவே, சாளுவர் விஜயநகரத்தை விட்டுச் செல்ல நினைத்தது அவருக்குப் பெருத்த மனக் கலக்கத்தைக் கொடுத்தது.

''வேண்டாம். நீங்கள் விஜயநகரத்தை விட்டுச் செல்லும் யோசனையைக் கைவிட்டு விடுங்கள். ராமராயரை நான் இப்படியே விட்டுக் கொண்டிருக்கப் போவதில்லை. அவர் பெரிய சக்கரவர்த்திகளின் மருமகன் என்பதால் அவருக்கு அரண்மனைக்குள் செல்வாக்கு மிகுந்திருக்கிறது. என் அண்ணியர் திருமலா தேவியாரும் சின்னா தேவியாரும் அவருக்குப் பின்பலமாக இருக்கிறார்கள். அதனால்தான் நான் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். நீங்களும் சிறிது காலம் எனக்காகப் பொறுத்துக் கொண் டிருங்கள்'' என்றார் அச்சுதராயர்.

சாளுவ நரசிம்மருக்கு இச்செய்தி மிகவும் ஆறுதல் அளித்தது. வெளித் தோற்றத்துக்கு ராமராயரின் விருப்பப்படி ஆட்சி நடத்துபவர் போல் தோன்றினாலும், உள்ளூற அவர் மீது அச்சுதராயர் கொண்டிருந்த வெறுப்பு வளர்ந்து வருவதைச் சாளுவர் கண்டு கொண்டார். சாம்ராஜ்யத்தின் பலம் கிருஷ்ண தேவராயருடைய மறைவினால் மட்டும் குன்றவில்லை; அச்சுதராயருக்கும் ராமராயருக்கும் ஏற்பட்டிருந்த மனவேற்றுமையால் அதன் அடிப்படையே விரிசல் கண்டு வருகிறது என்பதையும் சாளுவர் அறிந்து மகிழ்ந்தார்.

''சக்கரவர்த்திகளே! நான் இங்கு இருந்தால் உங்களுக்குத் துணையாக இருக்குமென்று நீங்கள் நம்புகிறீர்கள். நான் இங்கு இருப்பதை விடச் சோழ நாட்டில் இருந்தால்தான் உங்களுக்கு நல்லது. மேலும் உங்களுக்கு என்னைவிட மிகவும் நெருங்கிய ஒருவரைத் துணையாக வைத்துச் செல்ல வேண்டும் என்றும் நான் ஆசைப்படுகிறேன்.''

அச்சுதராயருக்கு அருகே மிகவும் நெருங்கிச் சென்று இரகசியமாகவே அவருக்கு ஆலோசனை வழங்கினார் சாளுவ நரசிம்மர். அச்சுதராயருக்கும் அது சிறந்த ஆலோசனை என்றே தோன்றியது.

''ராமராயர் மளமளவென்று அவருக்கு நெருங்கிய உறவினர்களையும் நண்பர்களையும் பொறுப்பான பதவிகளில் அமர்த்தி வருகிறார். எங்களைப் போன்ற அநுபவசாலிகளையும், தங்களிடம் விசுவாசம் கொண்டவர்களையும் பதவிகளிலிருந்து அகற்றிவிடத் திட்டமிட்டிருக்கிறார். இந்தச் சமயத்தில் தாங்கள் ராமராயருக்கு எதிராக என்னுடைய இடத்துக்குத் தங்கள் மைத்துனர் சாலக ராஜுவைக் கொண்டு வந்து விடவேண்டும். நான் என்னதான் இருந்தாலும் தமிழ் நாட்டுக்காரன்; அன்னியன். சாலகராஜு உங்கள் சொந்த மைத்துனர். சக்கரவர்த்திகளின் வம்சத்தில் பிறந்தவர். ராமராயரை விட அவருக்கே அதிக உரிமையும் இருக்கிறது. ராமராயர் என்னதான் பெரிய சக்கரவர்த்திகளின் மருமகனாக இருந்தாலும் அவர் பிறப்பில் துளுவ வமிசத்தைச் சேர்ந்தவர். நாம் எல்லாம் கிருஷ்ண தேவராயரைப்போல் சாதி குலம் பார்க்காமல் இருக்க முடியுமா என்ன?''

அச்சுத ராயருக்கு எப்படிச் சாளுவ நரசிம்மருக்கு நன்றி கூறுவதென்றே தெரியவில்லை. ஒரே சமயத்தில் சாளுவர் அவருக்கு இரண்டு வலிமையான ஆயுதங்களை ராமராயருக்கு எதிராக வழங்கியது போலிருந்தது. ஒன்று அவருடைய சொந்த மைத்துனர் சாலகராஜு, மற்றொன்று ராமராயரின் குடிப் பிறப்பு.

''சாளுவரே! நீங்கள் மிகப் பெரிய ராஜ தந்திரி!'' என்று வாய் விட்டுப் பாராட்டினார் அச்சுதராயர். ''சாதி, சமயம், இனம், மொழி, சொந்த பந்தம் இவைகளை எப்படியெல்லாம் அரசியலுக்குப் பயன்படுத்துவது என்பதை நீங்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கிறீர்கள். இதனாலேயே நான் உங்களைச்

தாய்த் தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்க இருபத்தைந்து ஆண்டுகளாக இனிய தொண்டாற்றி வரும் கல்கி வாழ்க ஓங்கி வளம்பெற வளர்ந்து பன்னூறாண்டுகள் பாங்குடன் பொலிகவென்று

லிப்கோ 'பதிப்பகம் பல்லாண்டு பாடி வாழ்த்துகிறது!

'கல்கி' வெள்ளி விழாப் பரிசுத் திட்டத்தில் பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு
'லிப்கோ'வின் உளங்கனிந்த வாழ்த்துக்கள்!

படிப்போர் நெஞ்சத்தைத் தொட்டு மனத்தைப் பாகாய் உருகவைக்கும் அருள்நெறி காட்டும் புதிய வெளியீடுகளை இந்நன்னாளில் அறிமுகப்படுத்துவதில் 'லிப்கோ' பெருமை கொள்கிறது.



1. ஸ்ரீ மஹா பக்த விஜயம் 496 பக்கங்கள்
   2-ஆம் பதிப்பு ஸங்க்ரக பஜனாவளியுடன் ரூ. 3.50
2. ஸங்க்ரக பஜனாவளி மட்டும் ரூ. 0.60
3. திருவிளையாடற் புராணம் (சுருக்கம்) ரூ. 1.00
4. பெரிய புராணம் (சுருக்கம்) ரூ. 1.00
5. திருப்புகழ் மஞ்சரி ரூ. 1.20

தி 'லிட்டில் ஃப்ளவர் கம்பெனி (லிப்கோ), சென்னை-17; எம். தாமோதரம் & கம்பெனி, அப்பா பில்டிங்ஸ்; சென்னை-1; ஹிக்கின்பாதம்ஸ், கஸ்தூரிமித்திரன் ரெயில்வே ஸ்டால்கள்; மற்றும் எல்லாப் புத்தகக் கடைகள்.

புத்தக உலகில் LIFCO பெரும் புகழ்

NALIN

ராம்தீர்த் பிரஹ்மி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கரு நிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்குக் குளிர்ச்சியளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்கியமாக வாழ்வீர்கள்.

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)


SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR, BOMBAY-14

மதராஸ் டிப்போ: 25, வாணியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3
போன்: 34268

எமது சென்னை ஆபீஸில் யோகாசன வகுப்புகள் நடத்தப்படுகின்றன

எமது வைரவிழாக் கொண்டாட்டத்தின் போது எமது 6,00,000 வாடிக்கையாளர்களுக்கும் முகமன் கூறுகிறோம்



1906

அவர்கள் நம்பிக்கைகளுக்கும் கோடியாக ஒருமனச்செம்மல் அனித்தாள் எவ்வளவு கன்றுக இருக்கும் என்ற எண்ணம் எழுகிறது. வைரவிழாவைக் கொண்டாடும் அளவுக்கு நாங்கள் வளர்ந்திருப்பது அவர்களுடைய நம்பிக்கையில்தான். இதற்காக அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மறக்க முடியாத இந்த நன்னாளில் எமது பங்குதாரர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் எங்கள் கலத்தில் அக்கறையுடையவர்களுக்கும், மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களின் நம்பிக்கைகளுக்கும் முகமன் கூறும் இத்தருணத்தில், அவர்களுடைய வளர்ச்சிக்கும், கூடவே எமது வளர்ச்சிக்குமான சேவைக்கு எங்களை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்கிறோம். அவர்களுக்கும், தேசத்திற்கும் மேலும் சிறந்த முறையில் சேவை செய்யவேண்டுவதற்கான பாதையைக் கொடுக்கும் வளர்ச்சியே இது.

60 வருட சேவை—
ஜூலை 1, 1906—ஜூலை 1, 1966
அகில இந்திய வைர விழாக் கொண்டாட்டம்
ஜூலை—டிசம்பர் '66.

SERVING TO GROW · GROWING TO SERVE · CANARA BANK LTD. 1906-1966

திரவியாதாரங்கள் 110 கோடிக்கு மேல்

—கிளைகள் 240க்கு மேல்

—உபயோகங்கும் பிரதிநிதிகள்

கனரா பாங்க் லிமிடெட்

பதிவுபெற்ற அலுவலகம்:
ஹட் ஹில், மங்களூர்.
தலைமை அலுவலகம்:
112, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர்.

CISTA'S-CB-11A tam.

சோழ நாட்டுக்கு அனுப்பத் தயங்குகிறேன். நீங்கள் என்னை விட்டுப் பிரிவதை நான் விரும்பவில்லை.''

''நான் எங்கு சென்றாலும் நமது தூதுவர்கள் வாயிலாகத் தொடர்பு கொள்ள முடியும். நான் புறப்படுவதற்குள் தங்களுடைய நிலையை இங்கு உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டுத்தான் புறப்படுவேன். நீங்கள் என்னைச் சோழ நாட்டுக்கு அனுப்புவது கூட நானாக விரும்பிக் கேட்டு அனுப்புவதாக இருக்காது. எனக்குத் தண்டனை அளித்து என்னைப் பதவியிலிருந்து நீக்கிச் சோழ நாட்டுக்கு அனுப்பப் போகிறீர்கள்!''

''என்ன! தங்களுக்குத் தண்டனையா?''

''ஆமாம்; தண்டனைதான்; தாங்கள் எனக்குத் தண்டனை அளித்து வெளியேற்ற வேண்டுமென்பதுதான் என் வேண்டுகோள்!''

பிறகு அச்சுதராயரிடம் தமது திட்டங்களை விளக்கலானார் சாளுவ நரசிம்மர். அந்தத் திட்டங்களின்படி நடந்தாலே ராமராயரின் சந்தேகங்களுக்கு இடமில்லாமல் இருக்குமென்றும், அதே சமயம் ராமராயரின் அதிகாரமும் குறையுமென்றும் கூறினார். சாளுவர் கூறிய திட்டங்களைக் கேட்ட பிறகு அச்சுதராயருக்கே சாளுவரிடம் அச்சம் பிறந்து விட்டது. 'இவ்வளவு அரசியல் தந்திரங்கள் கொண்ட சாளுவர் நம்மை விட்டுச் சற்று விலகியிருப்பதும் நல்லதுதான்; இன்றைக்கு ராமராயருக்குச் செய்வதை நாளைக்கே நமக்கும் செய்யத் தயங்க மாட்டார்' என்று நினைத்தார் அச்சுதராயர்.

''சரி; அப்படியே நீங்கள் கூறுவது போல் ஓர் அரசியல் நாடகம் நடத்திவிடுவோம். அந்த நாடகத்தை அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள். அதற்கேற்றவாறு அமர நாயக்கர்களின் ஆதரவும் உங்களுக்கு இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றார் சக்கரவர்த்தி.

வெற்றி வீரரைப் போல் அரண்மனையிலிருந்து திரும்பினார் சாளுவ நரசிம்மர். திரும்பும்போதே தாம் அச்சுதராயரோடு அந்தரங்க ஆலோசனை நடத்தி வந்ததாகச் செய்தியை வெளியில் பரவ விட்டார். ராமராயருக்கு அந்தச் செய்தி கிடைப்பதற்கான ஏற்பாடுகளை மறைமுகமாகச் செய்து முடித்தார்.

அடுத்தாற்போல் அவருடைய மாளிகையிலேயே அமர நாயக்கர்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. அந்தக் கூட்டத்துக்கு அச்சுதராயரின் மைத்துனர் சாலகராஜுவைத் தலைமை தாங்க வைத்துத் தமது அரசியல் சதுரங்கத்தைத் தொடங்கினார் சாளுவ நரசிம்மர்.

''பெரிய சக்கரவர்த்திகளின் காலத்துக்கு முன்பு அமர நாயக்கர்களாகிய நாம் வைத்ததே விஜயநகரத்தில் சட்டமாக இருந்தது. ஏனென்றால் நாம் ஆட்களைத் திரட்டிப் பொருள்களைச் சேகரித்துச் சாம்ராஜ்யத்துக்கு வழங்கி வருகிறோம். நிர்வாகத்தைக் கவனிக்கிறோம். போர்க் காலங்களில் உயிர் துறக்கச் செல்கிறோம். ஆனால் கிருஷ்ணதேவராயர் நம்முடைய அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தாரென்றாலும், அவரும் அவைகளைத் துஷ்பிரயோகம் செய்யவில்லை. இந்த நிலையில் இப்போதைய சக்கரவர்த்திகள் அச்சுதராயரிடம் நாம் குறை காண முடியாது. அவர்கள் நம்முடைய அதிகாரங்களை நமக்கு வழங்கச் சித்தமாக இருக்கிறார்கள். ஆனால் விஜய நகர சாம்ராஜ்ய அரசியலில், அரச குலத்தில் பிறக்காத ஒரு மூன்றாவது மனிதர் தலையிடுவதை நம்மால் பொறுக்க முடியாது! இங்கே உள்ள சாலக ராஜுவுக்கு இல்லாத உரிமை ராமராயருக்கு எப்படி வந்தது? இதை யோசித்துத் தக்க நடவடிக்கை எடுக்கவே நாம் இங்கு கூடியிருக்கிறோம்'' என்றார் சாளுவ நரசிம்மர்.

ஏற்கனவே அதிகாரப் பசியால் துடித்துக் கொண்டிருந்த அமர நாயக்கர்களுக்கு அமைச்சரின் துணிச்சல் ஒரு வழிகாட்டியாகவே அமைந்தது. சாளுவ நரசிம்மரோ சிறிது கூடத் தன்னலப் பற்று இல்லாதவர் போலவும், சாலகராஜுவின் சார்பில் தமது பதவியையே துறக்க முடிவு செய்து விட்டவர் போலவும் பேசினார். அவரது தூண்டுதலால் உரம் பெற்ற அமரநாயக்கர்கள் தலைக்குத் தலை ராமராயரைப் பற்றிக் குறை கூறத் தொடங்கினார்கள். சாளுவ நரசிம்மருக்கு அன்றையக் கூட்டம் மிகப் பெரும் வெற்றி தரும் கூட்டமாகவே அமைந்து விட்டது.

அத்தியாயம் பதின்மூன்று

அரசியல் நாடகம்

அச்சுதராயரின் சபைக்கு அன்று பெரும்பாலான அமர நாயக்கர்கள் வந்து கூடியிருந்தார்கள். அவர்கள் அனைவருமே அச்சுதராயரின் ஆதரவாளர்கள் என்றோ சாளுவ நரசிம்மருக்கு வேண்டியவர்கள் என்றோ கூற முடியாது. அன்றைய சபையில் நமக்கெதிராக ஏதோ ஒரு பலப் பரீட்சை நடக்கப் போகிறது என்ற செய்தி ராமராயருக்கு எட்டியிருந்ததால், அவரும் தமக்கு ஆதரவான அமர நாயக்கர்களை அங்கு அழைத்திருந்தார். என்றாலும் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் ராமராயருக்கு ஆதரவு அதிகமில்லை என்பதை வந்திருந்தவர்களின் எண்ணிக்கை எடுத்துக் கூறியது. வந்திருந்தவர்களில் தளதிகாரியான நாகம நாயக்கர் தாம் எந்தப் பிரிவிலும் சேர்ந்தவர் அல்லர் என்பதை இரு சாராரிடமுமே கூறி விட்டார்.

சபை தொடங்கியது. சக்கரவர்த்தி அச்சுதராயருக்கு அடுத்தாற்போல் அமர்ந்திருந்த ராமராயர் வழக்கம் போலவே சக்கரவர்த்தி

யின் சார்பில் தளநிகாரியான நாகம நாயக்கரிடம் நிதி பற்றி வினு எழுப்பினார்.

''அமர நாயக்கர்களில் இன்னும் அரண்மனைக்கு இறை செலுத்தாதவர்கள் யாரும் இருக்கிறார்களா? அவர்கள் தாமதம் செய்வதற்கான காரணம் என்ன சொல்கிறார்கள்?''

நாகம நாயக்கர் விடை கூறுவதற்கு முன்பாகச் சாளுவ நரசிம்மர் முன்னே வந்து குறுக்கிட்டுப் பேசலானார்.

''இந்த வினாக்களை முன்பெல்லாம் பெரிய சக்கரவர்த்திகள் எழுப்பி, தளநிகாரியிடம் விசாரிப்பது வழக்கம். இப்போதும் இங்கு நம்மையெல்லாம் விசாரிப்பதற்கு உரிமை பெற்ற புதிய சக்கரவர்த்திகள் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்கள். ஆகவே, ராமராயர் அவர்கள் இவ்வாறு அன்றாட அரசியல் அலுவல்களில் குறுக்கிடுவது நியாயமா என்பதை நான் சக்கரவர்த்திகளிடம் பணிவோடு கேட்க விரும்புகிறேன்!''

சாளுவ நரசிம்மர் மிகவும் பணிவோடு பேசுகிறவர் போல்தான் பேசினாரென்றாலும் அவருடைய பேச்சால் சபையே ஒரு கணம் கலகலத்துப் போய்விட்டது. கேட்டுப் பூரிப் படைந்தவர் பலர்; வெறுப்படைந்தனர் கொண்டனர் சிலர்.

ராமராயர் தமது கோபத்தை அடக்க முயன்று கொண்டிருந்தார். அவர் சார்பில் பேச வேண்டிய பொறுப்பு சக்கரவர்த்தி அச்சுதராயருக்கு இருந்ததால், அச்சுதராயரே பேசவேண்டுமென்பதற்காக அவரைத் திரும்பிப் பார்த்தார் ராமராயர். அச்சுதராயருக்குச் சற்று நேரம் ராமராயரைத் தவிக்க விட்டு அவரைக் குற்றவாளிக் கூண்டில் நிற்க விட்டு, வேடிக்கை பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அந்த ஆசையை அவர் தமது நீண்ட மௌனத்தால் தணித்துக் கொண்டார். சபையில் பொறுக்க முடியாத மௌனம் சற்று நேரம் நிலவியது.

அதற்கு மேலும் ராம ராயரால் பேசாதிருக்க முடியவில்லை. ''சக்கரவர்த்திகளின் கருத்து என்னவென்பதை நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டார்.

அச்சுதராயருக்கு உள்ளூற ஆனந்தம் பொங்கியது. என்றாலும் அதை வெளிக் காண்பிக்காமல், ''அமைச்சர் அவர்கள் இப்படி ஒரு விரும்பத் தகாத சிக்கலை இன்று எழுப்பியிருக்க வேண்டாம்; என்றாலும் சிக்கலென்னவோ எழுந்து விட்டது. அதற்கு நாம் விடை காணத்தான் வேண்டும்'' என்றவர் சிறிது யோசித்துவிட்டு, ''ராமராயருடைய விடை என்ன என்பதை முதலில் நாமும் சபையும் தெரிந்து கொண்டால், பிறகு முடிவு கூறலாம்'' என்று முடித்தார்.

ராமராயருக்கு நிலைமை வெளிப்படையாக விளங்கி விட்டது. அச்சுதராயர் சாளுவரின் சூதாட்டக் காயாக முற்றிலும் மாறிவிட்டார் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

''பெரிய சக்கரவர்த்திகளின் பேராற்றலால் இந்த சாம்ராஜ்யம் இவ்வளவு பெரிதாக விரிவடைந்து விட்டது. அவர்களைப் போன்ற ஆற்றல்மிக்க ஒருவர் இப்போது நம்மில் யாரும் இல்லை. இதை அவரும் உணர்ந்திருந்ததால் தான் புதிய சக்கரவர்த்திகளுக்கு உறுதுணையாகவும், பக்க பலமாகவும் இருந்து இந்த ஆட்சியை நடத்தும்படி எனக்குக் கட்டளையிட்டார். சபையோர் அனைவரையும் வைத்துக் கொண்டுதான் ஒற்றுமையோடு நாங்கள் ஆட்சி நடத்த வேண்டிய அவசியத்தை அவர் வற்புறுத்தினார். அதையே தான் நான் செய்து வருகிறேன்!''

''இல்லை! தாங்களே இந்த சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தைக் கைப்பற்றத் திட்டமிடுகிறீர்கள்!'' என்று குறுக்கிட்டார் சாளுவ நரசிம்மர்.

சாளுவ நரசிம்மர் அந்த அளவுக்கு என்றுமே சபையில் துடுக்குத்தனமாக நடந்து கொண்டதில்லை.

ராமராயரின் கண்கள் சிவந்தன. மீசை துடித்தது; அச்சுதராயரே அவர் தோற்றம் கண்டு நடுங்கினார். அவருக்காகப் பரிந்து பேசுபவர் போல், ''அமைச்சர் அவர்களே! நீங்கள் இனியும் குறுக்கிட்டால் கடுமையான தண்டனை அடைய நேரிடும்!'' என்று சாளுவரை அதட்டி அடக்கினார்.

ராமராயருக்குத் தொண்டையை அடைத்தது. என்றாலும் அவர் மிகுந்த வேதனையோடு மேலே பேசினார்:

''இதைக் கேட்ட பிறகும் நான் சபையை விட்டு இன்னும் வெளியேறாமல் இருக்கிறேனென்றால், அதற்குக் காரணம் இருக்கிறது. என்னையும் அவமதிப்பதையும் மட்டும் பொறுத்த விஷயமல்ல இது. நான் வெளியேறினால் இங்கிருக்கும் சபையோராகிய அமரநாயக்கர்கள் இரண்டுபட்டு நிற்பார்கள். இவர்களுக்குள் பிளவு ஏற்பட்டால் இவர்களுடைய லட்சோப லட்சம் போர்வீரர்களும் பிளவுபட்டு நிற்பார்கள். சாம்ராஜ்யத்தை அழிக்க வெளிப் பகை துடித்து நிற்கும் சமயத்தில் நாம் பிரிந்து நின்று போரிட்டுப் பகைவருக்கு வேலை வைக்காமல் நம்மை நாமே அழித்துக் கொள்வோம். சாம்ராஜ்யம் இப்போதே சரிந்து விழவேண்டாம் என்றுதான் நான் பொறுத்திருக்கிறேன். – நான் செய்வதெல்லாம் சாம்ராஜ்யத்தின் நன்மைக்காகத்தான்....'' என்று ராமராயர் கோபத்தோடு கூறினார்.

''அனுபவம் பெற்றவர்களைப் பதவியிலிருந்து நீக்கித் தங்கள் உற்றார் உறவினர்களை அதிகாரிகளாக்குகிறீர்களே, அதுகூட சாம்ராஜ்யத்தின் நன்மைக்குத்தானா?'' என்று பரிகாசத்தோடு கேட்டார் சாலகராஜு.

''ஆமாம்; அனுபவம் பெற்றவர்கள் பெரிய சக்கரவர்த்திகள் உயிரோடிருந்த வரையில் அவர்களுடைய ஆணைகளுக்குக் கட்டுப்பட்டுக் குடிமக்களின் ஊழியர்களாக நடந்து கொண்டார்கள். இப்போதோ தலைக்குத் தலை அதிகாரம் செய்யக் கிளம்பி விட்டார்களே தவிர, ஊழியம் செய்ய வேண்டுமென்பதையே மறந்து விட்டார்கள். குடிமக்களுக்கு ஊழியம் செய்வதை மறந்து, அவர்களைத் தங்களது நலனுக்காகச் சிலர் வாட்டி வருகிறார்கள். அவர்களையே பதவிகளிலிருந்து விலக்கினேன். அமைச்சர் சாளுவ நரசிம்மர்

கூட இந்தப் பதவியில் இனியும் இருப்பது ஆபத்து என்பதே என் கருத்து. அதை உணர்ந்து கொண்டே அவர் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு இப்படி ஒரு சிக்கலை எழுப்பியிருக்கிறார். ஒன்று சக்கரவர்த்திகள் அவரை இப்போதே அவருடைய பொறுப்பிலிருந்து விடுவிக்க வேண்டும். அல்லது எனக்கு விடைகொடுத்து அனுப்ப வேண்டும். நேருக்கு மாறான கருத்துடையவர்கள் சேர்ந்து அன்றாட ஆட்சியை நடத்தினால் அது நிலை குலைந்து போகும்!''

சபை மூச்சுவிட மறந்தது. சாளுவர் திடுக்கிட்டவர் போல் காணப்பட்டாலும் அவர் தொடங்கிய நாடகம், அவர்விரும்பியதுபோலவே நடைபெற்று வந்ததில் உள்ளூற மகிழ்ச்சியடைந்தார். சபை அச்சுதராயரின் முடிவை எதிர்பார்த்திருந்தது.

அச்சுதராயர் 'நீதி' வழங்கலானார்.

''சாளுவ நரசிம்மர் எழுப்பிய குற்றச்சாட்டுகளை அப்படியே நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அதிலும் மிகப் பொறுப்பு வாய்ந்த ராமராயர் அவர்களைக் குறித்துப் பயங்கரமான குற்றச்சாட்டுக்களை அவர் சுமத்தியிருக்கிறார். சபையில் இப்படி ஒரு தவறான எண்ணம் ராமராயர் மீது ஏற்படும்படி செய்ததற்காக அவருக்கு நாம் தண்டனை வழங்கத்தான் வேண்டும். ஆகவே, அவரை நாம் அமைச்சர் பதவியிலிருந்து இப்போதே விலக்குகிறோம்!...''

''என்ன!'' — சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

''பொறுங்கள்! சாளுவர் கூறியவை அனைத்தும் ஆதாரமற்றவை என்று நாம் நினைத்துவிடக் கூடாது. ராமராயர் சாம்ராஜ்யத்தின் நலனுக்காக இனி எமக்கு ஆலோசனை கூறுபவராக மட்டிலும் இருப்பார். முடிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டியது நம்முடைய பொறுப்பாக இருக்கும். இப்படி இருந்தாலே அவரைப் பற்றித் தவறான கருத்துக்கள் இனி ஏற்படாமல் தடுக்க முடியும். ராமராயரின் நற்பெயரைக் காக்கும் பொருட்டே அவரை ஆலோசனை வழங்குபவராக இனி இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சாளுவ நரசிம்மருக்குப் பதிலாக, சாலக ராஜுவை நமது பிரதானியாகவும் அமைச்சராகவும் நியமிக்கிறோம்!''

இரு சாராருக்கும் ஏற்ற நியாயம் வழங்குவது போல் காரணம் காட்டி, சாளுவ நரசிம்மர் நடத்திக் கொடுத்த ஒத்திகைப்படியே நாடகத்தை நடத்திக் காட்டிவிட்டார் அச்சுதராயர். ராமராயருக்கு முகம் வெளுத்தது. ஆனாலும் அதிகாரத்தைப் பறிகொடுத்த அவரால் நேரடியாக அப்போதைக்கு ஏதும் செய்ய இயலவில்லை.

சாளுவ நரசிம்மர் தாம் அரங்கேற்றிய நாடகத்தின் கடைசிக் காட்சியை மிக உருக்கமாக நடித்தார்:

''சக்கரவர்த்திகளே! என்னிலும் சிறந்த ஒருவரைத் தாங்கள் அமைச்சராகத் தேர்ந்தெடுத்ததால் இந்த சாம்ராஜ்யத்தின் நலனுக்காகத் தாங்கள் அளித்த தண்டனையை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகிறேன். ஒரே ஒரு வேண்டுகோள்: இனி என்னால் விஜய நகரத்தில் இருக்க முடியாது. நான் தஞ்சைக்குச் சென்று சோழ நாட்டைக் கவனித்துக் கொள்ள எனக்கு அநுமதி வழங்கவேண்டும்.''

''அப்படியே ஆகட்டும்!'' என்றார் அச்சுதராயர்.

ராமராயருக்கு ஏனோ இது சுருக்கென்று உள்ளத்தில் தைத்தது. முதலையை மீண்டும் தண்ணீருக்குள் தள்ளிவிடுவது போல், சாளுவரைச் சோழ நாட்டுக்கு அனுப்புகிறாரே அச்சுதர்?

(தொடரும்)



முல்லை மலரும்; மணம்வீசும்!
முத்து விளையும்; ஒளிவீசும்!
எல்லை, கிளியே! இளநங்காய்!
இதயம் மலர்ந்தால் என்னுவாய்?

தென்றல் வீசும்; சிலுசிலுக்கும்!
திங்களி கனியச் சுவை கூட்டும்!
அன்னப் பேடே! இளநங்காய்!
அலர்ந்த போது என்னுவாய்?

கோடை, கூதிர், இளவேனில்,
குளிரை விளைக்கும் பருவங்கள்!
ஏடி! பெண்ணே! இளநங்காய்!
என்னே யாவாய் பருவத்தால்?


ஊணுங் கொள்ள மறப்பாயோ?
உறக்கம் உன்னில் நிலைக்காதோ?
காணும் காட்சி புதிதாமோ?
கண்டே கனவில் மிதப்பாயோ?

உள்ளம் ஒருநிலை நிற்காதோ?
உணர்வு தன்வயங் கொள்ளாதோ?
கள்ளம் மனத்தில் தோன்றிடுமோ?
காதலின் ஆட்சி வேண்டிடுமோ!

— இன்பவண்ணன்

இப்பொழுது hgec வழங்கும் இந்த ரேடியோ அபூர்வமான தோனியும், எழிலுமுடையது!





எச்ஜிஇஸி ஸெஞோரா


அகில உலக நிகழ்ச்சிகளையும் தெளிவாக வழங்கும் இதன் விலை ரூ. 300 தான். எக்ஸைஸ் தீர்வை, வரிகள் தனி.

6 வால்வுகள் 9 பணிகளுக்கு. 3 அலைவரிசைகள் மின்விசைச் செலவு 3.2 வாட்டுகள். ஏஸி மற்றும் ஏஸி/டிஸி மெயின்கள். மாஜிக்ஐ, பிளேனில் டியூனிங். வெளிப்புற ஸ்பீக்கர் மற்றும் ரிகார்டு பிளேயர் இணைக்கவும் வசதி உண்டு. உறுதியிருந்த அழகிய வேலைப்பாடுகளை பெட்டி கேபினட்.

எச்ஜிஇஸி ஹெலெனா

ரேடியோ கேட்கும்போது உங்கள் அறையே கச்சேரி அரங்காகி விடுகிறது! விலை ரூ. 350 மற்றும் எக்சைஸ் தீர்வை ஸ்தல வரிகள்.


8 டிரான்ஸிஸ்டர்கள், டயோடுகள், 3 அலைவரிசைகள் விசை; 9 வோல்ட் பாட்டரி எவரெடி டைப் 286. உயர்ந்தபக்ஷ மின்சக்தியளவு 800 மில்லிவாட். கடுந்தூர அலைகளுக்கு உள்ளமைந்த பெர்ரைட் கம்பு சிற்றலைகளுக்கு சொருகவும் நீட்டவும்கூடிய ஏரியல். வெளிப்புற ஸ்பீக்கர் மற்றும் பிக்-அப் இணைப்புகள். பிரேவிக்டியூனிக் தொடர்பான தொனிக் கட்டுப்பாடு நூதன வால்னட் அலங்காரக் கேபினட்.



எச்ஜிஇஸி வாலன்ஸியா

இந்த உண்மையான ஹைஃபிடலிடி ரேடியோவின் விலை ரூ. 375 தவிர எக்சைஸ் தீர்வை மற்றும் வரிகள்!

6 வால்வுகள் 9 பணிகள் புரியும். 4 அலைவரிசைகள். பாஸ், டிரெபிள் முதலிய பலவகை தொனிகளுக்கு மாற்றியமைக்கக்கூடிய தொனிக் கட்டுப்பாடு விசை. சுலபமாக டியுனிங் செய்வதற்கான மாஜிக் ஐ. பிரத்யேக ஸ்பீக்கர், பிக்-அப் இணைப்பு ஏஸி மற்றும் ஏஸி/டிஸி மெயின். பளபளப்பான மரக்கேபினட்.



இன்றைய [HGEC] மேலும்

சிறந்த தொனியும் எழிலும் உடையது!

ஹிந்துஸ்தான் ஜெனரல் எலெக்ட்ரிகல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்.
154/155, பிராட்வே சென்னை-1.

BENSONS2/HGE-86C TAM

வைரங்களின் வரலாறு
1

துரதிருஷ்டம் பிடித்த 'ராகம்'

எந்த வைரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோமோ இல்லையோ, கோஹினூர் வைரத்தைப் பற்றிக் கேள்விப்படாமல் இருந்திருக்க முடியாது. பாண்டவர்கள் காலத்திலிருந்து உபயோகத்திலிருந்து வருவதாகக் கருதப்படும் இவ்வைரம் பழம் பெருமை வாய்ந்தது; ருசிகரமான வரலாற்றைக் கொண்டது.

1304ம் ஆண்டில் அல்லாவுதீன் கில்ஜி மால்வா நாட்டு மன்னனைத் தோல்வி யடையச் செய்தபொழுது, அவனிடமிருந்து கில்ஜி அபகரித்த பொருள்களில் பெரிய வைரமு மொன்று. அது கோஹினூர் வைரந்தான். ஆனால் அதற்கு அப்பொழுது கோஹினூர் என்கிற பெயரில்லை. என்ன பெயர் அப்பொழுது அதற்கு இருந்தது என்பது தெரியவில்லை. அவ்வைரத்தைக் கில்ஜி தன்னிடம் நீண்ட காலம் வைத்துக் கொள்ளவில்லை. அதை அம்மன்னனுக்கே நட்பின் அறிகுறியாகத் திருப்பிக் கொடுத்து விட்டான்.

1526ம் ஆண்டில் பாபர் இந்துக்களுடன் போரிட்டு வெற்றி பெற்றார். வெற்றி பெற்ற மொகலாய சைனியத்தின் ஒரு பகுதி ஹுமாயூன் தலைமையில் மால்வா நாட்டில் நுழைந்தது. ஆனால் கொள்ளையடித்தலோ, சூறையாடுதலோ நிகழவில்லை. அது மாதிரி நிகழாவண்ணம் ஹுமாயூன் கவனித்துக் கொண்டான். அதைக் கண்டு மகிழ்ந்த மால்வா மன்னன் தனது நன்றியின் அறிகுறியாக நவரத்தினங்கள் கொண்ட பேழையொன்றை ஹுமாயூனுக்குப் பரிசளித்தான். அதில் கோஹினூரும் அடங்கியிருந்தது. பாபர் அதைக் கண்ட பொழுது அதிசயித்து விட்டாராம். ''உலகில் ஒரு நாள் செலவாகும் பணத்தின் பாதி மதிப்பு எவ்வளவோ அவ்வளவு மதிப்புள்ளது இவ்வைரம்!'' என்று அவர் கூறினாராம்.

இவ்வைரம், தில்லியை நாதர் ஷா தாக்கும் வரை முகலாயர் வசமிருந்தது. 1793ம் ஆண்டில், டில்லி பாதுஷா முகமத் ஷா வைத் தோல்வியடையச் செய்த நாதர் ஷா, தில்லி அரண்மனையிலிருந்து தான் சூறையாடிய பொருள்களில் கோஹினூர் இருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்தான். கிடைக்கவில்லை. அவ்வைரம் தன்னிடமிருப்பதாகவே முகமத் ஷா காட்டிக் கொள்ளவில்லை. அரண்மனையில் ஓர் அங்குலம் இல்லாமல் தேடிப் பார்த்தும் நாதர்ஷாவுக்கு அவ் வைரம் கிடைத்தபாடில்லை! இந்நிலை வெகு நாட்கள் நீடிக்கவில்லை. அந்தப்புர மாதொருத்தி அது இருக்குமிடத்தை நாதர்ஷாவுக்குக் காட்டிக் கொடுத்து விட்டாள். முகமத் ஷா அதைத் தனது தலைப்பாகைக்குள் மறைத்து வைத்துக் கொண்டிருந்தான்!

நாதர் ஷா ஒரு வேடிக்கையான நாடகம் நடத்தினான். தான் தோல்வியடையச் செய்த முகமத் ஷாவைத் தானே மறுபடியும் தில்லி சிம்மாசனத்தில் அமர்த்தப் போவதாகத்




வைரம்

தெரிவித்தான். மகுடம் சூட்டு விழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. விழா நடந்து கொண்டிருக்கும் பொழுது, தங்களுடைய நட்பை வெளிப்படுத்தத் தானும் முகமத் ஷாவும் தலைப்பாகைகளை மாற்றிக் கொள்ளப் போவதாக அறிவித்தான். அதைக் கேட்டதும் முகமத் ஷா திடுக்கிடுவான் என்று நாதர் ஷா எதிர்பார்த்தான். அதுதான் இல்லை! தலைப்பாகைகளை மாற்றிக் கொள்ள அவன் புன்சிரிப்புடனே ஒப்புக் கொண்டான்! நாதர் ஷாவுக்கு ஒன்றும் புரியவில்லை. தான் பெற்றுக் கொண்ட முகமத் ஷாவின் தலைப்பாகைக்குள் வைரம் இருக்குமா இருக்காதா? உடனே ஓடிப் போய்த் தனிமையில் தலைப்பாகையைப் பிரித்துப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! ஒளி மயமான பெரும் வைரமொன்று வெளிப்பட்டது. அதைக் கண்டு ஆனந்தமும் ஆச்சரியமும் கொண்ட நாதர் ஷா கோஹினூர் (ஒளி மலை) என்று கத்தினானாம். இப்பொழுது புரிகிறதல்லவா அவ்வைரத்துக்கு எப்படி அந்தப் பெயர் வந்ததென்பது?

நாதர் ஷா தனது நாட்டுக்குத் திரும்பிய பொழுது அவனுடன் கோஹினூரும் சென்றது. அவனுக்கு அதன் மீது அலாதிப் பிரியம். அவன் சீக்கிரமே இறக்க நேரிட்டது.

அவனுடைய மகன் ஷா ரோக் அதைத் தன் கைவசப்படுத்திக் கொண்டான். வைரம் வந்த ராசியோ என்னவோ ஷா ரோக்குக்குக் கெட்ட காலம் தொடங்கியது. அவன் ஆகா முகமத் என்பவனால் தோல்வியடைந்து கைது செய்யப்பட்டான். கோஹினூரைத் தன்னிடம் கொடுக்கவில்லை என்பதற்காக ஷா ரோக்கின் கண்களை ஆகா முகமத் சுட்டெரித்தான்! கோஹினூரை இழப்பதைக் காட்டிலும் தனது கண்களை இழக்க ஷா ரோக் தயாராக இருந்தான் போலும். அது மட்டுமல்ல, அவனுடைய மண்டை க்ஷவரம் செய்யப்பட்டுக் கொதிக்கும் எண்ணெய் அந்த மொட்டை மண்டையில் ஊற்றப்பட்ட பொழுதுகூட வைரம் இருக்குமிடத்தை அவன் காட்டிக் கொடுக்கவில்லை! அவன் துடிதுடித்து இறந்தான்! ஆனால் இறப்பதற்கு முன்பு தான் ஒளித்து வைத்திருந்த கோஹினூரை எப்படியோ ஆப்கானிஸ்தானின் அரசன் அஹமத் ஷாவுக்கு அனுப்பி வைத்துவிட்டான்! அஹமத் ஷா அதைத் தனது மகன் தைமூருக்குப் பரிசளித்தான். தைமூருக்கும் அதை அநுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. அவன் சீக்கிரமே கண்ணை மூடினான். அடுத்ததாக அது தைமூரின் மகன் ஷா சம்மனின் கைவசமாயிற்று. அவனுக்குப் பிடித்தது சனியன்! அவனுடைய தம்பி ஷா ஷுஜா அவனைச் சிம்மாசனத்திலிருந்து விரட்டியடித்தான். அதோடு விட்டிருந்தால் தேவலை. தன்னிடமிருந்து கோஹினூரை மறைத்தான் என்பதற்காகத் தனது அண்ணனின் கண்களை அவன் பிடுங்கி எறிந்தான்! மலையைத் தோண்டி எலியைப் பிடிப்பதுபோல், அரண்மனை முழுவதும் குத்திக் கிளறிய ஷா ஷுஜாவின் ஆட்கள், ஷா சம்மனிருந்த சிறைச்சாலையின் மதிலொன்றில் கோஹினூர் மறைத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்தார்கள்! ஒரு வழியாக ஷா ஷுஜா கோஹினூர் கிடைக்கப் பெற்றவனாக





"என்ன சார் சொல்றீங்க? இன்னிக்கு மழை பிச்சு எடுத்துடுந்தோல்லியோ?...."

"யாருக்குத் தெரியும்? நாளைக்கும் பேப்பரிலே பார்த்தாத்தான் தெரியும்!"

ஆனந்தமடைந்தான். ஆனால் எவ்வளவு நாட்களுக்கு அது நீடிக்க முடியும்? இவனுடைய தம்பி இவனைத் தோல்வியடையச் செய்து இவனுடைய கண்களைப் பிடுங்கி எறிந்தான்! கபோதியாகிவிட்ட ஷா ஷுஜா எப்படியோ தப்பியோடினான். அந்நிலையிலும் அவன் கோஹினூரை மறக்கவில்லை. தன்னுடனே எடுத்துச் சென்றான்!

பஞ்சாப் சிங்கம் ரஞ்சித் சிங்கிடம் அடைக்கலம் புகுந்த ஷா ஷுஜா தன்னிடம் கோஹினூர் இருப்பதைக் காட்டிக் கொள்ளவில்லை. கெட்டிக்காரனான ரஞ்சித் சிங்குக்கு அது எப்படியோ தெரிய வந்து விட்டது. தன்னிடம் அதைக் கொடுக்காமலா போய் விடப் போகிறான் என்று நினைத்துக்கொண்டு அவனுக்கு ராஜ உபசாரம் செய்தான் ரஞ்சித் சிங். நாட்கள் கடந்தனவே தவிர்த்துக் கோஹினூர் வெளிவந்தபாடில்லை. அது எங்கே ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் ரஞ்சித் சிங்கால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவனுக்குக் கோபம் வந்து விட்டது. ஷா ஷுஜாவையும் அவனது குடும்பத்தினரையும் சிறையில் அடைத்தான். அவர்களுக்கு ஆகாரம் கொடுக்காமல் வதைத்தான். நீர் கூடக் கிடையாது என்று மிரட்டினான். ஊஹூம்; வைரம் வெளிவந்தபாடில்லை! அம்முறையில் வைரத்தைப் பெற முடியாது என்று தெரிந்து கொண்ட ரஞ்சித் சிங் மறுபடியும் ஷா ஷுஜாவைத் தட்டிக் கொடுக்க ஆரம்பித்தான். மறுபடியும் ராஜ உபசாரம் நடந்தது. தங்கள் குடும்பத்துக்குத் தகுந்த அளவு பென்ஷன் கொடுக்கச் சம்மதித்தால் கோஹினூரைக் கொடுப்பதாக ஷா ஷுஜாவின் மனைவி ஒப்புக் கொண்டாள். அதற்கு ரஞ்சித் சிங் உடன்படவே 1813ம் ஆண்டில், அவன் கரத்துக்குக் கோஹினூர் கிட்டியது. வெகுநாட்களுக்குப் பிறகு அது மறுபடியும் இந்திய மண்ணுக்குச் சொந்தமாயிற்று!

1839ம் ஆண்டில் ரஞ்சித் சிங் இறந்தான். அவனுடைய மகன் ராஜா துலிப் சிங் பட்டமேறினான். இவனுக்கு உதவி செய்ய 1849ம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் படையொன்று லாகூருக்கு வந்தது. அப்படையினரால் லாகூர் பொக்கிஷ சாலை கைப்பற்றப்பட்டது. அதிலிருந்து கோஹினூர் அவர்கள் கைவசமாயிற்று!

கோஹினூரைக் கைப்பற்றிக் கொண்ட கிழக்கிந்தியக் கம்பெனி அதை மிகவும் தாராளமாக 1850ம் ஆண்டில் விக்டோரியா மகாராணிக்குப் பரிசளித்து வைத்தது!

தான் சென்ற இடங்களுக்கெல்லாம் தன்னுடனே துர்ப்பாக்கியத்தையும் அவ்வைரம் கொண்டு சென்றிருக்கிறது என்பதை உணர்ந்த விக்டோரியா மகாராணி என்ன செய்வது என்று யோசித்தாள். அது வந்த அதிர்ஷ்டம், அப்பொழுதுதான் பிரிட்டனுக்குக் கிடைத்த அரிய சொத்தாகிய இந்தியா எங்கே பறி போய்விடுமோ என்று அவள் பயந்தாள்!

வைரத்தை விடவும் மனமில்லை; இந்தியாவை இழக்கவும் விருப்பமில்லை. என்ன செய்வது? ஆண்கள் அதை அணிந்தால்தான் அவர்களுக்குத் துர்ப்பாக்கியம் கிட்டும் என்றும், பெண்களை அவ்வைரத்தின் துர்ப்பாக்கியம் தீண்டாதென்றும் அவளுக்கு எப்படியோ ஓர் எண்ணம் தோன்றியது. கோஹினூர் வைரம் பிரிட்டிஷ் ராணியின் சொந்தப் பொருளாகக் கருதப்பட வேண்டுமென்று அவள் பிரகடனம் செய்தாள்.

கோஹினூர் விக்டோரியா ராணியிடம் சென்ற பொழுது முட்டை வடிவத்துடன், ஹார்டென்சியா போர்ஜியா என்னும் இத்தாலிய பட்டை தீட்டுபவன் பதினேழாவது நூற்றாண்டில் தீட்டிய பட்டையுடன் விளங்கியது. அந்நிலையில் அது அவ்வளவு ஜொலிப்பு நிறைந்ததாக விளங்கவில்லை. அதன் ஜொலிப்பை மிகைப்படுத்த வேண்டுமானால், 185 கேரட் எடையுடன் விளங்கிய அது வெட்டப்பட்டுப் புது வகையில் பட்டை தீட்டப்பட வேண்டும் என்று நிபுணர்கள் விக்டோரியா மகாராணிக்கு ஆலோசனை கூறினார்கள். உடனே அவள் தனது கணவனை அது பற்றி ஆலோசனை கேட்டாள். வைரங்களைப் பற்றி நன்கு அறிந்திருந்த அவர், 58 முகங்கள் கொண்ட வைரமாக அதை மாற்றி அமைத்துப் பட்டை தீட்ட வேண்டும் என்று ஆலோசனை கூறினார். ஹாலந்தைச் சேர்ந்த வூர்ஸ் ஏன்ஜர் என்னும் பட்டை தீட்டும் நிபுணரால் கோஹினூர் வெட்டிப் பட்டை தீட்டப்பட்டது. அதன் காரணமாக அது தன் எடையில் 77 கேரட்டுகளை இழந்தது. ஆனால் அதன் ஜொலிப்பு பன்மடங்கு பெருகியது. புதுப்பிக்கப்பட்ட கோஹினூர் வைரம் ராணியின் மகுடத்தில் பதிக்கப்பட்டது. இன்றும் அது அங்குதான் இருக்கின்றது.

கோஹினூர் வைரத்தைத் திருப்பிப் பெற இந்திய அரசாங்கம் முயலுவதாகச் சில நாட்களுக்கு முன்பு செய்தியொன்று வந்தது: எவ்வளவு தூரம் இந்திய அரசாங்கம் இதில் வெற்றிபெற முடியும் என்பது தெரியவில்லை.



சென்னை விநியோகஸ்தர்கள் :

மெஸர்ஸ் W. A. பியர்ட்ஸல் & கோ. பிரைவேட் லிமிடெட்

8. செகண்ட் லைன் பீச், த. பெ. நெ. 7, சென்னை-1 (போன் : 29126)




‘டொக், டொக், டொக்!’ —இந்த ஒலியுடன் ஒரு நீண்ட விசில் சத்தம்.

இரவு மணி ஒன்று? கடிகாரத்தைப் பார்க்க வேண்டியதில்லை. அதோ, ராம்பகதூர்சிங் வருகிருன். அந்தத் தெரு முனையில் அவனுடைய கனத்த பூட்சுகளின் காலடி ஓசை கேட்டாலுமே மணி ஒன்று என்று நிர்மாணித்துக் கொள்ளலாம். அவ்வோசையைத் தொடர்ந்து அவன் கையிலிருக்கும் குறுந்தடியால் தரையைத் தட்டும் ‘டொக், டொக்’ ஒலியும், நீண்ட விசில் சத்தமும் சேர்ந்து அதை உறுதிப்படுத்தி விடும்.

கடிகாரம் என்ன, கடிகாரம்! சாவி கொடுத்தால்தான் அது சரியாக மணி காட்டும். சாவி கொடுத்துச் சரியான நிலையில் வைக்கப்படும் உயர்தரக் கடிகாரங்கள்கூடச் சில சமயம் குளிர் பிடித்துக் கொண்டு காலத்தைக் கோட்டை விடுவதும் உண்டு. ஆனால், ராம்பகதூர் சிங்? காலத்தின் எந்த ருதுக்களாலும் பாதிக்கப்பட முடியாத மகா யந்திரம் அவன்!

இரண்டு பெரிய சாலைகள், ஐந்தாறு தெருக்கள், ஏழெட்டுச் சந்துகள் கொண்ட அந்த வட்டாரம் அவனுடைய கண்காணிப்புக்கு உட்பட்டது. அதிகாரபூர்வமல்லாமல் தன்னைத் தானே இராக் காவல்காரனாக நியமனம் செய்து கொண்ட அவன், அவ்வேலையைத் தினமும் இரவு பதினொரு மணிக்குத் தொடங்கி விடியற்காலை நாலு மணியோடு முடித்துக் கொள்வான். கடுமையான சட்ட திட்டங்களுடன் இயங்கும் அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்கள்கூட ஐந்து பத்து நிமிடங்கள் தாமதமாகப் போவதைப் பார்க்கலாம்; ஆனால் இந்தக் கூர்க்கா ராம்சிங் தன் வேலையைத் தொடங்குவதில் ஒரு விநாடி நேரத்தையும் முன்பின்னாக்கி விடத் தன்னை அனுமதிக்க மாட்டான். அவனுக்கு அவன்தான் எஜமானன். அந்த ‘எஜமானனை’ப் போல் அத்தனை கண்டிப்பான, கடின சித்தம் கொண்ட ஒருவனை எங்கு தேடினாலும் காண முடியாது. ‘அவன்’ இவனை அவ்வளவு கறாராக வேலை வாங்குவான். மளிகைக் கடையில் பொட்டலம் மடிக்கும் பையனுக்குக்கூட ‘ஷாப் ஆக்ட்’டின் படி ஒரு நாள் லீவு கொடுத்தாக வேண்டும். ஆனால் இந்த ‘எஜமான’னிடம் இவன் லீவு என்ற பேச்சே பேசக் கூடாது. எப்போதாவது சில சமயம் ‘பிரஞ்சு லீவ்’ போட்டு விடலாமா என்று அவனுக்குத் தோன்றும். அப்படி எண்ணியதுமே அந்த ‘எஜமானன்’ விசுவரூபமெடுத்து, ‘ஆமாம்; இன்றைக்கு ஒரு நாள் நீ லீவு போட்டு விட்டால் உன்னை யாரும் ஏன் என்று கேட்கப் போவதில்லை. ஆனால் மாதம் பிறந்து ஒன்றிரண்டு தேதியானதும் ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் போய் நிற்பாயே, அப்போது உன்னால் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து மிடுக்குடன் சல்யூட் அடிக்க முடியுமா? ஏதோ யாசகம் கேட்பவனைப் போலல்லவா அங்கு நிற்க வேண்டியதாகி விடும்? அவ்வாறு நிற்பது உனக்கு அவமானமாக, வெட்கமாக, கடமையில் தவறிய





அவன் வருவான்!

ஜெகசிற்பியன்

குற்றமாக இராதா?' என்றெல்லாம் எச்சரிக்க ஆரம்பித்து விடுவான். உடனே, குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு நிமிடமும் தாமதம் செய்யாமல், குறுந்தடி, டார்ச் லைட், ஊது குழல் சகிதம் இராக் காவல் உலா வரப் புறப்பட்டு விடுவான் ராம்சிங்.

தனக்குத் தன்னையே எஜமானனுக்குக் கொள்வதில்தான் எவ்வளவு சுகங்கள், சுதந்திரங்கள் பறி போய் விடுகின்றன.

அந்தத் தெருவின் இடது புற வரிசையில் ஏழாவது வீடாக ஒரு மாடி வீடு. சாம்பல் நிற டிஸ்டம்பர் அடிக்கப்பெற்ற அவ்வீடு ரொம்பப் பெரிசுமில்லை; சிறிசுமில்லை. வீட்டெதிரே சிறிய அளவில் அழகிய பூந்தோட்டம். வலது பக்கவாட்டில் – மதில் சுவரை ஒட்டினாற்போல் – கார் ஷெட். டாக்டர் வாசுதேவன் வீடு அது.

அவருக்கு வயசு நாற்பத்தைந்து இருக்கும். மனைவியும், ஒரே ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். அந்தப்பெண் இப்போது மருத்துவக் கல்லூரியில் படிக்கிறாள் ; இரண்டாவது வருடம்.

வாசுதேவன் தம் வீட்டிலேயே சிறிய டிஸ்பென்சரி ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிறார். காலை ஒன்பது முதல் பத்துமணி வரையிலும், மாலை நான்கு முதல் ஐந்து மணி வரையிலும் மட்டுமே அது திறந்திருக்கும். சஸ்திர சிகிச்சையில் வல்லவர். கைராசியும் உண்டு. ஆனால் குடத்திலிட்ட விளக்காக இருப்பவர். அவருடைய போக்கு அப்படி. நகரில் உள்ள பெரிய மருத்துவ மனையொன்றில் கௌரவ சர்ஜனாகவும் இருக்கிறார். அவரது திறமையை அந்த மருத்துவ மனை நன்கு பயன்படுத்தி வந்தது.

அவருக்கு இன்றிரவு எட்டு மணி முதல் பன்னிரண்டரை மணி வரையில் 'டியூட்டி'. இன்னும் வீட்டுக்கு வரவில்லை; வருகிற நேரம்தான். அவர் வரும் வரையில் தூங்காமல் விழித்திருப்பது அவருடைய சகதர்மிணி விசாலாட்சியின் வெகு காலப் பழக்கம். இன்றும் அப்படித்தான் கூடத்து அறையிலே சும்மா படுத்துக் கொண்டிருக்கிறாள். மகள் காயத்ரி மாடியில் படித்துக் கொண்டிருக்கிறாள்.

'டொக், டொக், டொக்!'

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் விசாலாட்சி. சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஒன்று ஆகி ஐந்து நிமிடம். நெற்றித் திலகம் கலைந்து விடாமல் மிகவும் ஜாக்கிரதையாக முகத்தைத் துடைத்துக் கொண்ட அவள் விரைந்து போய் வாசத் கதவைத் திறப்பதற்கும், டாக்டரின் கார் வாசலில் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. இன்று மட்டும் நடக்கும் அதிசயமல்ல இது: டாக்டர் இரவு 'டியூட்டி'க்குப் போகும் ஒவ்வொரு தினமும் தவறாமல் நடப்பதுதான். வாசுதேவன் காரை ஷெட்டில் விட்டுப்



பூட்டிக் கொண்டு ஒரு கையில் ஸ்டெதாஸ் கோப்பும், மறு கையில் கார் சாவியுமாக வீட்டுக்குள் வந்து மாடிப்படிகளில் ஏறினார்.

''உங்களையும் அந்தக் கூர்க்காவையும் ஒரே வீட்டில்தான் வைக்க வேண்டும்! ரெண்டு பேருமே கடிகார முள்ளிலிருந்து ஒரு நிமிஷம்கூட அப்படி இப்படித் தவறுகிற தில்லே... !''

களைத்துப் போயிருந்த டாக்டர் மெல்லப் பின்னும் திரும்பி, வாசல் கதவைச் சாத்திக் கொண்டிருந்த தம் மனைவியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்துவிட்டு மௌனமாக மேலே ஏறிச் சென்றார்.

''டொக், டொக், டொக்!''

கூர்க்கா ராம்சிங் டாக்டர் வீட்டின் இரும்பு 'கேட்'டைத் தட்டினான். பிறகு மதில் சுவரைத் தட்டிக் கொண்டே நீண்ட ஓசையாக ஊதுகுழலை ஊதினான். கையிலிருந்த டார்ச் லைட்டின் ஒளி, கார் ஷெட் பக்கமும் தோட்டத்துப் பக்கமும் ஊடுருவிப் பாய்ந்து பின் அணைந்தது. மீண்டும் குறுந்தடியால் தரையைத் தட்டிக் கொண்டே மேலே நடக்கலானான். விளக்கு எரிந்து கொண்டிருக்கும் வீடுகளில் அவன் கொஞ்சம் அதிகமாகவே விசில் ஊதித் தரையைத் தட்டி ஜபர்தஸ்து செய்வது வழக்கம். ஏனென்றால், தான் தினமும் தவறாமல் ரோந்து காவல் வருவதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக!

டாக்டரின் வீட்டுக்கு அடுத்தது ஒரு பங்களா. விற்பனை வரி அதிகாரி ஒருவர் அதில் வாசம் செய்கிறார். மிகவும் தடபுடலான வாழ்க்கை. இரண்டு கார்கள், பெரிய தோட்டம், டென்னிஸ் கோர்ட் எல்லாம் உண்டு. மனைவி, மக்கள், உறவினர்கள் என்று ஒரு பெரிய பட்டாளமே அங்கு இருக்கிறது. பற்றாக்குறைக்கு மூன்று வேலைக்காரர்கள், ஒரு தோட்டக்காரன். இவர்களும் போதாதென்று ஒரு நாய் வேறு. 'லாபரடார்' இனத்தைச் சேர்ந்த நல்ல ஜாதி நாய். பௌருஷம் சிதைக்கப்படாத ஆண் நாய் அது. பங்களாவில் செல்லமாக வளருவதால் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. மாசம் எழுபது எண்பது ரூபாய்க்கு மேல் அதற்குச் செலவு. இரவு நேரத்தில் மட்டுமே அது அவிழ்த்து விடப்படும். அப்படி அவிழ்த்து விட்டாலும் பங்களாவைச் சுற்றி வராது. போர்ட்டிகோவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பெரிய காரின் 'பானட்' மேல் ஏறிச் சுகமாகப் படுத்துக் கொள்ளும்.

கூர்க்கா ராம்சிங் அந்தப் பங்களாவின் 'கேட்'டையோ, மதில் சுவரையோ தட்டாமல் வெறும் தரையை மட்டும் தட்டிக் கொண்டு நடந்தான். காரணம், அங்கே அவனுடைய சேவை ஏற்கப்படவில்லை. ஆரம்பத்தில் இரண்டொரு மாதங்கள் மற்ற வீடுகளைப் போல் அந்தப் பங்களாவையும் கண்காணிப்புச் செய்து கொண்டுதான் வந்தான். மாதம் பிறந்து முதல் வாரத்தில் தன் 'கௌரவ சம்பளத்'துக்காகப் போய் நின்ற போது, 'உண்டு, இல்லை' என்று பதில் சொல்லக்கூட யாரும் வெளியே வரவில்லை. நின்று நின்று



பார்த்து விட்டுப் போய் விட்டான். அடுத்த நாள் வந்த போது வாசலில் ஒதுங்கி நின்றிருந்த ஒருவன், ''போய்யா, போ! நீ வேறே வந்துட்டே! நாங்கதான் இங்கே ராவும் பகலுமா காவல் காத்துக் கிட்டுக் கெடக்கிறோமே, தெரியலே?'' என்றான் எரிச்சலுடன்.

அவன் சர்க்காரிடம் சம்பளம் வாங்குகிற பியூன். அன்று முதல் ராம்சிங்கின் கணக்கிலிருந்து அந்தப் பங்களா கழிந்தது. ஆனாலும் தினமும் அவ்வழியாகப் போகும் போது தரையை மட்டும் தட்ட மறப்பதில்லை. 'கேட்'டையும் மதில்சுவரையும்கூடத் தட்டி, விசில் ஊதிவிட்டுப் போக அவனுக்கு விருப்பம் தான்; ஆனால் அந்தப் பங்களா தோட்டக்காரன் ஒரு நாள் அவனைக் கூப்பிட்டு, — ''இங்கே வரும்போது விசில் ஊதாதே! ஆபீஸர் தூக்கம் கெட்டுப் போகிறதாம்; கோபித்துக் கொள்கிறார்!'' என்று எச்சரித்திருந்தான். இது தவிர, அந்த நாய் இருக்கிறதே, அது ரொம்பவும் பொல்லாதது; அவனைக் கண்டாலே அதற்கு ஏனோ ஆவதில்லை. அவனது குறுந்தடி சத்தம் கேட்ட மாத்திரத்தில் அது 'உர்ர்'ரென்று உறும ஆரம்பித்து விடும்.

''டொக், டொக், டொக்!''

படியேறி மாடி வராந்தாவுக்கு வந்த டாக்டர் வாசுதேவன் சற்றே நின்று தெருப் பக்கமாகத் தம் பார்வையைச் செலுத்தினார். அங்கே, தெரு விளக்கின் மங்கலான வெளிச்சத்தில், கூர்க்கா ராம்சிங் கம்பீரமாக இராணுவ வீரனைப் போல் நடந்து செல்வது தெரிந்தது.

குள்ளமான — ஆனால் திடகாத்திரம் வாய்ந்த — உருவம். வயசு இருபத்தேழு அல்லது இருபத்தெட்டுதான் இருக்கும். காக்கிச் சட்டை, காக்கி அரைக்கால் சராய், காக்கி நிற மேஜோடு, கனத்த பூட்ஸ், இடுப்பில் பளபளப்பான பெல்ட், அதிலே உறைவிட்டுத் தொங்கிய குறுவாள். தலையில் கூர்க்கா தொப்பி. ஒரு கையில் குறுந்தடி; மறு கையில் டார்ச் லைட். அவன் பீடி குடிக்கும் பழக்கம் உள்ளவன்; ஆனால் ரோந்து சுற்றும் போது அதைத் தொடுவதில்லை. அதிலேகூட அவனுக்கு அவனே செய்து கொண்ட ஒரு கட்டுப்பாடு.

ஏதோ சிந்தனையில் நின்ற டாக்டர் மெல்லப் பெருமூச்சு விட்டவாறு தம் அறைக்குச் சென்று உடைகளைக் களைந்து விட்டுப் பனியனும் வேஷ்டியுமாக வந்து சாய்வுநாற்காலியில் சாய்ந்தார். இனி அவர், அன்று தபாலில் வந்த வைத்திய சம்பந்தமான சஞ்சிகைகளைப் பார்த்து விட்டுப் படுக்கைக்குப் போக மணி இரண்டாகிவிடும்.

இரண்டு மலை வாழைப் பழங்களும், தம்ளரில் பாலும் எடுத்துக் கொண்டு மாடிக்கு வந்தாள் விசாலாட்சி. இவை தாம் டாக்டரின் இரவு உணவு.

வாசுதேவன் பழங்களை உரித்து வாயில் போட்டுக் கொண்டு பால் தம்ளரை எடுத்த போது பக்கத்து அறையிலிருந்து 'களுக்' என்ற சிரிப்பொலி கேட்டு வியப்புடன் திரும்பிப் பார்த்தார்.

இவ்வளவு நேரம் அந்த அறையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்த அவருடைய மகள் காயத்ரி சிரிப்பை அடக்க மாட்டாமல் மீண்டும் சிரித்துக் கொண்டே எழுந்து தன் பெற்றோர் இருந்த அறைக்கு வந்தாள்.

மருத்துவக் கல்வி நூலில் சிரிப்பதற்குரிய ஹாஸ்ய விஷயம் எதுவும் இருக்காதே என்று எண்ணியவர்போல் மகளை ஏறிட்டு நோக்கினார் டாக்டர். விசாலாட்சியும் ஒன்றும் புரியாமல் தன் பெண்ணைப் பார்த்தாள்.

"இல்லே, அப்பா! இந்தக் கூர்க்காவை நினைத்துக் கொண்டேன்; சிரிப்பு வந்து விட்டது" என்றவாறு வந்த காயத்ரி ஒரு மோடாவை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டாள். "பாருங்களேன்! அவன் விசில் ஊதுவதும், விளக்கு அடித்துப் பார்ப்பதும், தரையை, 'கேட்'டை, மதில் சுவரைத் தட்டுவதும் — திருடனைப் பிடிக்கிற லட்சணமா இது?"

"ஓ.... விஷயம் அதுவா.....? உன் அம்மா முன்பு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்ததைத்தான் இப்போது நீயும் சொல்கிறாய்!" என்று சிரித்த டாக்டர் சாய்வு நாற்காலியில் வசதியாகச் சாய்ந்தார். "ஆமாம்; அவன் திருடனைப் பிடிக்க வருகிறான் என்று உனக்கு யார் சொன்னது?"

"வேறெதற்காம்?" என்று கேட்டாள் காயத்ரி கேலியாக.

"திருடர்களை உஷார்ப்படுத்தி விரட்ட!"

"அதைத்தான் நானும் சொல்கிறேன். 'ஏ, திருடர்களே! நான் வரும்போது திருடாதீர்கள்; அப்படியே திருட வந்திருந்தாலும் என் சத்தத்தைக் கேட்டு எங்காவது பதுங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்லாமல் சொல்லத்தான் அவன் தரையையும் சுவரையும் தட்டி, விசில் ஊதி ஆர்ப்பாட்டம் பண்ணுகிறான்; இல்லையா, அப்பா?"— காயத்ரிக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

"அப்படி அல்ல, காயத்ரி!" என்று நிமிர்ந்து உட்கார்ந்தார் டாக்டர். "நீ மனோதத்துவம் படித்தவள். என்னதான் நெஞ்சுரம் வாய்ந்த பக்காத் திருடர்களாக இருந்தாலும் காரியத்தில் ஈடுபடும்போது அவர்களுக்கும் உள்ளூற ஒரு பயம் இருக்கத்தான் செய்யும். 'டொக்' என்ற சிறு சப்தம் கூட அவர்களை வெகுவாக உலுக்கிக் குலுக்கி விடும். இந்த அடிப்படை விஷயத்தை மனத்தில் வைத்துக் கொண்டு அந்தக் கூர்க்காவின் செயலைச் சிந்தித்துப் பார்."


"போங்களப்பா! இந்தக் காலத்துத் திருடர்கள் வானமே இடிந்து விழுந்தாலும் முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டார்கள்!"


"அப்படித்தான் இருக்கட்டுமே? 'அவனுடைய செய்கை திருடர்களை உஷார்ப்படுத்திவிடும்; அதனால் அது பயனில்லை' என்று ஏன் நாம் நினைக்க வேண்டும்? நம்மையே அவன் உஷார்ப்படுத்துவதாக எண்ணிக் கொள்வோமே! 'ஊர் கெட்டுக் கிடக்கிறது; இரவில் ஒரேயடியாய்த் தூங்கித் தொலையாதீர்கள்; அவ்வப்போது கொஞ்சம் கண் விழியுங்கள்' என்று நமக்குத் தினமும் நினைவூட்டுவதற்காகவும் அப்படிச் செய்யலாம். அதுவே பெரிய பயனுள்ள காரியம் அல்லவா?

"ஹே!...அப்பா சூயுக்தி வாதம் செய்ய ஆரம்பிச்சட்டார்!" என்று கை கொட்டி நகைத்தாள் காயத்ரி. "குடுகுடுப்பைக்காரர்கள் எதையாவது சொல்லிப் பயமுறுத்திக் காசு பறித்துக் கொண்டு போகிறார்களே, அப்படித்தான் இரவு ரோந்துக்கு வருகிற இந்தக் கூர்க்கா விஷயமும். காவல் காக்கிறதாகப் பேர் பண்ணிவிட்டு மாசா மாசம் காசு வாங்கிக் கொண்டு போகிறான். நகரில் நடக்கும் எத்தனையோ விதமான நாகரிக ஏமாற்றுக்களில் இதுவும் ஒன்று. தங்கள் வீட்டுக்கும் கூர்க்கா காவல் இருக்கிறான் என்ற ஒரு போலிப் பெருமைக்காகவோ என்னவோ ஜனங்களும் அவனுக்குப் பணம் கொடுக்கிறார்கள். இதுதான் உண்மை."

டாக்டர் மெல்லச் சிரித்துக் கொண்டார். "இங்கே பார், காயத்ரி! நீ சொல்லுகிறதெல்லாம் சரியாகவே இருக்கலாம். அந்தக் கூர்க்கா பயனற்ற ஒரு காரியத்தைச் செய்து பணம் பெற்றுக் கொண்டு போகிறான் என்பதும் சரிதான். ஆனால் அதிலே மதிப்புக்குரிய உண்மை ஒன்று புதைந்திருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது எத்தனையோ நூறு மைல்களுக்கு அப்பாலிருந்து பிழைப்புத் தேடி இங்கு வருகின்றனர். அப்படி வந்த பின் வேலை கிடைக்கவில்லையே என்பதற்காக ஒரு கூர்க்கா எங்காவது பிச்சைக்கு நிற்கிறானா? நீ பார்த்திருக்கிறாயா? தம் வறுமை நிலையை அவர்கள் வாயால் மட்டுமல்ல, நடை உடை பாவனைகளாலும்கூட வெளிக் காட்டுவதில்லை. அத்தனை தன்மான நெஞ்சம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் அவர்கள். அதனால்தான் நிலையான வேலை ஒன்று கிடைக்கும்வரையில் தமக்குத் தெரிந்த ஒரு காரியத்தைத் தாமே வலிந்து செய்கிறார்கள். அது மற்றவர்களுக்குப் பயனாகிறதோ, இல்லையோ; ஆனால் அது ஒரு காரியம் என்ற வகையிலாவது அதனை ஏற்கத்தானே வேண்டும்? அதற்காக அவர்கள் இரவில் பல மணி நேரம் கண் விழிக்கிறார்களே! கால் கடுக்க நடக்கிறார்களே! அவற்றைச் சொல்லிக் கூலி கேட்பதில் என்ன தவறு? இது ஏமாற்று ஆகுமா? தம் வயிற்றுப்பாட்டை எவ்வளவு கௌரவமாக அவர்கள் தீர்க்கநினைக்கிறார்கள்! இந்தக் கண்ணியமான நினைப்புக்கேனும் நாம் மதிப்புத் தர வேண்டாமா?"

வாயடைத்துப் போன நிலையில் தன் தந்தையையே பார்த்துக் கொண்டிருந்தாள் காயத்ரி. புன்னகையுடன் தலையாட்டிக் கொண்ட டாக்டர் மேலும் சொன்னார்: "சரி; இன்னொரு விஷயத்தையும் கேள், காயத்ரி! நம்மவர்கள் பர்மாவுக்கோ, மலாயாவுக்கோ, இலங்கைக்கோ (இப்போது அல்ல) போய்ச் சில குறிப்பிட்ட தொழில்களையே மேற்கொண்டு அவற்றில் ஒரு 'ரெக்கார்டை'யும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் அல்லவா? பர்மாவில் தேக்கு மர வியாபாரம் வட்டிக்





கடை; மலேயாவில் ரப்பர்த் தோட்ட வேலை; வட்டிக்கடை, க்ஷவரக் கடை; இலங்கையில் தேயிலைத் தோட்டவேலை. இப்படி இங்கேயும் அண்டை நாட்டவர்கள் வந்து குறிப்பிட்ட சில தொழில்களில் கொடி நாட்டியிருக்கிறார்கள். காபூலிலிருந்து வரும் பட்டாணியர்கள் வட்டித் தொழில்; சீனர்கள் பொய்ப் பல் கட்டும் தொழில்; பர்மியர்கள் தொப்பி, காகிதப் பூக்கள் முதலானவை செய்யும் தொழில். இந்தவிதமாக நேப்பாளத்திலிருந்து வரும் கூர்க்காக்கள் மேற்கொள்ளும் ஒரே தொழில் காவல் காப்பது. இதிலே மற்றவர்களுக்கும் இந்தக் கூர்க்காக்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. அதாவது இங்கிருந்து போகிற நம்மவர்களாயிருந்தாலும் சரி, வெளியிலிருந்து வருகிற அயலார்களாயிருந்தாலும் சரி — அவர்களிடம் பணம் இருக்கலாம், கல்வியறிவு இருக்கலாம், தொழில் நுணுக்கத் திறமை இருக்கலாம், வியாபார வித்தாரத்தனம் இருக்கலாம். உழைப்பாளிகளாகவும் இருக்கலாம். ஆனால் ஒழுக்க நெறி உபாசனை உள்ளவர்கள் என்று மட்டும் அவர்களுக்கு உத்தரவாதம் அளித்துவிட முடியாது — அவர்களைகூட! இந்தக் கூர்க்காக்களோ இதற்கு முற்றிலும் வேறுபட்டவர்கள். இவர்களிடம் கல்வியறிவு கிடையாது; தொழில் திறமையும் குறைவு; வியாபார சாமர்த்தியம் அறவே இல்லாதவர்கள்; உடலை வருத்தி உழைக்கவும் பயிற்சியற்றவர்கள்; ஒருவகையில் இவர்களைச் சோம்பேறிகள் என்றுகூடச் சொல்லலாம். ஆனால் இவற்றுக்கெல்லாம் மேலான ஒன்று இவர்களின் உயிரோடு, உடலோடு, இரத்தத்தோடு கலந்திருக்கிறது. அதுதான் சத்தியத்தின் மறுபுறமான நேர்மை! இவை இரண்டின் சேர்க்கையால் உருவாகும் அஞ்சா நெஞ்சம்! இந்த அரிய செல்வங்களை மூலதனமாகக் கொண்டே பல நூறு மைல்களுக்கு அப்பாலிருந்து இங்கு வந்து பிழைப்பு நடத்துகிறார்கள். பணம் சம்பாதித்துத் தமது பெற்றோர், பெண்டு பிள்ளைகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இன்னொன்றையும் கேள், காயத்ரி! ஊர்க் காவல், உடைமைக் காவல், உயிர்க் காவல் - இம்மூன்றுக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டிய கடமை அரசாங்கத்தைச் சேர்ந்தது. அந்தக் கடமையைச் சரிவர ஆற்றப் போலீஸ் இலாகா என்ற ஒன்றைச் சிருஷ்டித்து, அதனிடம் அப்பெரும் பொறுப்புக்களை அது ஒப்படைத்திருக்கிறது. அத்தகைய வலிமை வாய்ந்த போலீஸ் இலாகாவே அந்த முப்பெரும் பொறுப்புக்களைத் தாமாக ஏற்றுத் தனிப்பட்ட முறையில் பணிபுரிய வரும் இந்தக் கூர்க்காக்களை- அவர்கள் ஓர் அந்நிய தேசப் பிரஜைகளாயிருந்தும் கூட — தடை செய்யாமல் நம்பிக் கையோடு அநுமதித்து விட்டிருக்கிறதென்றால், அவர்களிடமுள்ள நேர்மைக்கும், உண்மைக்கும், சத்திய உணர்ச்சிக்கும் வேறு என்ன சான்று வேண்டும்?''

டாக்டர் வாசுதேவன் சாய்வு நாற்காலியை விட்டு மெல்ல எழுந்தார். தொலைதூரத்தில் 'டொக், டொக்' என்ற ஒலியும், ஊதுகுழல் சப்தமும், நாய்களின் குரைப்பொலியும், சேர்ந்து ஏக கோஷமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. காயத்ரி அவ்வொலிகளைக் கூர்ந்து செவிமடுப்பவள் போல் எங்கோ பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள். விசாலாட்சி அங்கேயே படுத்து நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்தாள்.

இரவு மணி இரண்டு. அந்தத் தெருவைக் கடந்து, அடுத்த தெருவில் திரும்பி வழக்கம் போல் தன் காரியத்தைச் செய்துகொண்டே நடந்த ராம்சிங் ஒரு விறகுத் தொட்டிக்கு எதிரில் போய் நின்று சாத்திக் கிடந்த மூங்கில் படல் கதவைக் குறுந்தடியால் தட்டினான். உள்ளேயிருந்து இருமும் சத்தம் கேட்டது. அவ்வொலி வந்த பக்கம் டார்ச் விளக்கைத் திருப்பினான். அடுப்புக் கரி மூட்டைகளுக்கு அருகில் கன்னங்கரேலென்று ஒருவன் கட்டைத் துண்டு மாதிரி குத்துக்காலிட்டு உட்கார்ந்து பீடி குடித்துக் கொண்டிருந்தான். அவன் அந்த விறகுத் தொட்டியில் கட்டை பிளப்பவன். அவனுக்கு வீடு, வாசல் எதுவும் கிடையாது. வேலை, வசிப்பு எல்லாம் அங்கேதான். தொட்டிக்குக் காவலாக இருக்கட்டும் என்று அதன் முதலாளி அவனை அங்கேயே தங்கிக் கொள்ளும்படி அனுமதித்திருந்தான். ஆயினும் கூர்க்கா ராம்சிங்குக்கு அந்தத் தொட்டியிலிருந்து மாதம் ஒரு ரூபாய் கிடைத்து வந்தது.

''பையாஜீ! தூக்கம் பண்ணலியா?''— தனக்குத் தெரிந்த அரை குறைத் தமிழில் கேட்டான் ராம்சிங்.

சற்று நேரம் கழித்து, ''ஊம்! ஊம்!'' என்று அலட்சியமாகக் குரல் கொடுத்தான் விறகுவெட்டி.

நீண்ட விசில் ஊதிக் கொண்டே அங்கிருந்து நடந்த ராம்சிங், அந்த விறகுத் தொட்டிக்குப் பக்கத்தில் — வேலிப் படலோரம் தழைத்துப் பம்மலாக வளர்ந்து நின்ற வேப்ப மரத்தை 'டொக், டொக்' என்று இரண்டு முறை தட்டினான்.

முதலில் நாய் ஒன்றின் உறுமல் சத்தம் கேட்டது. பிறகு, ''இன்னு கூர்க்கா! இப்பத்தான் போறியா?... மணி இன்னா?'' என்று இருள் கவிந்திருந்த வேப்ப மரத்தடியிலிருந்து ஒரு பெண்ணின் குரல் எழுந்தது. அதைத் தொடர்ந்து சிறு பிள்ளை ஒன்றின் அழுகை முனகல் ஓசை.

''கண்மாவா?... தோ பஜே!... ஸோஜா, ஸோஜா!'' ராம்சிங் தரையைத் தட்டிக் கொண்டு மேலே நடந்தான்.

விறகுத் தொட்டியின் வேலியோரம் படுத்து உறுமிக் கொண்டிருந்த கறுப்பு நாய் மெல்ல எழுந்து வந்து அவன் கால்களை முகர்ந்து பார்த்துவிட்டுப் பிறகு முன்னால் சென்று வாலைக் குழைத்தபடி குதித்தது.

எலிக்குப் பூனையும், கீரிக்குப் பாம்பும், கோழிக்குப் பருந்தும் எதிரிகளாக இருப்பது போல் நரிக் குறவர்களுக்கும் கூர்க்காக்களுக்கும் நாய்கள் எதிரி. நரிக்குறவர்களாவது பகலில் நடமாடுகிறவர்கள். கூர்க்காக்களோ இரவில் சுற்றுகிறவர்கள். அதனால் அவர்களுக்குத்தான் அவற்றால் அதிகத் தொல்லை. அதிலும் நடுத்தர வர்க்கத்தினர் குடியிருக்கும்

தெருக்களில் மனிதர்களின் சம எண்ணிக்கைக்கு நாய்களும் இருக்கும். ஆனால் அந்தப் பகுதிகளில்தான் கூர்க்காக்களுக்கு அதிக வரும்படி. ஐந்தாறு குடித்தனங்களுள்ள ஒரு வீட்டில் குடித்தனம் ஒன்றுக்கு எட்டணு என்றாலும் மொத்தம் மூன்று ரூபாய் கிடைக்கும் அல்லவா? எனவே, இரவில் ரோந்து சுற்றும் வேலையை மேற்கொள்ளும் எந்த ஒரு கூர்க்காவும் முதலில் தெரு நாய்களைச் சமாளிப்பது பற்றித்தான் கற்றுக் கொள்வான். பிறகே மனிதர்கள்! ராம்சிங் இதில் வல்லவன். ஒரு பட்டாளம் நாய்களே திரளாக வந்தாலும் அவன் அஞ்சுவதில்லை. கைத்தடியைப் பின்னால் வைத்துக்கொண்டு நின்று நிதானித்து அவற்றை நேரிட்டுப் பார்த்தானானால் ஏதோ மந்திரத்தில் கட்டுண்டவை போல் அவை பின்தங்கி விடும்.

இதற்கெல்லாம் நேர்மாறாக இந்த ஒரு நாய்தான் அவனிடம் நட்புப் பாராட்டியது. அது பெட்டை நாய். அவனை எங்கே கண்டாலும் ஓடி வந்து வாலைக் குழைத்துக்கொண்டு கூத்தாடும். அவனும் அதனிடம் "ஙோ, சோட்டி குத்தா, கைஸே ஹை?... சலோ! சலோ!" என்று அன்போடு பேசிவிட்டுப் போவான். இந்த அன்புக்கு அந்த நாயின் சொந்தக்காரியான கண்ணம்மாவும் ஒரு காரணம் எனலாம். அவள்தான் சற்று முன் வேப்பமரத்தடியிலிருந்து குரல்கொடுத்தவள்.

அவளைக் கண்ணம்மா என்று சொல்வதை விட 'கன்னம்மா' என்றால் மிகப் பொருத்தமாக இருக்கும். காரணம் அவளுடைய வலது கன்னத்துப் பகுதி இடது கன்னத்தை விட இரண்டத்தனை உப்பலாக இருந்தது. அசைப்பிலே பார்த்தால் ஏதோ அடிபட்டு வீங்கிப் போன மாதிரி தோன்றும். ஆனால் அப்படி அல்ல. அது பிறவிக் கோளாறு. அவளைப் பார்க்க வேண்டுமானால் இடது புறம் நின்று பார்க்க வேண்டும். நேரே பார்த்தால் இன்னும் விசித்திரமான — விகாரமான — ஒரு முக வடிவம் காட்சி தரும். பிரம்மா அவளைப் படைக்கும்போது கன்னத்தில் பூசி மெழுக வேண்டிய ஏதோ ஒரு 'கலவைப் பொருள்' அவருக்குப் பற்றாக்குறையாகி யிருக்கலாம்; அல்லது அவளது உருவத்தைச் செய்து அவன் நன்கு உலரா முன்பே பூமியில் ஒருக்களித்துப் போட்டு அதனால் ஒரு கன்னப் பகுதி அழுந்திச் சப்பையாகி, மறு கன்னம் உப்பி விட்டுமிருக்கலாம். எது எப்படி இருந்தாலும் அவளிடம் இப்போது இளமை இருந்தது. வயசு இருபத்தைந்துதான். நல்ல கருமை நிறம். கழுத்துக்குக் கீழே கால் வரையில் அவளைப் பார்த்தால் கருவேல மரத்தில் செதுக்கிய ரதியின் சிலை போலவே காட்சியளிப்பாள்.

நான்கு வருடங்களுக்கு முன்னால் எவனோ ஒருவன் இருட்டிலே — நல்ல உறக்கத்திலே— அவள் கிடந்தபோது, அவளுடைய குரூப முகத்தை மறந்து, கழுத்து முதல் கால் வரையில் மட்டும் ரதியின் சிலையாக ரசித்துப் பார்த்துவிட்டுப் போனதன் பிண்டப் பிரமாணமாகத்தான் இதோ, இன்று அவளது பக்கத்தில் அந்த வேப்ப மரத்தடியில் மூன்று வயதுப் பாலகனை ரங்கன் படுத்துக் கொண்டிருக்கிறான். தூக்கத்திலும் தன் பசியை மறக்காமல் அழுது முனகிக் கொண்டே!



மற்றவர்களுக்கு எப்படியோ? கண்ணம்மாவுக்கு அதெல்லாம் பெரிய விஷயமாகி விடவில்லை. ஏனென்றால், அதற்காக அவள் பல நாட்கள், பல மாதங்கள் தன் அப்பனிடம் அடியும் உதையும் பட்டு, ஏச்சுகளும் பேச்சுக்களும் வாங்கி, துக்கமும் துயரமும் அடைந்து, விம்மியும் தேம்பியும் பொருமியும், புலம்பியும் அழுது கடைசியில் ஓய்ந்தே போனாள், — ரங்கன் அவளுடைய கையணைப்புக்குள் வந்த அன்று! ஆகவே, அவளைப் பொறுத்தவரையில் அது ஒரு தீய கனவாகத் தீர்ந்து போன விஷயமாயிற்று. ஆனால் இப்போது மறுபடியும் அதே போன்ற 'தீய கனவு' கண்டு கொண்டிருந்த சமயம் பார்த்துத்தானு இந்தக் கூர்க்கா ராம்சிங் வந்து வேப்பமரத்தைத் தட்டி அவளை எழுப்பிவிட வேண்டும்?

கட்டைத் தொட்டியில் உறக்கம் பிடிக்காமல் உட்கார்ந்து கொண்டிருந்த விறகு வெட்டி இருமும் சத்தம் கேட்டது!...

ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னால் எங்கோ ஒரு கிராமத்திலிருந்து கண்ணப்ப நாயக்கனும் அவன் மகள் கண்ணம்மாவும் பிழைப்புக்காகப் பட்டணம் வந்தார்கள். கண்ணப்பனின் மனைவி அதற்கு முன்பே காலமாகி விட்டாள். பட்டணத்து மேற்கு எல்லையிலிருந்த ஒரு செங்கல் சூளையில் அவனுக்குக் கல் அறுக்கும் வேலை கிடைத்தது. அங்கேயே சிறு குடிசையொன்று போட்டுக் கொண்டு தந்தையும் மகளும் அமைதியாக நாட்களைக் கடத்தி வந்தனர். ஒரு சமயம் பெய்த மழையால் வேகப் போட்டிருந்த செங்கல் சூளை அழிந்து பெரு நஷ்டம் ஏற்பட்டுவிடவே அதன் முதலாளி அந்தத் தொழிலையே விட்டு விட்டான். அதனால் வேலையற்றுப் போன கண்ணப்ப நாயக்கன் வேறு ஏதேதோ கூலி வேலைகளெல்லாம் செய்து பார்த்து விட்டுக் கடைசியில் இந்த விறகுத் தொட்டியிலே கட்டை பிளப்பவனாக வந்து சேர்ந்தான். ஒரு குண்டு விறகு பிளந்தால் இரண்டணு கூலி. நாளொன்றுக்கு ஒன்றரை அல்லது ஒன்றே முக்கால் ரூபாய் கிடைக்கும். அத்துடன் கண்ணம்மா வீடுகளுக்கு விறகு தூக்கிக் கொண்டு போய்ப் போட்டு ஐந்தாறணு சம்பாதிப்பாள். கடை முதலாளி அவர்களைத் தொட்டியிலேயே தங்கிக் கொள்ள அனுமதித்தான் — இரவு நேரங்களில் காவலாக இருக்கட்டும் என்று. ஆனால் சோறாக்கும் வேலை மட்டும் உள்ளே நடக்கக் கூடாது. வெளியே வேப்ப மரத்தடியில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது உத்தரவு. விறகுத்தொட்டி அல்லவா? நிம்மதியாகத்தான் அவர்களுடைய நாட்கள் சென்று கொண்டிருந்தன.

கண்ணப்ப நாயக்கனோடு இன்னொருவனும் கட்டை பிளக்க வந்து சேர்ந்தான். அவனால் அங்கே ஆறு மாசத்துக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஓடிவிட்டான். அப்படி ஓடும்போது சும்மா ஓடவில்லை. கல்யாணம் பண்ணி வைக்க வக்கில்லாமலும், மாப்பிள்ளை கிடைக்காமலும், கட்டை பாய்ந்து



மதர்த்துக் கிடந்த கண்ணம்மாவின் மடியில் ரங்கனைத் தன் நினைவுச் சின்னமாகப் போட்டு விட்டு ஓடிப் போனான்! விலாசம் தெரியாமல் அவன் ஓடிப் போன ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் கண்ணப்ப நாயக்கன் விறகு பிளக்கும்போது கோடரியைத் தன் கணுக்காலில் போட்டுக் கொண்டு பலத்த காயமடைந்தான். அதற்குச் சரியாக மருந்து போட்டுக் கவனித்திருந்தால் அந்த வெட்டுக் காயம் ஆறிப் போயிருக்கும். கவனிக்கவில்லை. வெட்டுப் புண் சீழ் பிடித்துப் புடம் வைத்தது. வீங்கியது. ஜுரம் வந்தது. ஐந்து நாட்கள் படுக்கைக்குப் பின் ஆள் எழுந்திருக்கவில்லை; போய்விட்டான் — போயே விட்டான். தன் மகனுக்கென்று அவன் விட்டுச் சென்ற ஒரே துணை அந்தக் கறுப்பு நாய்தான்.

கண்ணம்மா அநாதையானாள். தாங்குவார் யாரும் இல்லை. ஆனாலும் அவள் தவித்து விடவில்லை. விறகு சுமந்து போடும் வேலையைத் தொடர்ந்தாள். அதுவே இப்போது அவளையும் அவளது பிள்ளையையும் ஜீவிக்க வைத்து வருகிறது. அந்த வேப்ப மரத்தடிதான் அவளுடைய வாசஸ்தலம். பொங்குவது, உண்பது, உட்காருவது, உறங்குவது எல்லாம் அங்கேதான்.

கண்ணப்ப நாயக்கன் காலமானதும் அவ்விறகுத் தொட்டியில் கட்டை பிளக்க இன்னொருவன் வந்து சேர்ந்தான். அவனும் ஏகாங்கிதான். அதோ, பீடி குடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பவனே அவன்!...

இதெல்லாம் இருக்கட்டும். கூர்க்கா ராம்சிங்கிடம் கண்ணம்மாவும் அவளுடைய நாயும் பரிச்சயமாகிக் கொண்டது எப்படி?

ராம்சிங் இரவில் ரோந்து சுற்றுவதோடு தன் கடமை தீர்ந்து விட்டதாக நினைப்பதில்லை. வாரத்தில் ஒரு நாளோ இரண்டு நாட்களோ, மாலை வேளைகளில் தான் ரோந்து பார்க்கும் ரோடுகள், தெருக்கள், வழியே உலா வருவான். ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று தன் 'சா(ஹப்)ப்'களுக்கு சலாம் அடித்து விட்டுப் போவான். எல்லாம் காரணமாகத்தான்!

அப்படி ஒரு நாள் அவன் காலை உலா வரும் போது, தெருப் புழுதியில் விளையாடிக் கொண்டிருந்த கண்ணம்மாவின் மகன் ரங்கன் எழுந்து நின்று, ''சலாம், கூர்க்கா!'' என்றான் மழலை மொழியில். விறகுத் தொட்டியின் முதலாளிக்கு ராம்சிங் சல்யூட் அடிப்பதைப் பல நாட்கள் பார்த்துக்கொண்டிருந்ததாலேயே அந்தச் சிறுவனும் அவனுக்கு அவ்வாறு செய்தான்.

அதைக் கண்ட ராம் சிங்குக்கு ரொம்பவும் குஷியாகி விட்டது. அவனும் பதிலுக்கு சலாம் செய்தான். ரங்கனுக்கு ஒரே மகிழ்ச்சி, பெருமை! அன்று முதல் ரங்கனுடன் விளையாடும் மற்றச் சிறுவர்களும் சேர்ந்து ராம் சிங்கை எங்கே கண்டாலும், ''சலாம், கூர்க்கா!'' என்று கத்த ஆரம்பித்து விட்டார்கள். அவனுக்கு இது நல்ல பொழுது போக்காக இருந்தது. தயங்காமல், கணங்காமல் சிரித்த முகத்துடன் அச்சிறுவர்கள் ஒவ்வொருவருக்கும் பதில் சலாம் சொல்லிக் கொண்டே போவான். அதிலும், பிறந்த மேனியாய், பரட்டைத் தலையும், தெருப் புழுதியுமாகத் தளர் நடைவிட்டு ஓடிவந்து ஒரு சிப்பாயைப் போல் நிமிர்ந்து நின்று சலாம் செய்யும் ரங்கனைக் கண்டாலே அவனுக்கு உற்சாகம் பிறந்து விடும். தன் ஜேபியில் நொறுவைத் தீனியாகப் போட்டுக் கொண்டு வரும் ரொட்டித் துண்டையும், வேக வைத்த உருளைக் கிழங்கையும் எடுத்து அச்சிறுவனிடம் கொடுத்துவிட்டுப் போவான். இப்படி ஒரு நாள் ரங்கனுக்கு ரொட்டி கொடுக்கும்போது பக்கத்தில் அந்தக் கறுப்பு நாய் நின்றிருக்க, அதற்கும் ஒரு துண்டு கிள்ளிப் போட்ட நாளிலிருந்துதான் அது அவனோடு நட்புப் பாராட்டத் தொடங்கி விட்டது.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டு வந்த கண்ணம்மாவுக்கும் அவனிடம் ஏதாவது பேச வேண்டும் போல் தோன்றியது. பேசிச் சிரிக்க ஆரம்பித்தாள். பேச்சு என்றால் என்ன பேச்சு? மாலை நேரங்களில் —

''இன்னா கூர்க்கா, சோறு துன்னியா?''

''ஹா(ங்)! தும் கானா காயா?''

''இன்னாயா சொல்றே? பாட்டுப் பாடவா சொல்றே? எனக்குப் பாட்டுப் பாடத் தெரியாதே!''

சிரிப்பு, சிரிப்பு. இரவில் ரோந்து வரும் போது—

''இன்னா கூர்க்கா. இப்ப மணி இன்னா?''

''கண்மாவா?... தோ பஜே!...ஸோ ஜா, ஸோ ஜா!''

இவ்வளவுதான் பேச்சு. இதிலேயே அவள் மீது அவனுக்கு ஒரு பிரியம். சங்கோசம் இல்லாத நேச உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. அவளுக்கும் அவன் மேல் ஒருவித அநுதாபம், பரிவு. அதனாலேயே அவன் தினமும் இரவில் அவளுக்குப் பாதுகாப்புத் தருவது போல் அந்த வேப்ப மரத்தைத் தட்டிவிட்டுப் போவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அவன் காட்டும் நேசத்துக்குப் பிரதியுபகார

மாக அவனால் செய்யக் கூடியது அது ஒன்றுதானே?

விடியற்காலை மணி நான்கு ஆகிவிட்டது. நல்ல பனி மூட்டம். ரோந்து சுற்றலை முடித்துக் கொண்ட கூர்க்கா ராம்சிங் ஒரு டீக்கடையில் வந்து உட்கார்ந்தான். அந்தக் கடை திறக்கும்போது அவன்தான் தினமும் முதல் போணி. ஸ்ட்ராங்காக சிங்கிள் சாயா வாங்கிச் சுவைத்துப் பருகிவிட்டு, பீடி பற்ற வைத்துக் கொண்டு வெகு நிதான மாக எழுந்து தன் இருப்பிடம் நோக்கி நடந்தான். நடையில் தெம்பு இல்லை; விறைப்பு இல்லை. இலேசான தள்ளாடல். மனித உடம்புதானே?

அந்த மெயின் ரோட்டில் தெற்குப் பார்த்து அமைந்த ஒரு பழைய ஓட்டுக் கூரை வீடு. அவ்வீட்டின் திண்ணைத் தாழ் வாரத்துக்கு இடது புறம் கடை வைக்கத் தோதாக ஒதுக்கி விடப்பட்ட ஒரு சிறு பகுதி. எட்டுக்குப் பத்தடி அகல நீளம் கொண்ட ஒரே அறைதான் அது. சன்னல் கின்னல் எதுவும் கிடையாது. கதவுக்குப் பதிலாக முகப்புச் சுவரில் நீள வாட்டத்தில் ஐந்து செருகுப் பலகைகள் போடப்பட்டிருந்தன. தேவைக்குத் தகுந்த அளவில் அவற்றைக் கழற்றிக் கொள்ளலாம். முழுவதுமாக மூட வேண்டுமானால் எல்லாப் பலகைகளையும் நம்பர் பிசகின்றிச் செருகி, குறுக்கே ஓர் இரும்புச் சட்டத்தைப் போட்டுப் பூட்டி விட வேண்டும். நல்ல பாதுகாப்பான அறை தான்.

அதிலே முதலில் ஒரு தையல் கடை இருந்தது. பிறகு லாண்டிரியாக மாறியது. அப்புறம் 'முடி திருத்த நிலையம்' வந்தது. அதன் பின் சினிமாப் படப் பிடிப்பாளர்களுக்குக் காகிதப் பூக்கள் தயாரித்து விநியோகம் செய்யும் 'சினி ஆர்ட் கார்ட'ாக விளங்கிக் கடைசியில் அது கடந்த இரண்டு வருட காலமாகக் கூர்க்கா ராம்பகதூர் சிங்கின் குடியிருப்பு அறையாக இருந்து வருகிறது. அதற்கு மாத வாடகை ரூபாய் பத்து.

ஆனால் அந்தப் பத்து ரூபாய் வாடகையில் ராம்சிங் கொடுப்பது இரண்டே ரூபாய்தான். மீதப் பணம் எட்டு ரூபாயை இன்னும் நான்கு கூர்க்காக்கள் பகிர்ந்து கொண்டு கொடுக்கிறார்கள். ஆக, அவ்வறையில் குடியிருப் போர் ஐவர்.

அந்த ஐந்து பேர்களையும் சேர்ந்தாற் போல் ஒருநாளும் அங்கு பார்க்க முடியாது. காலையில் மூன்று பேர் இருப்பார்கள். மாலையில் மூன்று பேர்களைக் காணலாம். இரவில் யாருமே இருக்க மாட்டார்கள். ஆனால் காலையிலும் மாலையிலும் வந்து போகிறவர்களோடு மூன்றாமவனாக ராம்சிங்கை மட்டும் எப்போதும் பார்க்கலாம். அதற்குக் காரணம் —

ஒரு கூர்க்கா பாங்க் ஒன்றில் காவல் வேலை பார்த்து வந்தான்; இன்னொருவனுக்கு ஒரு பெரிய தொழிற்சாலையில் கேட் — கீப்பர் வேலை; மற்றொருவன் சினிமா நடிகை ஒருத்தியின் வீட்டுக் காவலாளி. பிறிதொருவனுக்குப் பிரபல காமிராக் கம்பெனி ஒன்றில் காவல் பணி. ராம் சிங் ஒருவன்தான் இந்த வட்டாரத்தில் இரவு ரோந்து சுற்றும் வேலை செய்பவன். எனவே அவன் பகலெல்லாம் தன் அறையிலேயே இருக்க வேண்டியவனானான். அதனால் அவனுக்கு ஒன்றும் கஷ்டமாக இல்லை. காரணம் அவன்தான் தன்னையும் சேர்த்துத் தன் சகாக்களுக்கெல்லாம் உணவு தயாரிப்பவன்.

ராம்சிங் ரொட்டி சுடுவதில் கைதேர்ந்தவன். ஒவ்வொரு ரொட்டியும் ஒரு பூரண சந்திரன் போல் அவ்வளவு பெரிதாக, அழகாக இருக்கும். அந்த அறையில் ஒரு மூலையில் கோதுமை மாவு நிறைந்த பெரிய டின், பச்சை மிளகாய், இஞ்சி, உருளைக் கிழங்கு, வெங்காயம், பருப்பு நெய் இவற்றை எப்போதும் குறைவில்லாமல் காணலாம். விடியற்காலை ரோந்து சுற்றி விட்டுத் திரும்பி வந்ததும் கொஞ்ச நேரம் படுத்தெழுந்து குளித்துப் பத்துமணி வாக்கில் ரொட்டி சுட ஆரம்பித்தானானால் பிற்பகல் இரண்டு மணிக்கு ஒருவாறு அவ்வேலை முடிவடையும். உடன் இருப்பவர்களும் உதவி செய்வார்கள். அப்புறம் ஒரு சின்னத் தூக்கம். மாலை ஆறு மணிக்கெல்லாம் இரவு உணவை முடித்துக் கொண்டு தன் உத்தி



யோக உடைகளை அணிய ஆரம்பித்து விடுவான் அதற்கு மட்டும் அவனுக்குக் குறைந்த பட்சம் ஒன்றரை மணி நேரம் தேவை. அந்த விஷயத்தில் அவன் எப்போதுமே மிகமிக நிதானம். அதை நிதானம் என்று சொல்வதை விடக் கவனப் பொறுப்பு என்பதே பொருந்தும். இதில் அவன்தான் இப்படி என்றில்லை; அவனுடைய சகாக்களின் விஷயமும் இதுவே. தங்கள் உத்தியோக ஆடை அணிகளில் கவனம் செலுத்துவதிலே இராணுவ அதிகாரிகளையும் இவர்கள் மிஞ்சக் கூடியவர்கள்.

அறையில் எத்தனை பேர்கள் இருந்தாலும் அவர்களிடையே பேச்சு மிகவும் குறைவாகவே இருக்கும். ஹாஸ்யப் பேச்சு அதை விடக் குறைவு. காரியத் தேவைக்காக இரண்டொரு வார்த்தைகள். அதற்கு மேல் எல்லாம் செயல்தான். அல்லது சிந்தனையை அடக்கிச் சும்மாயிருத்தல்.

ராம்சிங்கின் சகாக்கள் பெரும்பாலும் தூங்குவதற்காகத்தான் இந்த அறைக்கு வருவார்கள். தூங்கின நேரம் போக மற்ற நேரங்களில் பூட்சுகளுக்கும் இடுப்பு பெல்ட்களுக்கும் பாலிஷ் போடுதல், துணி துவைத்தல், கிழிந்த ஆடைகளைத் தைத்தல், முக க்ஷவரம் செய்து கொள்ளுதல் இத்தியாதி வேலைகளில் ஈடுபடுவார்கள். இவை முடிந்து இன்னும் நேரமிருந்தால் தங்கள் ஊரிலிருந்து எப்போதாவது வந்த ஒரு பழைய கார்டுக் கடிதாசியை எடுத்து வைத்துக் கொண்டு அதை மணிக்கணக்கில் படித்துக் கொண்டிருப்பார்கள். ரொட்டி தின்பதற்கு மட்டும் ஒரு நேரம் வேளை என்று கிடையாது. தேவையான போது தேவையான அளவு தாமே எடுத்து வைத்துக் கொண்டு உண்பார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு டிரங்க் பெட்டி உண்டு. அதன் மேல் அவனவனுடைய மாற்றுப் பூட்சுகள், பெல்ட்டுகள், மாற்றுடைகள் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கும். படுக்கை ஜமுக்காளமும் தனித்தனிதான். இவற்றுடன் ஒரு முக்கியமான வஸ்துவும் அவனவன் பெட்டிக்கு அடியிலே இருக்கும். அதுதான் மணியார்டர் ஃபாரம்!

தன் சகாக்களுக்கும் சேர்த்து ரொட்டி சுடுவதான அதிகப்படி வேலையை ராம்சிங் மட்டும் செய்வானேன்? அந்த அறையை அவனே அதிக நேரம் உபயோகப்படுத்திக் கொள்கிறான் என்பதினாலா? அல்ல. அது அவர்களுக்குள் வகுத்துக் கொண்டிருக்கும் ஓர் ஒழுங்கு நியதியை ஒட்டிய விஷயம்.

ஆமாம்; அந்த நான்கு கூர்க்காக்களும் தங்கள் காவல் தொழிலில் சீனியராகி விட்டவர்கள்; ராம்சிங் மட்டுமே ஜூனியராக இருப்பவன். இது எப்படி நிர்ணயமாகிறது? எங்காவது ஒரு தொழிற்சாலையிலோ, வியாபார ஸ்தாபனத்திலோ, பாங்கிலோ அல்லது பங்களாவிலோ மாதச் சம்பளத்தில் காவல் வேலைக்கு அமர்கிறவன் சீனியர்; சம்பளம் என்றில்லாமல், நியமன வேலை என்றும் இல்லாமல் இரவு ரோந்து சுற்றலை மேற்கொள்கிறவன் ஜூனியர். எந்த ஒரு கூர்க்காவும் முதலில் ஏதேனும் ஒரு வட்டாரத்தில் இரவு ரோந்து வேலை பார்த்து விட்டுப் பிறகே மாதச் சம்பள வேலைக்குப் போவான். அவனுடைய தொழிலுக்கு அதுதான் ஆரம்பப் பயிற்சிக் களம்.

மௌண்ட் ரோட்டிலுள்ள பிரபல கடிகாரக் கம்பெனியொன்றின் பக்கத்தில் ஒரு சிறிய சந்து. அதில் இரண்டு மூன்று கூர்க்காக் குடும்பங்கள் வசிக்கின்றன, மனைவி மக்கள் சகிதம். அவர்களில் யாரோ ஒருவன் சென்னை நகரில் உள்ள கூர்க்காக்களுக்கெல்லாம் தலைவனாக இருக்க வேண்டும். ஏனென்றால், அங்கே எப்போதும் ஒரு பெரிய கூர்க்காக் கும்பலைப் பார்க்கலாம். எங்கெங்கே காவல் வேலைக்கு ஆள் தேவை என்ற விவரத்தை அந்தத் தலைவன் முதலில் தெரிந்து கொள்வான். அவனிடம் ஜூனியர் கூர்க்காக்களின் பெயர் பட்டியல் ஒன்று இருக்கும். அதன் வரிசைப் பிரகாரம், காவல் ஆள் தேவைப்படுகிற இடங்களுக்கு ஒவ்வொருவனாக அனுப்பி வைப்பான். அப்படி அனுப்பப்படுகிறவனுக்கு வேலை கிடைத்து விட்டால், அவன் அதுவரை செய்து வந்த இரவு ரோந்து வேலைக்கு 'ரிஸர்வில்' இருக்கும் புது ஆள் ஒருவனை நியமிப்பான். சீனியராகப் போகிறவன் அந்த ஜூனியரை அழைத்துக் கொண்டு, தான் ரோந்து சுற்றிய ரோடுகளையும், தெருக்களையும், அவற்றிலுள்ள கடைகளையும் வீடுகளையும் அவனுக்குக் காட்டி, சில கடைக்காரர்களிடமும் அவனை அறிமுகப்படுத்தி விட்டுப் போவான். அன்று முதல் அந்தப் புதிய கூர்க்கா தன்னை அவ்வட்டாரத்தில் காவல்காரனாக நியமனம் செய்து கொண்டவனாவான். இப்படி இங்கு வந்தவன்தான் ராம்சிங்!

நேப்பாளத்தின் தலைநகரான காட்மண்டுவிலிருந்து வந்த ராம்சிங்குக்குத் தாயும், மனைவியும், மூன்று வயதில் ஓர் ஆண் குழந்தையும் அங்கே இருக்கிறார்கள். இங்கு அவன் வந்து இரண்டு ஆண்டுகளாகியும் இன்னும் ஒரு முறைகூடத் தன் சொந்த நாட்டுக்குப் போகவில்லை; போகக் கூடிய வசதி ஏற்படாததால். எனினும் மாதம் பிறந்து பதினைந்து தேதிக்குள்ளாகுக்கு இருபது ரூபாய் மணியார்டர் அனுப்ப அவன் இதுவரையில் தவறியதில்லை!

சித்திரை மாசத்து இரண்டாம் வாரத்தில் ஒரு நாள். வழக்கம் போல் இரவு பதினொரு மணிக்கு ரோந்து சுற்றி வரப் புறப்பட்டான் ராம் சிங்.

மெயின் ரோட்டில் சாவதானமாக நடந்து வந்து கொண்டிருந்த ராம் சிங்கை, எதிரே வந்த இன்னொரு கூர்க்கா கையைப் பிடித்து நிறுத்திக் குசலம் விசாரிக்க ஆரம்பித்தான். ராம்சிங்குக்கு அவனைக் கண்டாலே பிடிப்பதில்லை. எங்காவது பார்த்தாலும் பார்க்காதவன் போல் போய் விடுவான். இப்போது நேரில் வந்து கையைப் பிடித்து விட்டதால் நிற்க வேண்டியதாகி விட்டது.

பொதுவாகவே கூர்க்காக்கள் தமக்குள்ளே எவ்வித பகையோ, பொறாமையோ வைத்துக் கொள்வதில்லை. எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போலவே இருப்பார்கள் — உருவத் தோற்றத்திலும் நடை உடை பாவனைகளிலும் மட்டுமல்ல; நேச உறவிலும் கூட! இந்தப் பண்பு அவர்களிடம் ஒரு கலையாகவே உருவாகி யிருந்தது. இப்

சிறப்புக் கதை

குண இயல்புகளை எழுத்தோவியமாக்கிக் காட்டுவதில் வல்லவர் திரு ஜெகசிற்பியன். நகர்ப்புறத்தில் வாழ்பவர்கள் கூர்க்காக்களைத் தினமும் பார்க்கிறார்கள். ஆனால் ஜெகசிற்பியன் பார்ப்பதுடன் நின்றுவிடவில்லை; அவர்களைப் பற்றிக் கண்டறிந்து, கூர்க்கா ஒருவனுடைய வாழ்க்கைக் கதையை மிகச் சுவைபட நமக்கு அளிக்கிறார் இந்த வெள்ளி விழா விசேஷ இதழிலே.

படிப்பட்டவர்களில் ஒருவனை ராம்சிங் தன் இனத்தவனை இவனை மட்டும் வெறுக்கக் காரணம் என்ன?

அவன் பெயர் துளசிகிரி. அவனும் ஒரு காலத்தில் ராம்சிங்கைப் போல் இரவு ரோந்து சுற்றியவன்தான் இன்னொரு வட்டாரத்தில். அவன் அங்கே செய்த ஒரு காரியமே ராம் சிங்கும் மற்ற கூர்க்காக்களும் அவனை வெறுத்து ஒதுக்கச் செய்து விட்டது.

துளசிகிரி ரோந்து சுற்றிய வட்டாரத்தின் தெரு ஒன்றிலிருந்த வீட்டார் அவனுக்குப் பணம் தர மறுத்தார்கள்; அத்துடன் அவனுடைய காவல் சேவை தங்களுக்கு வேண்டியதில்லை என்றும் வாதாடினார்கள். அதனால் கோபமடைந்த அவன், டீக்கடைகளில் நட்புப் பழக்கமான உள்ளூர்க் கேடிகள் இருவரைப் பிடித்து அவர்களுக்கு உளவும் சொல்லிக் கொடுத்து அவ்வீட்டிலே புகுந்து வாழைக் குலை, கொடிக் கயிற்றில் காயப் போட்டிருந்த நைலான் புடவை, கிணற்றடியிலிருந்த ஒரு பித்தளைக் குடம் ஆகியவற்றைத் திருடிக் கொண்டு போகச் செய்து தன் கோபத்தைத் தீர்த்துக் கொண்டான். மறு நாள், ஒன்றும் தெரியாதவன் மாதிரி அந்தத் தெருவில் போய் இராஜ நடை போட்டு நடந்திருக்கிறான். பொருள்களைப் பறி கொடுத்துவிட்டுத் தவித்துக் கொண்டிருந்த வீட்டார் அவனைப் பார்த்ததும் ஓடி வந்து, தங்கள் வீட்டையும் இரவு நேரத்தில் கண்காணிக்கும்படி கெஞ்சாத குறையாகக் கேட்டுக் கொண்டார்கள். அடுத்த வீட்டார் கொடுப்பதை விட இரண்டு மடங்கு அதிகமாகப் பணம் தருவதாகவும் சொன்னார்கள். மறுபடியும் திருட்டுப் போய்விடுமோ என்ற பயம் அவர்களுக்கு. அதைத்தானே அவனும் எதிர்பார்த்து அந்தக் காரியத்தைச் செய்தான்!

இந்த விஷயம் வெளியில் தெரியாமல் போனாலும், மற்ற கூர்க்காக்களுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அவர்கள் அவனை மிகக் கடுமையாகக் கண்டித்து, அவன் செய்து வந்த ரோந்து வேலையையும் செய்யக் கூடாதெனத் தடுத்து விரட்டி விட்டார்கள். அதற்காகத் துளசிகிரி பயந்துவிடவில்லை. கொஞ்ச நாட்கள் அங்குமிங்குமாகச் சுற்றிக்கொண்டிருந்து விட்டுப் பிறகு எப்படியோ ஒரு சினிமாத் தியேட்டரில் காவல்காரனாக வேலைக்கு அமர்ந்து விட்டான்.

இவ்விவரங்களை யெல்லாம் தம் சகாக்களின் மூலம் கேள்விப்பட்டிருந்ததாலேயே ராம்சிங் அவனை வெறுக்கத் தொடங்கினான். தன் இனத்தான் ஒருவன் இப்படித் தவறாக நடந்து விட்டானே என்பதற்காக அல்ல; அவனுடைய அந்த நம்பிக்கைத் துரோகமான செயல் மற்ற கூர்க்காக்கள் மீதும் தப்பபிப்பிராயம் கொள்ள வழி கோலி, அதனால் அவர்களுடைய பிழைப்புத் தொழிலுக்கே பாதகம் நேர்ந்துவிடுமோ என்ற கவலையாலேயே அவனை இவன் பகைத்து ஒதுக்கினான்.

ஆனால் துளசிகிரி எப்போதும்போல் குஷியாகவே ராம்சிங்கிடம் பேசுவான். இப்போது பேச வந்த காரணம், தான் சினிமாத் தியேட்டரில் செய்யும் காவல் வேலையை விட்டுவிடப் போவதாகவும், அந்த வேலைக்கு அவன் போவதானால் போகலாம் என்றும் சொல்லத்தான்.

ராம்சிங் சுருக்கமாக, ''எனக்கு அங்கெல்லாம் வேலை செய்யப் பிரியமில்லை'' என்று தன் தாய்மொழியில் அலட்சியமாகப் பதில் சொல்லி விட்டு வேகமாக மேலே நடந்தான்.

உண்மையில் அவனுக்கு அந்த வேலை மட்டுமல்ல; வேறு நல்ல இடங்களில் — பெரிய கம்பெனிகளில்—வேலைக்கு அமர வேண்டும் என்ற நோக்கமும் கிடையாது. அதற்குக் காரணம், அவன் மனத்தில் ஒரு பெரிய ஆசை இருந்தது. அதுவே அவனுடைய வாழ்க்கையின் இலட்சியம் என்றும் கூறலாம். அதாவது, இங்கிலாந்தில், லண்டன் மாநகரில், பிரிட்டிஷ் அரசியின் விசேஷப் படைகளில் ஒன்றான கூர்க்காப் படைப் பிரிவில் அவனது உடன் பிறந்த சகோதரன் ஒருவன் சிப்பாயாக இருக்கிறான்; அவனைப் போலத் தானும் அந்தப் படையில் சேர வேண்டும் என்பதுதான் அது! இவ்வாசை நிறைவேறுவது அவ்வளவு எளிதல்ல என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும் அதிலே ஒரு நம்பிக்கை. அதற்காக அவன் தன் சகோதரனுக்குக் கடிதங்களும் எழுதிக் கொண்டிருந்தான். 'என்றைக்காவது ஒருநாள் லண்டன் நகர் வீதியிலே நான் வீர நடை போட்டு நடக்கத்தான் போகிறேன்!'

இப்போது அவன் டாக்டர் வாசுதேவன் வாசம் செய்யும் தெருவில் நடந்துகொண்டிருந்தான்.

'டொக், டொக், டொக்!'

மணி ஒன்று. டாக்டரின் வீட்டெதிரே வந்து கேட்டையும், மதில் சுவரையும் தட்டிவிசில் ஊதினான் ராம்சிங். அன்று டாக்டருக்கு ஆஸ்பத்திரியில் இரவு 'டியூட்டி' இல்லை போலும். அவருடைய கார் ஷெட்டில் இருந்தது. மாடி அறையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவன் அங்கிருந்து நடந்தான்.

அடுத்தது விற்பனை வரி அதிகாரியின் பங்களா. அந்தப் பங்களா காம்பவுண்ட் கேட் வழக்கம் போல் சாத்தியிருந்தது. அகலப் போக்கில் அமைந்த இரட்டைக் கேட்

அது. உயரம் குறைவு. யாரும் எளிதில் அதை எகிறித் தாண்டிவிடலாம். ராம்சிங் ஞாபகமாக அங்கு விசில் ஊதவில்லை. தெருவின் தார் போட்ட தரையை மட்டும் இலேசாகத் தட்டினான். அப்படித் தட்டிக் கொண்டே சென்றவன் சட்டென்று நின்றான். அவனுடைய கூரிய பார்வை அந்த இரும்புக் 'கேட்'டை நோக்கிச் சென்றது.

அங்கே, 'கேட்'டுக்கு வெளியே — அதன் ஓரமாக — தெருச் சுற்றி நாய் ஒன்று படுத்துக் கொண்டிருந்தது. கன்னம்மாவின் கறுப்பு நாய் அல்லவா அது? ஆமாம்; அதுவேதான். அடுத்த தெருவிலிருந்து இங்கு ஏன் வந்திருக்கிறது?

'கேட்'டுக்கு உட்புறம் இன்னொரு நாய் நின்று கொண்டிருந்தது. அந்தப் பங்களாக் காரர்கள் வளர்க்கும் செல்ல நாய் அது. பார்க்கவே பயங்கரமான தோற்றம். அந்த நாய் அங்கே சும்மா நிற்கவில்லை; வெளியில் படுத்திருந்த கறுப்பு நாயுடன் காதல் விளையாட்டு விளையாடத் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தது. குறுக்கே இரும்பு கேட் இருக்கிறதே! அதுதான் அதற்குப் பெரிய தடையாக இருந்தது.

மாடி வீட்டு மன்மதன் குச்சு வீட்டு ரதியைக் காதலிப்பதென்பது மனிதர்களுக்கு மட்டுமே ஏகபோக உரிமை விஷயமா என்ன? சீர்திருத்தம், புரட்சி, முற்போக்கு என்பதெல்லாம் துள்ளிக் குதித்துப் பாய்ந்தோட ஒரு வழிப் பாதையா அமைக்கப் பட்டிருக்கிறது? அல்லது அவை ஓரின உரிமைச் சாலைகளா?

ராம்சிங்குக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவன் சிரிப்பதே அபூர்வம்; இப்போது சிரித்தான்.

''ஹே, குத்தே!...இதர் கியா கர்த்தா ஹை?... சலோ, சலோ!'' என்று சொல்லிக் கொண்டே தன் குறுந்தடியால் அந்தக் கறுப்பு நாயை மெல்லத் தட்டினான். அதுவும் எழுந்து வாலைக் குழைத்து ஆட்டிய வாறு அங்கிருந்து போக முற்பட்டது. அடுத்த கணம் —

இரும்பு கேட்டுக்கு உட்புறமிருந்த பெரிய நாய் ஒரு பயங்கர உறுமலுடன் பின்னால் சரிந்து, அதே வேகத்தில் சடாரென உயரே தாவிப் பாய்ந்து வெளியே குதித்து எழுந்து ராம்சிங்கின் வலது கால் தொடையை ஒரே கவ்வாகக் கவ்வியது!

இந்த எதிர்பாராத தாக்குதலால் பயந்து பதறிப்போன ராம்சிங் 'ஓ'வென அலறிக் கூவினான். நாயும் தன் கவ்வலை விடாமல் அவனைக் கீழே தள்ளி உருட்டிப் புரட்டியது.

நடுநிசியின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு எழுந்த இந்தப் பயங்கர அலறல் ஒலியால் அந்தத் தெருவே விழித்துக்கொண்டது. மூலைக்கு ஒருவராய் ஓடி வந்தனர். டாக்டர் வாசுதேவனும் மாடியிலிருந்து இறங்கி வந்தார். இத்தனை அமளிக்கும் அந்தப் பங்களா வாசல் கதவு மட்டும் திறக்கப்படவே யில்லை. ஜனக் கூட்டத்தைப் பார்த்துப் பீதியடைந்ததாலோ என்னவோ, ராம் சிங்கை விட்டு விட்டு முன்போல் 'கேட்'டைத் தாண்டி உள்ளே குதித்து ஓடி, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் முகப்பு மேல் ஏறி உட்கார்ந்து கொண்டது அந்த நாய். கீழே விழுந்து கிடந்த ராம்சிங் தட்டுத் தடுமாறி எழுந்து நின்றான். அவனுடைய கால் தொடையில் நாயின் இரண்டு பற்கள் ஆழப் பதிந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

ஜனக் கும்பலை விலக்கிக் கொண்டு வந்த டாக்டர் வாசுதேவன், மிரண்டு போயிருந்த கூர்க்கா ராம்சிங்கை கைத்தாங்கலாகத் தம் வீட்டுக்கு நடத்தி அழைத்துக் கொண்டு போனார். உடனடியாக அவனுக்கு நாய்க்கடி ஊசி மருந்து செலுத்தப்பட்டது. பிறகு இரத்தக் காயத்துக்கும் மருந்து பூசிக் கட்டுக் கட்டிய டாக்டர் அவனை மறுநாள் காலை தம் காரிலேயே ஏற்றிக் கொண்டு போய் அவன் அறையில் விட்டு விட்டு வந்தார்.

இந்தச் சம்பவம் நடந்து சரியாக ஏழு நாட்கள் ஓடி மறைந்தன. எட்டாம் நாள் இரவு ஒரு மணி.

'டொக், டொக், டொக்!'

கூடத்து அறையில் படுத்திருந்த விசாலாட்சி அவசரமாக எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். அப்போதுதான் காரை விட்டு இறங்கி வந்த டாக்டர் வாசுதேவன், மாடிப் படிகளில் ஏறிக் கொண்டே மெல்லத் தம் பார்வையைத் தெருப் பக்கம் செலுத்தினார்.

''சலாம், சாப்!'' — விறைத்து நின்று சல்யூட் அடித்த ராம்பகதூர் சிங் 'கேட்'டையும், மதில் சுவரையும் தட்டிக் கொண்டே கம்பீரமாக ஒரு ராணுவ வீரன் போல் நடந்து சென்றான்.

களைத்துப் போயிருந்த டாக்டரின் முகத்தில் இளநகை தவழ்ந்தது.

மாதங்கள் ஐந்து முறிந்து விழுந்தன. புரட்டாசி மாசம் முதல் வாரத்தில் ஒருநாள்.

மாலை ஐந்து மணி வாக்கில் தம் டிஸ்பென்சரியை மூடிவிட்டுக் காப்பி சாப்பிடுவதற்காக வந்தார் டாக்டர் வாசுதேவன்.

''உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமோ?'' என்று கேட்டவாறு காப்பி தம்ளரை நீட்டினாள் விசாலாட்சி.

'என்ன?' என்பது போல் அவளை ஏறிட்டுப் பார்த்தார் டாக்டர்.

''கடந்த ஒரு வாரமாக ஏக ரகளை செய்து கத்திக் கொண்டு கிடந்த பக்கத்து வீட்டு நாயின் குரல் இன்று முழுதும் கேட்கவில்லை.''

''இது ஒரு பெரிய விஷயமா?'' என்று நகைத்தார் வாசு.

''நான் சொல்வது அதில்லை. இன்று மத்தியானம் அவர்கள் வீட்டுத் தோட்டத்திலிருக்கும் மாமரத்துக்கு அடியில் பெரிய குழி ஒன்று தோண்டிக் கொண்டிருந்தார்கள்... மாடிக்குப் போனபோது பார்த்தேன்.''

டாக்டரின் முகம் ஜிவ்வென்று வெளிறிச் சிறுத்தது. அவர் பதிலேதும் பேசாமல் மௌனமாகச் சோபாவில் சாய்ந்து கண்களை இலேசாக மூடிக் கொண்டார்.

அன்றிரவு வழக்கம் போல் ரோந்து சுற்றி வரக் கிளம்பிய ராம்சிங் சரியாக ஒரு மணிக்கு வந்து டாக்டர் வாசுதேவன் வீட்டு மதில் சுவரையும், வாயில் கதவையும் தட்டி, டார்ச் விளக்கின் ஒளியை அங்குமிங்கும்



பாய்ச்சிவிட்டு ஒரு நீண்ட விசில் ஊதியவாறு மேலே நடந்தான்.

பகலெல்லாம் கமாரான வெயிலே காய்ந்தது. என்றுலும் பொழுது சாய்ந்தது முதல் ஒரேபுழுக்கமாக இருந்தது. காற்று மண்டலமே வற்றிவிட்டாற் போன்ற குமைச்சல். அந்த நிலே இப்போது அடியோடு மாறி, சில்லென்ற குளிர் காற்று வீசியது. சற்றைக்கெல்லாம் வானத்தில் மினுக்கிக் கொண்டிருந்த நட்சத்திரங்கள் மறைந்தன. எங்கிருந்தோ திமு திமுவெனக் கரியமேகங்கள் வந்துசூழ்ந்து விண் வெளியை இருட்காடாக்கின. இதொன்றையுமே கவனியாமல் சாவதானமாக நடந்து கொண்டிருந்த கூர்க்கா ராம்சிங் அந்தத் தெருவைத் தாண்டி அடுத்த தெருவுக்குத் திரும்பினன்.

இருண்டு கிடந்த மேற்கு வான் சரிவில் திடீரென்று ஒரு மின்னற் பாளம் கொடிகளை வீசிப் பிளந்து மீண்டும் தைத்து விட்டு மறைந்தது. அதைத் தொடர்ந்து பிரும்மாண்டமான மரம் ஒன்று முறிந்து சாய்வது போன்ற பேரொலியுடன் ஓர் இடி இடித்தது. அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் சட சடவென்று மழை கொட்ட ஆரம்பித்து விட்டது.

தரையைத் தட்டியவாறு நடந்து கொண்டிருந்த ராம்சிங், தெருவின் இடதுபுறத்தில் சாத்திக் கிடந்த ஒரு 'பங்க்' கடையை நோக்கி ஓடி, ஒண்டி நின்று கொண்டான். அந்த 'பங்க்'குக்கு 'மங்கிடாப்' போடப்பட்டிருந்ததால் நிற்பதற்கு ரொம்பவும் சௌகரியமாக இருந்தது. மழை ஓயும்வரையில் அவன் அங்கு நனையாமல் நிற்கலாம்.

விநாடிக்கு விநாடி மழை வலுத்துச் சாடியது. இடியும் மின்னலும் வெறியாட்டம் போட்டன.

"அம்மாவ்!.... அம்மோவ்!...."

மழையின் பேரிரைச்சலே மேவிக் கொண்டு சின்னஞ்சிறு குரல் ஒன்று எழுந்து ஒலித்தது.

கண்ணேப் பறிக்கும் ஒரு மின்னல். பயங்கரமானதொரு பேரிடி.

"அம்மாவ்!... அம்மோவ்!..."— மீண்டும் அதே ஈனக் குரல். அலறி அழும் ஓசை. கடையில் ஒண்டி நின்ற ராம்சிங் அவசரமாகச் சுற்று முற்றும் பார்த்தான். அவன் நின்றிருந்த கடைக்குப் பக்கத்தில் ஒரு மொட்டை மாடி வீடு. அதற்கு அடுத்து அந்தக் காலி மனே. அதில் தான் விறகுத் தொட்டி இருக்கிறது. அவ் விறகுத் தொட்டியின் ஓரத்தில் வேப்ப மரம். கண்ணம்மாவின் வாசஸ்தலம் அது. அங்கிருந்து தான் அழுகைக் குரல் வருகிறது. அதோ, அந்தமரத்தடியில் சிறிய கரிய உருவம்ஒன்றுதெரிகிறதே!...

"அம்மாவ்!... அம்மோவ்!..."

வருண பகவானின் வயிறு வெடித்து விட்டதோ? அட்டகாசப் பேரோசையுடன் பொழிந்தது மழை.

ராம்சிங் தன் பார்வையை இன்னும் கூர்மையாக்கி அவ்வேப்ப மரத்தடியை நோக்கிச் செலுத்தினன். 'அது கண்ணம்மாவின் பிள்ளே ரங்கனின் அழுகுரல் அல்லவா? அந்தப்



"பத்து மாதத்துக்கு முன்னே ராமு, பத்தா யிரம் ரூபாய்க்கு செகண்ட் ஹாண்ட் கார் வாங்கி ஞன். ரெண்டு மாதம் கழித்து அதை, கோபு வாங்கி மூன்று மாதம் பொறுத்து நர்சுவுக்கு விற்ருன். அதைப் போன மாதம் பூபாலன் வாங்கினுன். இப்ப அதே செகண்ட் ஹாண்ட் கார் பதினெட்டாயிரம் ரூபாய் விலேக்கு வந் திருக்கு. வேணுமா?"

பாலகனை விட்டு விட்டு அவன் எங்கே போனுன்? அங்கேயே இருந்தால் குழந்தைப் பையன் அவனை ஏன் கூப்பிட்டுக் கொண்டு அழ வேண்டும்?'

கூர்க்காவின் மனம் குழம்பியது. 'சலாம், கூர்க்கா!' என்று அச்சிறுவன் பிறந்த மேனி யாகவும், பரட்டைத் தலேயுடனும் விறைத்து நின்று சல்யூட் அடிப்பானே அந்தக் காட்சி அவன் மனக் கண்ணில் தோன்றி மறைந்தது.

வேப்ப மரத்தடியில் சிறுவன் ரங்கன் மட்டுமே தனியாக மழையில் நனேந்து நின்று அழுது கொண்டிருந்தான்.

''ரங்கா! இதர் ஆவோ கர்த்தா ஹை?.... ஆவ், ஆவ்!''

தப தபவென்று ஓடி வந்த ராம்சிங், குழந் தைப் பையனை அப்படியே தூக்கி அணைத்துக் கொண்டு விறகுத் தொட்டியண்டை விரைந் தான். மூங்கில் படல் கதவு கொஞ்சமாக ஒருக்களித்துத் திறந்திருந்தது.

''கண்மா!.... ஹே, கண்மா!''

கூர்க்கா கூவினுன். பதில் இல்லே. ஆனுல் தொட்டியின் உள்ளே கரி மூட்டைகளுக்கு அப்பால் இருவர் மெல்லப் பேசிச் சிரிக்கும் ஒலி கேட்டது. கடை முதலாளி உட்காரும் இடத்தில் மேசைக்கு அடியிலே படுத்திருந்த அந்தக் கறுப்பு நாய் மட்டும் உடனே எழுந்து வாலே ஆட்டிக் கொண்டு அவனேப் பார்த்து மகிழ்ச்சி முனகிவிட்டது.

''ரங்கா! அந்தர் சலோ! சலோ, பச்சா!''

சிறுவனே விறகுத் தொட்டிக்குள் விட்டுப் போகச் சொல்லிவிட்டு வேகமாகத் திரும்பி நடந்தான். இப்போது அவன் தெப்பமாக நனேந்து விட்டான். இனிமேல் எங்கேயும் ஒதுங்கி நின்று பயனில்லே. நேரே தன் இருப் பிடம் நோக்கி நடக்க வேண்டியதுதான்.

ராம்சிங் அந்தத் தெருவைக் கடந்து, இன்னெரு தெருவில் இறங்கி மெயின் சாலேயில் ஏறித் தன் அறையை நெருங்கின சமயம், திடீரென்று அப்படியே விறைத்து நின்ருன். ஒரு பயங்கரமான காட்டுக் கூச்சல். அவன்தான் அப்படிக் கத்தி ஞன். பிறகு நாய் மாதிரி குலேத்து ஊளே விட்டுக் கொண்டே அறைக்கு எதிரில் போய்த் தட்டுத் தடுமாறிச் சுருண்டு விழுந்தான்.

மழை ஓய்ந்தது.

மறுநாள் இரவு. வாசலில் கார் ஹாரன் ஒலி கேட்டுப் பாதித் தூக்கத்தில் கூடத்து அறையிலே படுத்துக் கிடந்த விசாலாட்சி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஒன்றரை.

'இன்றைக்கு அந்தக் கூர்க்கா வரவில் லேயோ? வந்த சத்தமே கேட்கவில்லேயே! அவன் வரும்போது நான் தூங்கிவிட்டிருப் பேனு?' — இவ்வாறெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே அவசரமாய்ப் போய்க் கதவைத் திறந்தாள் விசாலாட்சி.

காரை ஷெட்டில் விட்டு விட்டுக் கதவைக் கூடப் பூட்டாமல் ஏதோ சிந்தனேயுடன் தம் வழுக்கைத் தலேயைத் தடவியவாறு உள்ளே வந்தார் டாக்டர் வாசுதேவன்.

''ஏன் இவ்வளவு தாமதம்? மணி ஒன்றரை ஆகிறது'' — விசாலாட்சி கேட்டாள்.

மாடிப் படி ஏறப் போன டாக்டர் தயங்கி நின்று தம் மனேவியை ஏறிட்டுப் பார்த்தார். பிறகு ''முடிந்து போன கேஸ் ஒன்றின் சர்ட் டிஃபிகேட்டில் கையெழுத்துப் போட வேண்டி யிருந்தது. அதனுல் கொஞ்சம் லேட்'' என்ருர் கரகரத்த குரலில்.

விசாலாட்சி, டாக்டரின் மனேவி அல்லவா? அவர் சொன்னதைப் புரிந்துகொண்டாள்.

''இன்றைக்கு நீங்கள் மட்டும் லேட் இல்லே; கூர்க்கா ராம்சிங்கூட லேட்தான். இன்னும் அவன் ரோந்துக்கு வரவில்லே'' மெல்லச் சிரித்தாள் விசாலாட்சி.

டாக்டர் மௌனமாக நின்ருர்.

''அவன் ஏன் வரவில்லேயோ? இப்படி ஒரு நாளும் தாமதமானதில்லேயே.''

சட்டென்று திரும்பிய டாக்டர், ''அவன் ஏன் வரவேண்டும்?'' என்று கேட்டார்.

''என்ன இது கேள்வி? எப்போதும் தவ ருமல் வருகிறவன்; அவன் வரமாட்டானு?''

டாக்டர் வாசுதேவனின் கண்கள் கலங் கின. தெருவைப் பார்த்துக்கொண்டு அமைதி யாக நின்ற அவர் சில விநாடிகளுக்குப் பின் ஏதோ சொல்ல வாயெடுத்தார். ஆனுல் தாம் நினேத்ததைச் சொல்ல விரும்பாதவர் போல் மெல்லத் தலேயசைத்துக்கொண்டு ''அவன் வருவான்!'' என்று முணுமுணுத்த வாறே மாடிப் படிகளில் ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்து ஏறினுர்.

யமனுக்கு ஒரு யமன்!

ராஜேந்திர குமார்



'உலகத்திலேயே சுவாரசியமான பொழுது போக்கு எது?'

ஸர் தர்மராஜன் கல்லூரி ஹாஸ்டலில் எம். என். பிரிவு 'யமன்'களில் ஒருவனை மனோகரனைக் கேட்டால் அவன் தரும் பதில் இதுவாகத்தான் இருக்கும்: ''பிறர் அறியாமல் அவர்களுக்குப் பின்புறம் வால் ஒட்டி அனுப்பி அவமானப்படுத்துவது, அல்லது அழித்தால் அழியாத தேர்தல் மசியால் தூங்கும் போது மீசையோ, நாமமோ போட்டுவிட்டு அழ வைப்பது.''

தேர்தல் சமயத்தில் ஒரே ஆள் இரண்டு முறை வோட்டுப் போடாதிருக்க, கட்டை விரலில் புள்ளி வைக்க ஒருவித கறுப்பு மசி உபயோகப்படுத்துவார்கள். உடம்பில் பட்டால் நாலைந்து நாட்களுக்குப் 'போவேனோ' என்பது போல் உட்கார்ந்திருக்கும். சோப்பு, சீயக்காய், எண்ணெய், எலுமிச்சம் பழம், எதன் பாச்சாவும் அதனிடம் பலிக்காது. அதுவாகப் போனால்தான் உண்டு.

மனோகரனின் மாமாவோ யாரோ போன அறுபத்திரண்டு தேர்தலில் கோயமுத்தூரில் 'எலக்ஷன் ஸூபர்வைஸராக' வேலை செய்ததாகக் கேள்வி. மிச்சம் மீதியிருந்த அந்தப் பொல்லாத கறுப்பு மசிப் புட்டியைத் தூக்கி, தம் வீட்டு மூலையில் போட்டு வைத்திருந்தாராம். போன தரம் லீவில் கோயமுத்தூருக்குப் போன இந்த வால் அந்த மசிப் புட்டியைத் தேடி எடுத்துக் கையோடு கொண்டு வந்திருந்தான். தூங்குகிறவர்களுக்கு மீசையோ, நாமமோ போட்டு விட்டு நாலைந்து நாட்களுக்கு வெளியே தலை காட்டாமல் இருக்கும்படி செய்வதென்பது அவனுக்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்கு.

இப்போது அவன் பார்வை சேதுவின் பக்கம் திரும்பி யிருந்தது.

கவலையுடன் உட்கார்ந்திருந்தான் சேது. சுற்றிலும் நண்பர்கள் புடைசூழ்ந்து ஆறுதலும் தேறுதலும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். காரணம்...

அது ஒரு தலையாய பிரச்னை.

வழக்கம்போல் முடி வெட்டிக் கொள்ளுவதற்காக ஹாஸ்டலுக்கு எதிரேயுள்ள வாடிக்கை சலூன் ஒன்றுக்குப் போயிருந்தான் சேது. வழக்கமாக வெட்டிவிடும் ஆளைக் காணோம். சப்பை மூக்கோடு கூடிய சின்னப் பையன் ஒருவனிடம் போய்த் தலையைக் கொடுத்தான். முதல் நாள் இரவு டெஸ்ட்டுக்குப் படித்துக் கண் விழித்ததனால் வந்த கோளாறினால், அந்தப் 'புது முகம்' மலையாளத்தில் கேட்டதற்கெல்லாம் 'உம்' கொட்டப் போய், தலை ஸம்மர் கிராப் அடித்தாற் போல் ஆயிற்று. பிரஷ் முனை போல் தலை சிலும்பி நிற்க, கண்ணாடியில் கண்டு சீறி விழுந்துவிட்டு ஓடிவந்தான். பலன்?

''போகிறது போ!'' — சுரேஷ் குமார் ஆறுதல் கூறினான். ''இன்னும் கொஞ்ச நாளைக்கு வெளியே போகாமலிரு. எல்லாம் சரியாகி விடும்.''

''என்னமாய்ச் சுருள் சுருளாய் இருந்த கேசம்'' என்பது போன்ற அநுதாபங்களும், ''நாசமாய்ப் போனவன்! ஆக்டோபஸ் உடம்பு மாதிரியில்லெ வழிச்சுட்டான்'' என்ற வர்ணனைகளுமாக மற்ற யமன்கள் அவனை அழ வைத்தனர்.

மாலைக் காட்சி சினிமாப் பார்த்துவிட்டு ''ராஜாவின் பார்வை... ஆஹ்ஹாஹ்ஹா!'' என்று பாதிப் பாட்டும், பாதி 'ஹம்மிங்'குமாக வந்து நுழைந்த மனோகரனுக்குக் கொல்லென்று சிரிப்பு வந்தது. ''யாரப்பா இது 'யூல் ப்ரைனர்'?'' என்று கேட்டு விட்டு விழுந்து விழுந்து சிரித்தான்.

ஏற்கனவே கொதித்துக் கொண்டிருந்த சேதுவுக்குக் கோபம் பீரிட்டுக் கிளம்ப, காச்சு மூச்சென்று கத்திச் சண்டைக்குப் போக, மற்றவர்கள் தடுக்க, மனோகரன் பலமாகச் சிரித்தான்.

பிறகு அமளி...ஒரே அமளி.

நாலைந்து நாட்களாகக் குறும்பு எதுவும் பண்ணாமல் போகவே, கையும் காலும் துறுதுறுவென்றிருந்தது மனோகரனுக்கு. சேது இட்டியதும் சரியான சாக்குக் கிடைத்து விட்டது அவனுக்கு.

அன்று இரவு எல்லோரும் தூங்கிவிட்ட பிறகு மெல்லச் சேதுவின் அறையில் நுழைந்து, கட்டிலில் அடித்துப் போட்டாற் போல் உறங்கும் சேதுவின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு, வேலையைக் கச்சிதமாக முடித்து விட்டான்.

''சேதுவைக் கூப்பிடலாம்.''

நிலைகொள்ளாமல் பின் கை கட்டி உலாவிக் கொண்டிருந்த வார்டன் ருத்ரம்மா நின்று திரும்பினார்.

''என் மேடம்.'' சந்தேகப் பார்வை பார்க்கும் வார்டனைக் கண்டும் அஞ்சாது சொன்னாள் மைதிலி: ''சேதுதான் வரவேணும்!''

''ஏனும்?'' ருத்ரம்மாவின் சந்தேகப் பார்வை மேலும் தெரிந்தது. ''அவன்தான் புகுந்திருப்பான் என்று சந்தேகப்படுகிறாயா?''

'நீங்களும் உங்கள் சந்தேகமும்' என்று மனத்துக்குள் முணுமுணுத்த மைதிலி, ''அப்படியில்லே மேடம். அவருக்குப் போலீஸில் கொஞ்சம் 'இன்ப்ளுயன்ஸ்' உண்டு.



கமிஷனர் ஆபீஸ் குற்ற இலாகாவில் ஆல்பம் வைத்திருப்பார்களே அதைப் பார்த்துவிட்டால் திருடனைக் கண்டுபிடித்து விடலாம். அவனை நேரிலேயே கண்டவளாச்சே நான்!''

கையைப் பிசைந்த வார்டன் அம்மாளுக்கு அதுவும் சரியென்று படவே, ஆண்கள் ஹாஸ்டல் வார்டன் திரு வேடியப்பனுக்கு போன்செய்து, விஷயத்தை விளக்கி, சேதுவை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

முதல் நாள் இரவு யாரோ ஒருவன் கவரேறிக் குதித்துப் பத்துப் பதினைந்து துணிகளையும், ஐந்தாறு டம்பப் பைகளையும் இரண்டொரு கடிகாரங்களையும் திருடிக் கொண்டவன் போகிற போக்கில் மைதிலியின் அறையிலும் நுழைந்திருக்கிறான். விழித்திருந்த மைதிலி சட்டென்று விளக்குப் போட்டு அவன் முகத்தையும் பார்த்துத் 'திருடன் திருடன்' என்று அலறி, அலறி அவனை ஓட ஓட விரட்டி யடித்து விட்டாள்.

இப்போது கல்லூரிக்குப் போகப் புறப்பட்டு வராந்தாவுக்கு வந்த மைதிலியை 'ஹலோ' என்று ஒரு குரல் அழைத்தது. திமிர்ந்தவள் திடுக்கிட்டுப் போனாள். கையும் காலும் இலேசாகத் தந்தியடிக்கலாயின.

''ஹலோ!'' என்றான் அவன் மறுபடியும். ''என்னைத் தெரிகிறதா?''

''ஏன்?... ஏன் தெரியாமல்! உ.... உள்ளே வாங்க'' என்று பூட்டிய கதவைத் திறந்து விட்டாள்.

சேதுவுக்கு வியப்புத் தாங்கவில்லை. பெண்கள் ஹாஸ்டல் பக்கமே வரவிட மாட்டார்கள். இன்றைக்கென்ன அதிசயம்? வார்டனம்மாள் ஹாஸ்டலுக்கு வருமாறு அழைத்தால் மாணவி அறைக்குள்ளேயே அழைக்கிறாளே? அறையில் நுழைந்த மறு விநாடி 'க்ளாக்' என்று அலறினான் சேது. ''மைதிலி! இதென்ன? ஏன் பூட்டிட்டே?''

''கொஞ்சம் பொறு. போலீஸ் வந்து விளக்கும்'' என்றவள் வார்டனுக்குச் செய்தி சொல்லியனுப்பினாள். ''அயோக்கிய ராஸ்கல்! இராத்திரி திருட வந்தது போதாதென்று பகலில் வேறு நல்ல பிள்ளையாக நடித்து உள்ளே வருகிறாயா!''

''மைதிலி! இதென்ன நான்ஸென்ஸ்!'' ஜன்னல் கம்பிகளைப் பற்றிக் கொண்டு பதறினான் அவன். ''என்னைத் தெரியவில்லை? நான்தான் சேது...!''

கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு நிமிர நடந்து வந்தாள் மைதிலி. ''மிஸ்டர்! சேது என்று சொல்லுவதற்கு அவர் குரலை மட்டும் ஃபாலோ பண்ணினால் போதாது. ஆளையும் நேரில் பார்த்திருக்க வேண்டும். சேது அழகாயிருப்பார். அலையலையாய்க் கேசம் அவருக்கு. அது மட்டுமல்ல. இப்படியொரு கம்பளிப் பூச்சி மீசை அவருக்குக் கிடையவே கிடையாது.''

''மிஸ் மைதிலி!''

''ஷட் அப்'' என்று அவன் வாயை அடக்கினாள் மைதிலி.

நொடிக்குள்... ஹாஸ்டலே மைதிலியின் அறைக்கு முன்னால் வந்து கூடிவிட்டது. எல்லோரும் ஏதோ புதியதொரு மிருகத்தை அடைத்து வைத்திருப்பது போல் அச்சத்துடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். சேது சங்கடத்துடன் நெளிந்தான்; உட்கார்ந்தான்; எழுந்தான்... நடந்தான்... தவித்தான்.

''தள்ளு தள்ளு...'' என்று கும்பலைப் பிரித்துப் பிரிகட்டியவாறு ருக்ரம்மா புகுந்து புறப்பட்டு வந்தாள் போலீசுடன்.

''மறுபடியும் எச்சரிக்கிறேன், இன்ஸ்பெக்டர்!'' சேது அதட்டினான். ''நான் ஒரு பெரிய இடத்துப் பையன். அவமானப் படுத்தினீர்களோ வழக்கு போட்டுவிடுவேன். நான் சேது. கல்லூரி மாணவன்.''

''பொய்!'' மைதிலி கத்தினாள் காட்டத்துடன். ''நம்பாதீர்கள் ஸார். அந்தச் சேதுவை எனக்குத் தெரியும். பால் வடியும் முகம் அவருக்கு. இப்படி யொரு கம்பளிப் பூச்சி மீசை அவருக்குக் கிடையவே கிடையாது'' என்று அவள் சொன்னதை ஊர்ஜிதம் செய்தது வார்டன் ருக்ரம்மாவின் 'கரெக்ட்' என்ற குரல்.

''வெறும் முட்டாள்தனம்! இந்த மீசை உருவாகி அரை மணி நேரம்கூட ஆகல்லே. யூ நோ தெட்?''

எல்லோரும் நம்பிக்கையின்றிச் சிரிக்கவே, அவன் மீசையைப் பிய்த்துக் காட்ட முயன்றது பலிக்கவில்லை. எப்படியோ எக்கச்சக்கமாக ஒட்டிக் கொண்டிருந்தது அந்தப் பொய் மீசை. 'இங்க்' மீசைக் கறுப்பை மறைக்க வைத்துக் கொண்ட ஒட்டு மீசை தான் அது.

''நல்ல கதை... நல்ல நடிப்பு! ஆனால் பிரயோசனமில்லே.'' இன்ஸ்பெக்டர் கையை விரித்தார். ''ராத்திரி நீயே திருட வந்திருக்கலாமல்லவா?''

''மறுபடியும் மறுபடியும் அதே கதை தானா?'' சேது அலறினான். ''நான் ஏன் ஸார் திருடணும்? என் அண்ணனைத்தயிடம் சொன்னால் இதுமாதிரி பதினாறு ஹாஸ்டல் கட்டித் தர்மத்துக்குத் தருவாரே!''

''ஸாரி, பாய்!'' எழுந்தார் இன்ஸ்பெக்டர். ''ஸ்டேஷனுக்கு வா! அங்கேயே ருசுப் படுத்திக்கலாம். கமான்'' என்றவர், அவன் அலற. அலற இழுத்துப் போனார்.


விழித்தவாறு நின்றிருந்த மைதிலி, 'திருட்டு ராஸ்கல்..... மடையன்.....'என்று திட்டியவாறு ருக்ரம்மா போய்ச் சேர்ந்ததும் சங்கடத்துடன் நெளிந்து, புத்தக மூட்டையுடன் வெளியே பாய்ந்தாள்.

நிலைகொள்ளாத மனத்துடன், கல்லூரி வராந்தாவில் விறுவிறுவென்று நடந்து கொண்டிருந்த மைதிலி, ''மிஸ் மைதிலி'' என்ற குரல் கேட்டு விறுக்கென்று திரும்பிப் பார்த்தாள்.

''மிஸ் மைதிலி!'' சுரேஷ்குமார் வந்தான் அவசரமாக. ''சேது எங்கே? உங்க ஹாஸ்டலுக்குப் போனவன் திரும்பவில்லையே! 'மத்தியானத்துக்கு மேலே க்ளாஸ் இல்லே. மாட்னிக்கு புக் பண்ணு' என்றான். டிக்கெட் வாங்கியாயிற்று. ஆளைக் காணுமே!''

''அப்.... அப்....'' இணறினாள் மைதிலி. ''அப்போ அவர் சேதுவேதானா?''


சுளுக்குகள்
வீக்கங்கள்
பிடிப்பு மற்றும்
தசை வலிகள்
IODEX
METHYL SALICYL
தேய்த்து - வலியைப்போக்கி இதமளியுங்கள்
அயொடெக்ஸ்®
IODEX
தேகாரோக்கியத்திற்கு மருந்து தயாரிப்பில் முன்னோடிகள்
ஸ்மித் கிளைன் & பிரெஞ்சு (இந்தியா) லிட்., பம்பாய் - 1
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் இங்கிலாந்தில் இணைப்பு)



"மடப் பயலே! தினம் தினம் நாலணா வாங்கிண்டு இன்னும் தாங்கிறே! எங்கப்பா இருக்கிறபோது எங்களுக்கு ஒரு காலணாகூட தந்தது கிடையாது!"

"அதுக்கு என் மேல் ஏன் ஆத்திரப்படறீங்க? உங்கப்பா மேலே ஆத்திரப்படுங்க!"

"சேதுவேதானாவது? இது என்ன கேள்வி?" என்றவன் சிரித்தான். "நீங்களும் அவன் மேக்கப்பைப் பார்த்து ஏமாந்து போனீங்களா?"

"ஏமாறுகிறதாவது?" மைதிலி பதறினாள். "அவருக்கு ஏது மீசை?"

"அதுவா?" விளக்கினான் சுரேஷ். "ஏற்கனவே சலூன்காரன் செய்த காரியத்தால் வெளியே தலைகாட்ட முடியாமல் இருந்த அவனுக்கு மீசை போட்டு, முகம் காட்டவே முடியாமல் பண்ணிவிட்டான் மனோகர் என்கிற பையன். கோணல் மாணலாகக் கோடு இழுத்து இருந்ததைப் பார்த்துப் பரிதாபப் பட்டு நான்தான் அவனுக்குப் பொய் மீசையை ஒட்டி அனுப்பினேன்."

கண்ணைக் கசக்கிக் கொண்டு மைதிலி அழ ஆரம்பிக்கவே பதறிப் போனான் சுரேஷ். "என்ன என்ன? ஏன்?"

விக்கல் காலும், விம்மல் காலும் விஷயம் பாதியுமாக அவள் விஷயத்தை விவரித்து முடித்ததும், மேலும் பதறி ஓடினான் சுரேஷ். அடுத்த விநாடி......

யமன்கள் பட்டாளமே கிளம்பி விட்டது. விடு விடென்று நடை போட்டவர்களை, "ஸ்டாப்" என்று நிறுத்தினான் சுரேஷ் குமார். "ஒரு பிரச்னையிருக்கே! மெட்ராஸில் ஆயிரத்தெட்டுப் போலீஸ் ஸ்டேஷன் இருக்கும். இவனைக் கொண்டு போன இடம் எதுவோ?"

"ஐடியா!" — சந்துரு சொன்னான். "ட்ரிப்ளிகேன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் பண்ணி மிஸ்டர் மணிக்கு விஷயத்தைச் சொல்லிவிட்டு நேரிலேயும் போகலாமே! அவர் உதவி செய்வார்!"

"குட்!" என்ற பட்டாளம் டெலிபோன் கூண்டு நோக்கிப் பாய்ந்தது.

டெலிபோனில் பேசிவிட்டு நடந்தவர்கள் பிறகு மவுண்ட்ரோட்டுக்குப் போகும் பஸ் நிற்குமிடத்தில் சளசளவென்று அரட்டையடித்துக் கொண்டு நின்றார்கள். முதலில் சரியாகக் கவனிக்கவில்லை அவனை. கவனித்ததும், "அடேடே!" என்று கோரஸில் வியந்தார்கள். "சேதுவா?"

வந்து நின்ற பஸ்ஸிலிருந்து இறங்கியவன் தன்னைச் சுற்றி நின்று, கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கூச்சலிடுபவர்களை 'உஸ்' என்று அடக்கினான். "ஒவ்வொருத்தரா கேளுங்க."

"ஏண்டா, டேய்! பெரிய ஆளுடா அந்த இன்ஸ்பெக்டர் மணி. இப்பத்தான் போனில் சொல்லிட்டு வர்றோம். அதுக்குள்ளே உன்னைக் கொண்டு போன ஸ்டேஷனையும் கண்டுபிடித்து, வெளியேயும் அனுப்பி விட்டாரே! ஆச்சரியமாயிருக்கே!" என்று வியந்தான் சுரேஷ்குமார்.

கொஞ்ச நேரம் திருதிருவென்று விழித்த அந்த ஆள், "ஹ்ஹோ! இதென்ன பிரமாதம்.....ஹோ!" என்று கூறி மெதுவாக நழுவ ஆரம்பித்தான்.

"டேய், டேய்!" தாவி அவன் காலரைப் பிடித்து நிறுத்தினான் சுரேஷ்குமார். "டிக்கெட் புக் பண்ணச் சொல்லிட்டு நீ போலீஸ் ஸ்டேஷனிலே உட்கார்ந்துட்டே ஜம்முனு. வாங்கினது வீணாகப் போகுமே? என்னமாய்த் துடிச்சுப் போயிட்டோம், தெரியுமா? சரி சரி அதை அப்புறமா பேசிக்கலாம். வா....வா....நேரமாகிறது." அவனைத் தள்ளிக் கொண்டு போய், மவுண்ட்ரோடு செல்லும் பஸ்ஸில் தொத்திக் கொண்டு விட்டார்கள். தியேட்டரில் நுழையும் போதும் சரி, படம் பார்க்கும் போதும் சரி. "என்ன வந்தது இந்தச் சேதுவுக்கு? ஏன் பேசவே மாட்டேங்கிறான்?" என்றவாறு இருந்தவர்கள், கடைசியில், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் வந்ததில் மனசு சரியில்லை போயிருக்கிறது என்று சும்மாயிருந்துவிட்டார்கள் அநுதாபத்துடன்.

"ஏண்டி, ஏய்!" பாமா அழைத்தாள் மைதிலியை. "என்னடி வந்தது உனக்குக் கேடு? ஏன் என்னமோ மாதிரி 'ஙே' என்று போகிறாய்? டிபன் வேண்டாமானால் காப்பியாவது குடியேன்."

"சேது சமாசாரம் என்னவாச்சோ?" என்று கவலைப்பட்டாள் மைதிலி. "பார்த்து வரப்போன அந்த சுரேஷ்குமாரையும் காணவில்லை. நான் பாவி! அநியாயமா அவரை..."

"அடி ஏண்டிக் கேவிக் கேவி அழறே! அழாதேடி, இவளே!" என்று அநுதாபப்பட்ட பாமா, டிபனைத் தின்று கை கழுவிவிட்டுக் காப்பியை எடுத்து ருசித்தாள். "சே! ஆறிப் போன கஞ்சித் தண்ணி மாதிரி.... நான்சென்ஸ்" என்று ஜன்னல் வழியாக வீசி எறிந்தாள். வெளியேயிருந்து, "ஆ...ஸ்..." என்ற அலறல் வரவே, 'பே' என்று அலறி மைதிலியைக் கட்டிக் கொண்டு விட்டாள். பிறகு மெள்ளத் திருட்டுத்தனமாக ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார்கள், "சேது!" என்று அலறி விட்டார்கள்.

கீழே நின்றிருந்த சேது தலையிலும், முகத்திலும் காப்பி வழிய வழிய நிமிர்ந்து பார்த்து, "காலையில் பண்ணியது போதாது என்று இது வேறா? இன்னும் எத்தனை மாதிரி

அவமானப்படுத்தக் காத்திருக்கிங்க ?'' என்ருன். சீ றி ய வ னை, ஹாஸ்டலுக்குள்ளே அழைத்து, அவன் பிடிவாதமாக மறுத்தும் கேளாமல் அறையில் இழுத்துப் போய் அமர்த்தினார்கள். வார்டன் அறைக்கு ஓடி, டெலிபோனை எடுத்து ஆண்கள் ஹாஸ்டலுக்கு நம்பரைச் சுழற்றலானார்கள்.

வார்டன் குத்ரம்மா வெளியே போயிருந்ததும் வசதியாயிருந்தது.

''ஹலோ சுரேஷ் குமார்!'' மைதிலி பேசினான்: ''சேது இங்கேயிருக்கார். காப்பி பட்டு டிரஸ் கெட்டுப் போச்சு. வேறே டிரஸ்ஸோடே உடனே வாங்க'' என்ருன்.

சுரேஷ்குமாரின் பதிலைக் கேட்டுத் திடுக்கிட்டவளாய், ''என்னது? அங்கேயும் ஒரு சேது இருக்கிறாரா? இவர்தான் நிஜ சேது. அவன்தான் 'டூப்ளிகேட்' போலிருக்கு. பிடிச்சு வையுங்க. நான் போய்ச் சேதுவுக்குச் சொல்றேன்'' என்ருன் மைதிலி. 'டக்'கென்று போனை வைத்துவிட்டு வெல வெலத்துப் போய் நிற்கும் பாமாவையும் இழுத்துக் கொண்டு அறைக்கு ஓடிப் போனவள் திடுக்கிட்டுப் பின்வாங்கினாள்.

சேதுவை அமர்த்தி விட்டுப் போன நாற்காலி வெறுமையாயிருந்து, கேலியாகச் சிரித்தது.

ஆண்கள் ஹாஸ்டலில்....

''இங்கேயிருந்த அந்த டூப்ளிகேட் சேது எங்கே?'' என்று பதறி சுரேஷ் கேட்டதும் முதலில் விழித்த பயமன்கள், அவன் விவரித்ததும், 'ஒரு திருடனுடனு இவ்வளவு நேரம் கொஞ்சிக் கொண்டிருந்தோம்' என்று எண்ணி வெல வெலத்துப் போனார்கள். '' இப்பத்தானே எங்கேயோ வெளியே போனான்'' என்று பாய்ந்தார்கள்.

''அதோ!'' பூஞ்செடிகளுக்குப் பின்னால் பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டிருந்தவனைப் பிடித்து 'அடி, உதை கொல்லு' என்று அடித்தார்கள்.

'' மடையன்ஸ் !'' சேது சீறினான். ''ஏன்டா, என்னைப் பிடிச்சு அடிக்கிறீங்க?''

''டேய்! டேய்! நிறுத்தங்கடா!'' தலையில் வழியும் காப்பியால் அடையாளம் கண்டு கொண்ட சுரேஷ் சொன்னான்: ''இவன் நிஜ சேதுதான். அடே, சேது. உன்னுட்டமே ஒரு திருட்டுப் பயலே நீதான்னு நினைச்சு இவ்வளவு நேரம் கூடவே கூட்டிக் கொண்டு சுற்றினோம்டா!''

''அப்படியா? எங்கே அந்த ராஸ்கல்?''

பாய்ந்து ஹாஸ்டலின் மூலை முடுக்குகளை யெல்லாம் அலச ஆரம்பித்தார்கள். வார்டன் வேடியப்பன் அறையிலிருந்து அவர் கத்தும் சத்தம் கேட்டு நுழைந்தவர்கள் குதூகலத்துடன், ' ஆஹா !' என்று பூரித்தார்கள்.

சேது என்று நினைத்து அந்த ஆளைத் திட்டிக் கொண்டிருந்தார் அவர். அவரது மேஜையின் மேல் சில கடிகாரங்களும், பல மணிபர்ஸ்களும், சில பல துணிகளுமிருந்தன. பக்கத்தில் திருடனைப் பிடித்து வந்த பெருமை மூக்கு நுனியில் சுடர்விட நின்றிருந்த 'அல்சேஷன்' இன்னெரு சேதுவைக் கண்டதும், 'பே' என்று அலறினான். ''ஸார், இன்னெரு சேது ஸார்!''

''யார்...... யார்.....?'' இரைந்தார் வேடியப்பன் கேட்டார். ''நிஜ சேது யார்?''

இருவரும், ''நான்தான், நான்தான்'' என்று சாதிக்க, அவருக்கு மூச்சுத் திணற, மற்றவர்கள் திகைத்தனர்.

அப்போதுதான் உள்ளே வந்த மைதிலியும் பாமாவும், ''ஸார், ஸார்! காப்பியிலே குளிச்சிருக்காரே, அவர்தான் ஸார் சேது'' என்று கூறியும் நிரூபிக்க முடியாமல் போன போது இயற்கையே சேதுவைக் காப்பாற்றிற்று. காப்பியிலே ஊறிப் போன பொய் மீசை 'சொத்'தென்று கீழே விழுந்து, உண்மை சேதுவை அடையாளம் காட்டிற்று. அடுத்துக் கொஞ்ச நேர களேபரத்தின் பின்னே, போலீஸ் வந்து மீசைக்காரத் திருடனை இழுத்துப் போகும் போது.....

எல்லோரும் கொல்லென்று விழுந்து விழுந்து சிரித்தார்கள். சிரிக்கவே தெரியாத வேடியப்பனும், சிடுமூஞ்சி 'அல்சேஷ'னும்கூட விழுந்து எழுந்து சிரித்தார்கள்.

கலாட்டா சமயம் பார்த்துத் திருடனின் பின்னால் மனோகரன் ஒட்டிவிட்ட பேப்பர் வால் காற்றில் அவனது நடைக்கேற்பத் துள்ளித் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது.

தேவை நான்கு மை

ஒரு சமயம் மதுரையில் நடந்த நிகழ்ச்சி யொன்றில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த கலைவாணர் என்.எஸ்.கே.யும் அமரர் கல்கியும் அருகருகே அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தனர். அத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் அவர்களது பேச்சு நின்ற சமயம் பார்த்து விரைந்து வந்தார். இருவருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டுத் தம்மை அறிமுகம் செய்து கொண்டார். கல்கி அவர்களை நோக்கி, தாம் ஒரு புத்தகப் புழுவென்றும் அதன் பயனாய்க் கதை எழுதுவதற்கு மிகுந்த ஆர்வமிருப்பதாயும் கூறி, அதற்கு என்ன அத்தியாவசியத் தேவையென அடக்கத்துடன் கேட்டார்.



''நீங்க சிறந்தகதாசிரியராக 'நான்கு மை' தேவை'' என்றார் கல்கி.

''என்னென்ன 'கலர்' மை?'' என்று கேலியாகக் கேட்ட என். எஸ். கே.யிடம், ''நீங்கள் நினைப்பது போல் இது கலர் மை அல்ல'' என்று கூறிவிட்டு, கீழ்க்கண்டவாறு விளக்கம் தந்தார்: ''ஒன்று: பேனாவுக்குப் போடுகிற 'மை', இரண்டு: தனிமை; மூன்று: திறமை; நான்கு பொறுமை.''

''ரத்தினச் சுருக்கமாய்ச் சொன்ன உங்க யோசனை மிக அருமை'' என்றார் கலைவாணர்,

— வை. செயராமன்



- ❊ வேதனை தருகிறது!
- ❊ பதிலுக்குப் பதில்
- ❊ அற்புதமான கதை
- ❊ துயரம் தீருமா!

ஜூலை 17-7-66 தேதியிட்ட வட்ட மேஜைப் பகுதியில் தமிழக போலீஸ் அமைச்சர் திரு கக்கன் அவர்கள் திண்டுக் கல்லில் நிதி வசூல் செய்த முறையைப் பற்றி, கற்பனையாக, இல்லாததைப் பொறுப்பில்லாத முறையில் ஸ்ரீ நித்தியானந்தம் என்பவர் எழுதியிருக்கிறார். ஒரு போலீஸ் காரர்கூட உடன் இல்லையென்றும், போலீஸ் ஜீப்போ, சர்க்கார் சம்பந்தப்பட்ட வேறு வாகனங்களோகூட வரவில்லை என்பதும் எல்லோருக்கும் தெரியும். அரசியல் வேறு பாடு காரணமாகச் சில நபர்கள் நடந்ததைத் திரித்துக் கூறுவது வேதனை தரக் கூடிய நிகழ்ச்சியாகும்.

திண்டுக்கல்
17-7-66 ரங்கசாமிரெட்டியார்எம்.எல்.ஏ

"விடாக்கண்டர்" அலைந்தலுத்து
விடுத்ததோர் கவிதனுக்குக்
"கொடாக்கண்டர்" கொடுத்த பதில்
கவியெனும் கனலைக் கண்டேன்
"ஐயா எழுத்தாளரே" என்றுரைகூவி
விடுத்த சொல்லில்
மெய்யாகவே புளகி மெய்குலுங்கவே
சிரித்தேன்.
ஐயகோ! எப்படித்தான் இயற்றினரோ
கவிதை தன்னை!
செப்பினேன் எந்தனுள்ளம் சோர்விலா
வகையைச் செய்ய
எப்பாடு பட்டேனும் இத்தகைய
கவிகள் சேர்த்துக்
தப்பாது பிரசுரம் செய்து மகிழ்விப்பீர்
கல்கியாரே!

டார்ஜிலிங். 6-7-66 கே. பி. கே.

'கலிபோர்னியா கண்ட குத்து விளக்'கைப் படித்து மகிழ்ந்தேன். 'அற்புதமான சிறு கதை' என்று சொன்னாலே ஏதோ குறைத்துச் சொல்வதாகத்தான் படுகிறது. நம் ஊர் ஆசாமிகள் வடக்கே டெல்லியில் போய்க் கால் வைத்தவுடனேயே இங்கே கற்றுக் கொண்ட அரைகுறை இந்தியில், "க்யா நாம்?", "கித்னே பைஸே?" என்று தாங்கள் ஏமாற்றப்படாமலிருக்க வேண்டுமே என்பதற்காக அலட்டிக் கொள்வதைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்?... எனவே, அந்த நார்மன் மெயிலர் தமிழ் தெரிந்திருந்தும், பட்டுவின் திருவிளையாடலை நேருக்கு நேர் பார்த்துப் புரிந்து கொண்டிருந்தும் ஒன்றும் புரியாதவன் போல நின்று கொண்டிருந்தான் என்பதிலிருந்து 'அமெரிக்கர்களின் பண்பாட்டை'யும் ஆசிரியை எவ்வளவு அழகாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்' என்ற வியப்பே மேலிடுகிறது.

சென்னை, 18-7-66 எஸ். வரதராஜன்


நமது காங்கிரஸ் சர்க்கார், ஸ்ரீவில்லிப் புத்தூர் தாலுகா, செட்டியார்பட்டி, தளவாய்புரம் ஆகிய கிராமங்களில் கூட்டுறவு ஸ்டோர்களில் விற்பனை செய்யும் ரவையின் மாதிரி இத்துடன் கொஞ்சம் அனுப்பி உள்ளேன். அரிசி வாங்க வேண்டுமென்றால், கண்டிப்பாகக் கால்நடைகளுக்குக் கூடப் பயன்படாத இந்த ரவையையும் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகின்றனர். இரண்டு வருடங்களாக மழை பொய்த்ததின் விளைவாக, இலை தழைகளைத் தின்று வாழ வேண்டிய நிலையில் உள்ள எங்கள் ஊர் விவசாயப் பெருங்குடி மக்கள் வேறு வழியின்றி இந்த ரவையை வாங்கிச் சாப்பிட்டு, வாந்திபேதிக்கு இலக்காகி வருகின்றனர். ஸ்டோர்காரர்களைக் கேட்டால் "நாங்கள் என்ன செய்வோம்? சர்க்கார் தருவதைத் தானே போட முடியும்" என்று சொல்லுகின்றனர். மக்களோ, 'மேலோர்கள் வெஞ்சிறையில் வாடியதும், நூலோர்கள் செக்கிழுத்து நொந்ததுவும் நம்மை இந்த நிலையில் வாழ வைக்கத்தானோ' என்று உளம் விம்முகின்றனர். இந்த நிலையில் சிறு சேமிப்புக்குப் பணம் திரட்ட அதிகாரிகளின் மிரட்டல் சொல்லும் தரமல்ல. என்றுதான் இந்தத் துயரம் தீருமோ?

செட்டியார்பட்டி
21-7-66 "ஊழியன்"

சுதந்திரக் கட்சி பணக்காரர்கள் கட்சி என்று காங்கிரஸ்காரர்கள் தவறான பிரசாரம் செய்து வருகிறார்கள். உண்மையில் காங்கிரஸ் கட்சியில்தான் பணக்காரர்கள் அடைக்கலம் புகுந்துள்ளார்கள். உ. பி. யில் மிகப் பெரும் பணக்காரரும், சுமார் ஐம்பது ஆலைகளுக்குச் சொந்தக்காரருமான ஒருவர் சென்ற தேர்தலில் சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு டாண்டேகரை எதிர்த்துப் போட்டியிட்டார். தேர்தலில் பல ஊழல்களை நடத்தி இவர் வெற்றி பெற்றதாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு மூலம் அம்பலமானதில், பின்னால் திரு டாண்டேகரே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அப்படிப்பட்டவருக்குக் காங்கிரஸ் ஆட்சி 31 லட்சம் ரூபாய் வருமான வரி தள்ளுபடி செய்துள்ளது. இந்த ஓர் உதாரணமே போதும், காங்கிரஸின் முகமூடியைக் கிழித்தெறிய.


பம்பாய்
8-6-66 பி.எஸ். சுப்பிரமணியன்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press. Kilpauk. Madras-10



பரவசமூட்டும்
பரிமளமுள்ள பவுடர்

பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்



இந்த ஒப்பற்ற பவுடர் உங்களை நாள்முழுவதும் நறுமணத்துடனும் இன்ப உணர்ச்சியுடனும் வைக்கும்

வறுத்தெடுக்கும் வேனலிலும்கூட வசந்த காலையின் இனிய புதுமையையும் மாலைத் தென்றலின் கிளுகிளுக்கும் குளுமையையும், உடலைத் தழுவி நிற்கும் நறுமணத்தையும் தரக்கூடிய அலாதி பவுடர் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்! வியர்வையின் அருவருப்பிலிருந்து அது உங்களுக்கு விடுதலையளிக்கும். அதை உடல் மீது தாராளமாகத் தூவிக் கொண்டால் பொங்கும் ஆனந்த லாகிரியில் பூரித்துப் போவீர்கள். நீங்கள் மட்டுமல்ல, உங்கள் வீட்டில் உள்ள எல்லோரும் தான்!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

JWT P 4590(R)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon